(ஆதி இந்தியக் கிறிஸ்தவம்
என்ற சைவ வைணவம்)

இந்துத்துவாவிலிருந்து விடுதலை !



M. CHRISTOPHER

பிரிவு : I

சைவ வைணவ மதங்களின்
தோற்றமும் வளர்ச்சியும்

அதிகாரம் 1

திராவிடர்களின் சைவ வைணவ மதங்கள்

சைவ வைணவ மதங்கள் வரலாற்றுச் சிறப்புடைய திராவிட மக்களின் சமயங்களாகும். திராவிட நாகரிகம் உலக நாகரிகங்களில் மிகவும் பழமையான நாகரிகமாக இன்று கருதப்படுகிறது. வரலாற்று ஆசிரியர்கள் உலக நாகரிகங்களைக் குறித்துக் கூறுகையில் சுமேரிய நாகரிகம் உலகின் முதல் நாகரிகம் (கிமு 3500) என்றும், எகிப்தின் நைல் நதிக்கரை நாகரிகம் இரண்டாம் நாகரிகம்(கிமு 3000) என்றும், சிந்துவெளி நாகரிகம் மூன்றாம் நாகரிகம்(கிமு2500) என்றும் கூறிவந்தார்கள்.

சமீபகால ஆராய்ச்சிகள் உலகின் முதல் நாகரிகம் இந்தியாவில், அதிலும் தமிழகத்தில் தோன்றியது என்று விளக்குகின்றன. இந்தியாவை ஒட்டின கடலின் அடியில் மூழ்கிக் கிடக்கும் பழங்காலப் பட்டணங் களைக் குறித்த பல தகவல்கள் வெளிவந்துள்ளன. விவிலியத்தின் அடிப்படையில் பார்க்கும் போது ஆதி மனிதர்களின் இருப்பிடமான ஏதேன் தோட்டம் சினேயாருக்குக் கிழக்கே அதாவது இந்தியாவை ஒட்டின பகுதிகளிலோ கடலின் அடியில் மூழ்கினதாகக் கூறப்படும் லெமூரியாக் கண்டத்திலோ தான் இருந்திருக்க வேண்டும் என்று சிந்திக்க இடம் உண்டு.

திராவிடர்கள்

உலகின் முதல் சமுதாயம் கிழக்கிலிருந்து மேற்கே சினேயாருக்குச் சென்றதாகவும் அவர்கள் ஒரே பாஷை பேசியிருந்ததாகவும் பரிசுத்த

வேதாகமத்தில் பார்க்கிறோம். முதல் மனிதச் சமுதாயம் பேசிவந்த ஒரே பாஷை தமிழாகத்தான் இருந்திருக்க வேண்டும் என்றும் ஆராய்ச்சியாளர்கள் கருதுகின்றனர். தமிழ்மொழி பேசிவந்த மக்கள் தமிழர் என்று அழைக்கப்பட்டதாகவும், தமிழர் என்ற சொல் நாளடைவில் த்ரமிழர் திரவிடர் என்றும் பின்பு திராவிடர் என்றும் மாற்றமடைந்திருப்பதாகவும் கருதப்படுகிறது. மிகச்சிறந்ததாய்க் கருதப்பட்ட திராவிட நாகரிகம் அனேக நூற்றாண்டுகளாகப் புதைக்கப்பட்டு அதன் மேன்மைகள் வெளிக் கொண்டு வரப்படாமல் இருந்தது.

சிந்துவெளி நாகரிகம்

சிறப்பான சிந்துவெளி

இதுவரை நடைபெற்ற அகழ்வாராய்ச்சிகளின் அடிப்படையில் உலகின் நாகரிகங்களில் மிகப்பழமையான ஒன்று சிந்துவெளி நாகரிகமென்று கருதப்படுகிறது.

1920ல் ஹரப்பா, மொகஞ்சாதாரோ என்னும் இடங்களில் மேற் கொள்ளப்பட்ட அகழ்வாராய்ச்சிகள் வழியாய் திராவிடர்களின் சிறப் பான பழங்கால நாகரிகத்தின் பல அம்சங்கள் வெளிக்கொண்டு வரப் பட்டுள்ளன. திராவிடர்கள் ஆதிநாட்களில் கற்களைக் கருவிகளாகக் கொண் டிருந்தார்கள். களிமண்ணைக் கொண்டு வீடுகள் அமைத்திருந்தார்கள். புல்லைக் கொண்டு கூரை வேய்ந்தார்கள். பிற்காலங்களில் சித்திர எழுத்துக்களைப் பயன்படுத்தினார்கள். செங்கற்களைப் பயன்படுத்தியி ருந்தார்கள். நிலத்தை உழுது பயிர் செய்தார்கள். வாணிபத்தை வளர்த் திருந்தார்கள். சிறந்த பட்டணங்களை அமைத்தார்கள். சிறப்பான சமூக வாழ்க்கையில் ஈடுபட்டிருந்தார்கள். மிக மேன்மையான வாழ்க்கை வாழ்ந்திருந்தார்கள். இவைகளிலிருந்து திராவிடர்களின் சிந்துவெளி நாகரிகம் மிகப்பழமையானதென்றும் மிகச் சிறப்பானதென்றும் ஏற்றுக் கொள்ளப்படுகிறது.

திராவிடர்களின் நினைவுக்கல் வழிபாடு

சிந்துவெளி நாகரிகத்தில் திராவிட மக்கள் நினைவுக்கல் வழி பாட்டைச் செய்து வந்தார்கள் என்று காணப்படுகிறது. ஹரப்பா,

மொஹஞ்சாதாரோ ஆகிய இடங்களில் மேற்கொள்ளப்பட்ட ஆய்வுகளில் அனேக நினைவுக்கற்கள் கண்டெடுக்கப்பட்டுள்ளன. இவைகள் பிற்காலங்களில் 'சிவலிங்கம்' என்று அழைக்கப்பட்டன.

சிறப்புகள் அழிப்பு

சிறப்பான சிந்துவெளி நாகரிகம் திராவிடர்களின் நாகரிகம் ஆகும். திராவிடமக்கள் இந்தியா முழுவதிலும் அதை ஒட்டிய பிற பகுதிகளிலும் வாழ்ந்து வந்தார்கள் என்று காணப்படுகிறது. கிபி முதலாம் நூற்றாண்டில் இந்தியாவுக்கு வந்த தோமா அப்போஸ்தலனின் கடவுள் கொள்கைகளைத் திராவிடமக்கள் ஏற்றுக் கொண்டதின் மூலம் சைவ வைணவ சமயங்கள் உருவாயிற்று. ஆனால் திராவிடர்களின் சிறப்புகள் கிமு 6 ஆம் நூற்றாண்டுக்குப் பின் இந்தியாவில் வந்தேறிய அன்னியர்களால் அழிக்கப்பட்டன.

அதிகாரம் 2

அன்னியர்கள் இந்தியாவுக்கு

இந்தியாவில் எல்லா இடங்களிலும் திராவிடர்கள் வாழ்ந்து வந்தார்கள். கி.மு 6-ம் நூற்றாண்டிலிருந்து அன்னிய தேசத்தார் இந்தியாவில் நுழைய ஆரம்பித்தார்கள். அதில் முக்கியமானவர்கள் பெர்சியர்கள், கிரேக்கர்கள், ரோமர்கள், சாகர்கள், கூஷாணர்கள், கூணர்கள் ஆகியோர் ஆகும்.

பெர்சியர்கள்

கி.மு 606 முதல் யூதர்கள் பாபிலோனியர்களால் சிறைபிடிக்கப் பட்டார்கள். பாபிலோனிய ஆட்சிக்குப் பின் பெர்சிய மன்னனான கோரேஸ் என்பவன் கி.மு 539 -ல் மேதிய பெர்சிய ஆட்சியை ஸ்தாபித்தான். கி.மு 530-ல் கோரேஸ் இந்தியாவோடு போருக்கு வந்து தோல்வியடைந்தான். ஆனால் தரியூ மன்னன் கி.மு 518-ல் இந்தியாவின் சில பகுதிகளைப் பிடித்துக் கொண்டான். அகாஸ்வேருவின் நாட்களில் அவன் ராஜ்யத்தின் எல்லை இந்திய தேச மட்டும் இருந்தது.

அலெக்ஸாண்டர் ஹாரிஸ் கருத்து

பெர்சியர்களில் ஒரு பிரிவினரைக் குறித்து அலெக்ஸாண்டர் ஹாரிஸ் என்பவர் 'The development of civilization and religion in India and its influence of the world society' என்ற நூலில் குறிப்பிட்டுள்ள சில கருத்துக்கள் இங்குத் தரப்படுகின்றன.

யோசுவாவின் நாட்களில்

யோசுவா கானானியரோடு யுத்தம் பண்ணும் போது அங்கிருந்து பல ஜாதி மக்கள் துரத்தி விடப்பட்டார்கள். அவ்வாறு துரத்தி விடப் பட்ட 'ஏத்தியர்கள்', பெர்சியாவில் வசித்திருந்தார்கள். முன்பு அவர்கள் இந்திரன்,. வருணன், மித்திரன் ஆகிய தேவர்களை வழிப்பட்டிருந் தார்கள். பின்பு அவர்களும் பெர்சிய மக்களோடு ஒருங்கிணைந்து தீ வழி பாட்டைக் கடைப்பிடித்துக் கொண்டார்கள். அவர்கள் பெர்சியர்களுடன் சேர்ந்து இந்தியாவோடு போர் தொடுத்து இந்தியாவுக்குள் நுழைந்தார்கள்.

பெர்சியர்கள் வருகையால் ஏற்பட்ட விளைவுகள்

பெர்சியர்களின் இந்திய வருகையால் இந்தியாவில் பெரும் விளைவுகள் ஏற்படலாயின. அவர்களின் வருகையால் மேற்கு ஆசியாவிலுள்ள தேசங்களுக்கு இந்தியாவில் நுழைவதற்கான விரிவான பாதை அமைந்து விட்டது. அனேக அண்டை நாட்டார் வடமேற்கு இந்தியாவில் பிரவேசிக்கலாயினர். வந்தேறிய அன்னியரில் சிலர் சிற்றரசுகளை அமைத்தார்கள். வேறு சிலர் திராவிட சிற்றரசர்களின் அவைகளில் அமர்த்தப்பட்டார்கள்.

தேச துரோகச் செயல்கள்

இவ்வாறு அமர்த்தப்பட்ட பலர் இந்தியாவில் தேச விரோதச் செயல்களில் ஈடுபட்டு நாட்டுக்குத் தீங்கு விளைவித்தார்கள். மௌரிய வம்சத்தின் கடைசி மன்னன் திராவிட அரசனான பிருகத்ருதா என்பவனாகும். அவன் புஷ்ய மித்திரன் என்ற ஒரு அன்னியனை (மேற் கூறிய இனத்தவன்) தன் சேனாதிபதியாக வைத்திருந்தான். அவன் பிரகத்ருதாவைக் கொன்று சுங்க ஆட்சியை ஸ்தாபித்தான் (கி.மு 187-76).

கிரேக்கர்கள் இந்தியாவுக்கு வருகை

பாபிலோனிய மன்னனான நேபுகாத்நேச்சார் கண்ட சிலைத் தரிசனத்தின் படி பெர்சியர்களுக்குப் பின் கிரேக்கர்கள் உலக சாம்ராஜ்யத்தை அமைத்துக் கொண்டார்கள். மகா அலெக்ஸாண்டர்

கி.மு. 336-ல் தனது வெற்றிப் பயணத்தை ஆரம்பித்தான். அனேக தேசங்களைப் பிடித்த பின் கி.மு. 326-ல் பெரும் படையோடு இந்தியாவுக்கு வந்தான். வடமேற்கு இந்தியாவில் இருந்த திராவிடச் சிற்றரசர்களில் ஒருவனான போறஸ் என்பவன் அவனை எதிர்த்தான். ஆனால் தட்சசீலத்தில் இருந்த அம்பி என்ற அன்னியனான தேச துரோகி போறசைத் தோற்கடிக்க அலெக்ஸாண்டரை அழைத்து வரவேற்றான்.

அலெக்ஸாண்டர் இந்தியாவில்

அலெக்ஸாண்டர் திராவிட சிற்றரசர்களைத் தோற்கடித்து இந்தியாவின் வடமேற்குப் பகுதிகளில் தன் ஆட்சியை ஸ்தாபித்தான். அலெக்ஸாண் டரின் ஆட்சிக் காலத்திலும் அன்னியர்கள் இந்தியாவில் கூட்டமாய் வந்தார்கள். அலெக்ஸாண்டர் இருவருடங்கள் இந்தியாவில் வசித்த பின் கி.மு. 323-ல் பாபிலோனுக்குச் சென்று அங்கே மரித்துப் போனான்.

செலூக்கஸ் நிக்கேட்டர்

அலெக்ஸாண்டரின் மரணத்திற்குப் பின் அவன் படைத்தலைவர்களில் ஒருவனான செலூக்கஸ் நிக்கேட்டர் என்பவனுக்கு இந்தியா போன்ற தேசங்களின் பொறுப்பு கொடுக்கப்பட்டது. இந்தியாவில் இந்தோ கிரேக்கர்கள் என்று அழைக்கப்பட்ட கலப்பு இனத்தைச் சேர்ந்தவர்கள் ஏறத்தாழ 200 வருடங்கள் பற்பல இடங்களில் சிற்றரசர்களாய் இருந்தார்கள் என்று காணப்படுகிறது.

மெகஸ்தனிஸ்

வடமேற்கு இந்தியாவில் அலெக்ஸாண்டரால் பிடிக்கப்பட்ட பகுதிகளைச் சந்திரகுப்த மௌரியன் என்ற திராவிட அரசன் திரும்பப் பெற்றுக் கொண்டு குப்தப் பேரரசை ஸ்தாபித்தான். செலூக்கஸ் சந்திர குப்த மௌரியனோடு போர் தொடுத்துத் தோல்வி அடைந்தான். அதன்பின் செலூக்கஸ் தன் தூதுவரான மெகஸ்தனிஸ் என்பவனைச் சந்திரகுப்த மௌரியனிடத்தில் அனுப்பினான். மெகஸ்தனிஸ் சந்திரகுப்தனைச் சந்தித்த பின் 'இன்டிகா' என்னும் நூலை எழுதினான். அந்நூலிலிருந்து இந்தியாவின் அன்றைய செய்திகளை அறிய முடிகிறது.

ரோமர்கள் இந்தியாவில்

கிரேக்க சாம்ராஜ்யத்திற்குப் பின் ரோம சாம்ராஜ்யம் உலக அளவில் உயர்வடைந்தது. ஜூலியஸ் சீசரின் மரணத்திற்குப் பின் ஆக்டோவியன் (அகஸ்து) என்பவன் ஆன்றனி என்பவனை ஆக்டியம் என்ற இடத்தில் கி.மு. 31-ல் தோற்கடித்தான். கி.மு. 27-ல் அகஸ்து ரோம சாம்ராஜ்யத்தின் சக்ரவர்த்தி ஆனான். ரோமர்கள் இந்தியாவுடன் மிக நெருக்கமான வணிகத் தொடர்பு வைத்துக் கொண்டார்கள்.

ரோம நாணயங்கள்

ரோமர்கள் கூட்டம் கூட்டமாக இந்தியாவில் வசித்து வந்ததற்கான சான்றுகள் கிடைத்துள்ளன. அகஸ்து சீசரின் காலத்தில் உள்ள ரோம நாணயங்கள் இந்தியாவில் பல இடங்களில் தோண்டி கண்டெடுக்கப் பட்டுள்ளன.

சாலைகள்

இந்தியாவிலிருந்து ரோமாபுரி நகரைப் பதினாறு வாரங்களில் சென்றடையத்தக்க வசதியுடன் கூடிய சாலைகள் அன்று அமைக்கப் பட்டிருந்தன. ரோமர்களும், பிற நாட்டவர்களும் கரைவழியாக இந்தியாவில் குடி புகுந்தார்கள் என்பதற்கு இதுவும் ஒரு சான்றாகும்.

கூஷாணர்கள் இந்தியாவில்

அன்னியர்களான இவர்களும் இந்தியாவின் வடமேற்குப் பகுதிகளில் குடியேறினார்கள். கி.மு165-ல் யுவேச்சிகள் சகர்களை விரட்டிவிட்டு தங்கள் நாடோடி வாழ்க்கையைக் கைவிட்டு நாட்டில் சில இடங்களைப் பிடித்துக்கொண்டு புது வாழ்க்கை ஆரம்பித்தார்கள் என்றும் அவர்களில் ஒரு சாரார் கூஷாணர்கள் என்று அழைக்கப்படுகிறார்கள் என்றும் காணப்படுகிறது. சகர்கள் கி.மு. 2-ம் நூற்றாண்டிலும், கூஷாணர்கள் கி.பி. 1-ம் நூற்றாண்டிலும், ஹூணர்கள் கி.பி. 4-ம் நூற்றாண்டிலும் இந்தியாவுக்கு வந்தவர்கள் என காணப்படுகிறது.

அன்னியர்களின் வாழ்க்கை

இவ்வாறு இந்தியாவுக்குள் பல காலங்களில் நுழைந்த அன்னியர் களான பெர்சியர்கள், கிரேக்கர்கள், ரோமர்கள், சகர்கள், கூஷாணர்கள் ஆகியோர் இந்தியாவின் வடமேற்குப் பகுதிகளில் கூட்டம் கூட்டமாக அனேக காலம் சுற்றித் திரிந்தார்கள். நாடோடிகளாய் வாழ்ந்த இவர்கள் சில வேளைகளில் தங்களுக்குள் சண்டைபோட்டுக் கொண்டார்கள். சிலர் சில காலங்களில் தங்களுக்குச் சிற்றரசுகளை ஏற்படுத்திக் கொண்டார்கள். நாடோடி வாழ்க்கையில் இவர்கள் குதிரை, ஆடு, மாடு ஆகியவற்றைத் தீயில் சுட்டுச் சாப்பிட்டு சோமபானம், சுராபானம் ஆகிய போதை மதுவகைகளை அருந்தியிருந்தார்கள்.

அதிகாரம் 3

சைவ வைணவம் ஆதி இந்தியக் கிறிஸ்தவமா?

இன்று பொதுவாக சைவவைணவ மதங்களை இந்து மதத்தோடு சம்மந்தப்படுத்தி அவை இந்துமதமென்று பேசப்படுகின்றன. மட்டுமல்ல, அவை கிறிஸ்தவத்துக்கு முற்றிலும் முரண்பட்டவை எனவும் காட்டப் படுகின்றன.

ஆனால் சற்று ஆராய்ந்து பார்க்கும்போது கிறிஸ்தவமும் சைவ வைணவமும் ஒரே அடிப்படையிலான கடவுள் கொள்கையில் அமைந் திருப்பதைக் காணலாம். அன்பே உருவான கடவுள் மனிதனாக அவ தரித்தார் என்பதே அந்த அடிப்படைக் கொள்கை ஆகும். கடவுள் மனித னாய் அவதரித்தார் என்பது ஒரு வரலாற்று நிகழ்ச்சியாகும். அந்நிகழ்ச் சியைக் குறித்துக் கிறிஸ்தவம் விவிலியத்திலும், சைவவைணவ மதங்கள், தங்கள் சித்தாந்த நூல்களிலும் விளக்குகின்றன. சைவசித்தாந்தத்திற்கு அடிப்படை நூலாக இருப்பது மெய்கண்டார் எழுதிய சிவஞானபோதம் ஆகும்.

சிவஞான போதம் விவிலியத்தில் வெளிப்படுத்தப்பட்டுள்ள கிறிஸ்தவக் கொள்கைகளை இரத்தினச் சுருக்கமாகப் பன்னிரு சூத்திரங் களில் விளக்குகிறது. இவற்றைக் குறித்துப் பின்வரும் பகுதிகளில் விளக்கப்படுகின்றன. ஆகிலும் இங்கே சிவஞான போதத்தின் முதலாம் சூத்திரத்தைக் கவனிப்போம் :-

சிவஞானபோதம் சூத்திரம்-1

அவன் அவள் அது எனும் மூவினைமையின்
தோற்றிய திதியே ஒடுங்கி மலத்துளதாம்
அந்தம் ஆதி என்மனார் புலவர்

விவிலியத்தில் கூறப்பட்டுள்ள கடவுளின் படைப்பைக் குறித்தும், மனிதனின் வீழ்ச்சியைக் குறித்தும், அவ்வீழ்ச்சியால் பாவம் மனுக் குலத்தில் பிரவேசித்ததைக் குறித்தும் இச்சூத்திரம் விளக்குகிறது.

உரையாசிரியர் டாக்டர் தெய்வனாயகம் அவர்கள் இச்சூத்திரத்தின் கருத்துக்களைப் பகுத்து உரைத்திருக்கிறார்கள்.

விளக்கம்

அவன் என்பது முதல் மனிதன். அவள் என்பது முதல் ஸ்திரீ. இவர்கள் விவிலியத்தில் ஆதாம், ஏவாள், என்று அழைக்கப்படுகிறார் கள். அது என்பது உலகம். (மூவினமையின் தோற்றியதிதியே= மூன்றுவெவ்வேறு செயல்களால் இறைவன் தோற்றுவித்தான்) அவன், அவள், அது ஆகிய இவை மூன்றையும் கடவுள் வெவ்வேறு செயல்களால் தோற்றுவித்தார். அவை தோற்றுவிக்கப்பட்ட விதங்களைக் குறித்து விவிலியம் விளக்குகிறது. அதாவது முதல் மனிதனாகிய ஆதாம் பூமியின் மண்ணினால் உருவாக்கப்பட்டான். முதல் ஸ்திரீயாகிய ஏவாள் ஆதாமின் எலும்பிலிருந்து உருவாக்கப்பட்டாள். அதுவாகிய உலகம் கடவுளின் வார்த்தையினால் உருவாக்கப்பட்டது. இவை படைக்கப் பட்ட போது தூயநிலையில் இருந்தன. (ஒடுங்கி மலத்துளதாம் = தூய நிலையிலிருந்து ஒடுங்கி பாவத்தில் விழுந்தது) தூய நிலையிலிருந்து இவைகள் ஒடுங்கி பாவத்தில் விழுந்து விட்டன

பாவத்தில் விழுந்துவிட்ட நிலை

இவை பாவத்தில் விழுந்து விட்ட நிலையைக் குறித்து விவிலியம் விரிவாய்க் கூறுகிறது. ஆதாமும், ஏவாளும் அவர்கள் வைக்கப்பட்டிருந்த ஏதேன் தோட்டத்தில் விலக்கப்பட்ட மரத்தின் கனியைச் சாத்தானுடைய தூண்டுதலால் புசித்தபடியால் அவர்களுக்குள் பாவம் பிரவேசித்தது.

அவ்விதமாய் ஆதாமும் ஆதாமின் சந்ததிகளும் சபிக்கப்பட்டு பாவத்திற் குள்ளானார்கள். இதற்குக் காரணனான சாத்தானைக் கடவுள் சபித்தார். அதோடு பூமியும் சபிக்கப்பட்டது. (அந்தம் ஆதி) அது தூய நிலையின் அந்தமும், அதாவது பாவம் இல்லாத நிலையின் முடிவும் பாவ நிலையின் தொடக்கமும் ஆயிற்று.

அறிஞர்கள் விவிலியத்தில் கூறியிருக்கிறார்கள்

விவிலியத்தில் கூறப்பட்டிருப்பவை சிவஞான போதத்தில் விளக்கப் படுகின்றன. (என்மனார் புலவர் = இது அறிஞர்களின் கூற்றாகும்). அறிஞர்கள் விவிலியத்தில் கூறியுள்ள கடவுளின் செயல்பாடுகளைக் குறித்து மெய்கண்டார் மிகச்சுருக்கமாகக் குறிப்பிடுகிறார். இவ்வாறு விவிலியத்தின் ஆழமான கருத்துக்களை மெய்கண்டார் தன்னுடைய சிவஞானபோதம் என்னும் நூலின் பன்னிரண்டு சூத்திரங்களில் அடக்கி வைத்துள்ளார்.

கடவுள் மனிதனாகும் திட்டம் - விவிலியத்தில்

தூய நிலையிலிருந்து பாவநிலைக்கு வீழ்ச்சியடைந்த மனிதனை மீண்டெடுக்க தேவன் சித்தங் கொண்டார். அதற்கான தமது திட்டத் தையும் கடவுள் ஏதேன் தோட்டத்தில் வெளிப்படுத்தினார். அத்திட்டத் தின்படி கடவுள் மனிதனாகப் பூமியில் அவதரிக்க வேண்டும். வார்த்தை யாகிய தேவன் ஒரு ஸ்திரீயின் வயிற்றில் மாம்சமாவார். அதாவது ஒரு கன்னியின் வயிற்றில் (ஸ்திரீயின் வித்தாக) பிறப்பார். அவர் மனிதனின் வீழ்ச்சிக்குக் காரணனான சாத்தானின் தலையை நசுக்குவார். அவர் தம்மையே பலியாக்கி மனுக்குலத்தை மீட்டுக் கொள்வார். இதுவே அத்திட்டமாகும்.

இத்திட்டத்தின் செயல்பாடுகள்- விவிலியத்தில்

1. ஒரு ஜனத்தை உருவாக்குதல்

பாவத்தில் வீழ்ச்சியடைந்த ஆதாமின் சந்ததி அழிக்கப்பட்டது. நோவாவின் குடும்பத்தார் 8 பேர் காக்கப்பட்டார்கள். அவர்கள் பெருகி

கிழக்கிலிருந்து மேற்கே பிரயாணம் பண்ணி மெசப்படோமியாவில் தங்கினார்கள். அங்கே ஊர் என்ற இடத்திலிருந்து கடவுள் தமது திட்டங்களுக்காக ஆபிரகாம் என்பவனைத் தெரிந்து கொண்டார். அவனை உலகத்தின் மையமான பலஸ்தினாவுக்குக் கொண்டு சென்றார்.

ஆபிரகாமிலிருந்து இஸ்ரவேல் என்னும் ஒரு ஜனத்தை எழுப்பினார். இஸ்ரவேலர் 430 வருஷங்கள் எகிப்தின் அடிமைத்தனத்தில் இருந்தவாறே பெருகினார்கள்.

2. ஜனங்களுக்குப் பயிற்சி அளித்தல்

கடவுள் ஜனங்களுக்கு மோசே என்ற தலைவனை எழுப்பினார். மோசே இஸ்ரவேல் ஜனங்களை எகிப்திலிருந்து கானான் தேசத்துக்கு வழி நடத்தினான். வழியில் சீனாய் மலையில் அவர்களுக்குச் சட்டதிட்டங்கள் கொடுக்கப்பட்டன. முதல் முதலாக ஜனங்களுக்கு கடவுள் கொள்கைகள், ஆலய வழிபாடுகள், பலிசெலுத்த வேண்டிய முறைகள் போன்றவை கற்பிக்கப்பட்டன. மோசேக்குப் பின் யோசுவா என்பவன் அவர்களைக் கானானில் கொண்டு சேர்த்தான். அவன் கானானைப் பிடித்து இஸ்ரவேல் ஜனங்களுக்குப் பங்கிட்டுக் கொடுத்தான்.

3. ஜனங்களுக்கு ஆலய வழிபாடு

ஜனங்கள் நியாயப் பிரமாணத்தை விட்டு விலகினதினால் அடிமைத்தனங்களுக்கு ஒப்புக்கொடுக்கப்பட்டார்கள். அக்காலங்களில் ஜனங்களை 15 நியாயாதி பதிகள் நியாயம் விசாரித்து வந்தார்கள். பின்பு அவர்களை சவுல், தாவீது, சாலொமோன் ஆகிய ராஜாக்கள் ஆண்டார்கள். சாலொமோன் ராஜாவின் காலத்தில் கற்களால் ஆன முதல் தேவாலயம் எருசலேமில் ஸ்தாபிக்கப்பட்டது.

4. கீழ்ப்படியாத ஜனங்களுக்குத் தண்டனை

சாலொமோனுக்குப் பின் இஸ்ரவேல் தேசம் வடதேசம் என்றும், தென்தேசம் என்றும் இரண்டாகப் பிரிந்தது. வடதேசமாகிய இஸ்ரவேல் கிமு 721-ல் அசீரியாவால் அடிமைப்படுத்தப்பட்டது. தென்தேசமாகிய

யூதா கிமு 586-ல் பாபிலோனியாவால் அடிமைப்படுத்தப்பட்டது. இஸ்ரவேல் ஜனங்கள் 70 ஆண்டுகள் பாபிலோனிய அடிமைத்தனத்துக் குள் ஆனார்கள்.

5. மறுபடியும் ஜனங்கள் பலஸ்தீனாவில்

பின்பு ஜனங்கள் அடிமைத்தனத்திலிருந்து விடுவிக்கப்பட்டு பலஸ்தினாவுக்குத் திரும்பி வந்தார்கள். பாபிலோனியருக்குப்பின், மேதிய பெர்சியர்களும், கிரேக்கர்களும், ரோமர்களும், யூதர்களை ஆண்டார்கள்.

6. கடவுள் மனிதனாய் அவதரித்தல்

ரோம சக்கிரவர்த்தியான அகஸ்து ராயனின் நாட்களில்(BC27 to AD14) தேவனின் திட்டப்படி, கடவுள் உலக வரலாற்றில் ஒரு மனிதனாய் அவதரித்தார்.

7. குமாரனாகிய கடவுள் பூமியில் வசித்தல்

வீழ்ச்சி அடைந்த மனிதனை இரட்சித்து மறுபடியும் தம்மிடம் சேர்த்துக்கொள்வதற்காகக் கடவுள் மரியாள் என்ற ஸ்திரீயின் வயிற்றில் மாம்சமாகி இந்த உலகத்தில் வெளிப்பட்டார். அவர் இரட்சகர் (தமிழில் இயேசு) என்றும் அபிஷேகம் பண்ணப்பட்டவர் (தமிழில் கிறிஸ்து) என்றும் அழைக்கப்பட்டார்.

8. குமாரனாகிய கடவுள் மறுபடியும் பரத்துக்குச் செல்லுதல்

கடவுளின் அவதாரம்உலகவரலாற்றைக் கி.மு. என்றும் கி.பி. என்றும் இரண்டாகப் பிரித்தது. அவர் 33½ வருடம் பலஸ்தீனாவில் சஞ் சரித்து ஊழியம் செய்தார். அவருக்குச் சீஷர்கள் இருந்தார்கள், அனேக அதியங்களையும் அற்புதங்களையும் செய்தார். தேவத் திட்டப்படி அவர் ஜனங்களின் பாவத்திற்காகச் சிலுவையில் தம்மையே பலியாக்கினார். அவர் மரித்து மனிதனுக்கு இரட்சிப்பை ஏற்படுத்தினார். அடக்கம் பண்ணப்பட்டு மூன்றாம் நாள் உயிர்த்தெழுந்தார். உயிர்தெழுந்த பின் 40 நாள் உலகத்தில் சஞ்சரித்து, சீஷர்களுக்குப் போதித்து, அவர்களைப்

பலப்படுத்தி ஊக்குவித்தார். பின்பு அனேக ஜனங்கள் பார்த்துக் கொண்டிருக்கையில் ஒலிவமலையில் சீஷர்களை ஆசிர்வதித்துப் பரத்துக்கு ஏறிச் சென்றார். இதுவே கடவுள் உலகத்தில் மனிதனாக அவதரித்தார் என்பதைக் குறித்த வரலாறாகும்.

கடவுள் மனிதனாக அவதரித்தார் என்ற நற்செய்தி

கடவுளின் அவதாரம் உலகிற்கு அளிக்கப்பட்ட ஒரு நற்செய்தி ஆகும். இந்நற்செய்தியில் அடங்கியுள்ள அம்சங்களாவன :-

1. கடவுள் ஒருவரே. அவர் மூவொரு கடவுள்
2. அவர் மனிதரை இரட்சிக்க உலகத்தில் மனிதனாய் அவதரித்தார்.
3. அவர் தம்மையே பலியாக்கி மனிதனுக்கு இரட்சிப்பை ஏற்படுத்தினார்.
4. இதை விசுவாசித்து ஏற்றுக் கொண்டவர்கள் கடவுளைச் சென்றடைவார்கள்.

இது கிறிஸ்தவத்திலும், சைவ வைணவத்திலும் காணப்படும் ஒரே அடிப்படைக் கொள்கை ஆகும்.

நற்செய்தி ஐரோப்பாவுக்கு

இந்நற்செய்தியை இயேசுவின் அப்போஸ்தலர்களான பவுல், பேதுரு முதலானோர் ஐரோப்பாவுக்கு முதலாம் நூற்றாண்டிலேயே எடுத்துச் சென்றார்கள்; அது ஐரோப்பிய கிறிஸ்தவம் என்று அழைக்கப்பட்டது.

நற்செய்தி இந்தியாவுக்கு

இயேசுவின் ஒரு சீஷனாகிய தோமா அப்போஸ்தலன் இந்த நற்செய்தியை AD 52 -ல் கிழக்கே இந்தியாவுக்குக் கொண்டு வந்தார். அது ஆதி இந்தியக் கிறிஸ்தவம் என்று அழைக்கப்பட்டது. தோமா கொண்டு வந்த ஆதி இந்தியக் கிறிஸ்தவத்தைத் திராவிடர்கள் ஏற்றுக்கொண்டார்கள். அதுவே சைவ வைணவம் என்று அழைக்கப்படலாயிற்று.

மேன்மை புதைக்கப்பட்டது

ஆனால் பின் நாட்களில் திராவிடமக்கள் இந்தியாவில் வந்தேறிய அன்னியர்களால் அடிமைப்படுத்தப்பட்டார்கள். இந்தியாவில் வந்தேறிய அன்னியர்கள் தங்களை ஆரியர்கள் என்று அழைத்துக்கொண்டு திராவிட மக்களை அடிமைப்படுத்தி திராவிடர்களின் சைவ வைணவ மதங்களையும், அவர்களுடைய எல்லா மேன்மைகளையும் பறித்துக் கொண்டார்கள். சிறப்பான திராவிட நாகரிகமே புதையுண்டு போயிற்று.

தோமாவால் கொண்டு வரப்பட்ட ஆதிஇந்தியக் கிறிஸ்தவம் என்ற சைவ வைணவச் சமயங்கள் எவ்வாறு இந்தியாவில் வளர்ச்சியடைந்தன என்பவை பற்றியும் அவை எவ்வாறு அன்னியர்களான ஆரியர்களால் அடக்கப்பட்டு அழிக்கப்பட்டன என்பவை பற்றியும் சமீபகால ஆராய்ச்சிகள் தெளிவாய் விளக்குகின்றன.

அதிகாரம் 4

சைவ வைணவ மதங்களின் தோற்றம்

தோமா இயேசுவின் சீஷர்களில் ஒருவராய் இருந்தார். உயிர்த்தெழுந்த பின் இயேசு சீஷர்களுக்குத் தம்மை முதலில் காண்பித்த போது தோமா அங்கு இருக்கவில்லை. இயேசுவைக் கண்ட சீஷர்கள் அதைக் குறித்து அவனிடம் சொன்னபோது அவன் விசுவாசிக்கவில்லை. விசுவாசியாத தோமாவுக்கு இயேசு மறுபடியும் காட்சி அளித்தார். தோமா இயேசுவின் காயங்களைக் கண்டு அதன் பின் விசுவாசித்துப் பெலப்பட்டார். விசுவாசத்தில் பெலப்பட்ட தோமா அப்போஸ்தலன் கி.பி. 52-ல் இந்தியாவுக்கு வந்தார்.

தோமாவின் இந்திய ஊழியம்

தோமா இந்தியாவில் பல இடங்களில் நற்செய்தியை அறிவித்தார். தட்ச சீலத்தில் சிற்றரசனாக இருந்த கொண்டோபரஸ் என்பவனைச் சந்தித்துக் கிறிஸ்துவுக்குள் கொண்டு வந்தார். தென்னிந்தியாவிலும் தமிழ்நாட்டிலும் 20 ஆண்டுகள் ஊழியம் செய்தார். AD 72ல் சென்னை மயிலாப்பூரில் இரத்த சாட்சியாய் மரித்தார்.

ஆராய்ச்சிகள்

தோமா அப்போஸ்தலனின் ஊழியங்களைக் குறித்து மேலே கூறப்பட்ட யாவும் கற்பனை என்றும், கொண்டோபரஸ் என்ற சிற்றரசன்

வட இந்தியாவில் ஆட்சி புரிந்ததில்லை என்றும், தோமா இந்தியாவுக்கு வரவில்லை என்றும் சமீபகாலம் வரை சிலர் கூறி வந்தார்கள். ஆனால் இதைக் குறித்து ஆராய்ச்சிகள் தீவிரமாய் நடைபெற்றன. அவ்வாராய்ச்சி களின் அடிப்படையில் கொண்டோபரஸ் என்ற ஒரு சிற்றரசன் வடஇந்தியாவில் வாழ்ந்திருந்தான் என நிரூபிக்கப்பட்டுள்ளது. அவன் வெளியிட்டிருந்த நாணயங்கள் பல அகழ்வாரய்ச்சிகளில் கண்டுபிடிக்கப் பட்டுள்ளன.

தோமாவின் கல்லறை

மேலும் தோமா அப்போஸ்தலன் இந்தியாவில் ஊழியம் செய்து இரத்த சாட்சியாக மரித்தார் என்பதற்கு அனேக சான்றுகள் கண்டு பிடிக்கப்பட்டுள்ளன. அவர் வசித்து வந்த இடம் செய்ன்ட் தோமஸ் மவுண்ட் என்று இன்றும் அழைக்கப்படுகிறது. அவர் சரீரம் சென்னை யில் அடக்கம் பண்ணப்பட்டுள்ளது. மட்டுமல்ல கி.பி. முதலாம் நூற்றாண்டில் தோமா அப்போஸ்தலன் இந்தியாவில் ஊழியம் செய்த காரணத்தால் அன்று இந்தியாவில் காணப்பட்ட மதங்களிலும், தொழு கைகளிலும் மாபெரும் மாற்றங்கள் ஏற்பட்டிருப்பதைப் பார்க்கிறோம்.

தோமா வந்தபோது இந்தியாவின் நிலை

அன்று காணப்பட்ட மதங்கள்

கி.பி. 52-ல் தோமா இந்தியாவுக்கு வந்தபோது இந்தியாவில் காணப் பட்ட திராவிடர்களின் மதங்களாவன :-

1. சமண மதம் *2. புத்த மதம்*

இவ்விரு மதங்களும் நாத்திகக் கொள்கை உடையவைகளாகும்.

அன்று காணப்பட்ட வழிபாடுகள்

1. திராவிட வழிபாடு

சிந்துவெளி நாகரிகத்தில் திராவிடர்களுக்கு நினைவுக்கல் நட்டு வழிபடும் முறை இருந்து வந்தது என்று முன்னால் பார்த்தோம். அந்த

வழிபாட்டு முறைகளைத் திராவிட மக்கள் தொடர்ந்து நடத்தி வந்தார்கள் என்று காணப்படுகிறது. முற்காலத்தில் செய்து வந்த நினைவுக்கல் வழிபாடு பிற்காலங்களில் 'சிவலிங்க' வழிபாடு என்று அழைக்கப்பட்டது. சங்கக் காலத்தில் சிவலிங்கம் கந்து என்று அழைக்கப்பட்டதாகப் பார்க்கிறோம். அப்போஸ்தலனாகிய தோமா இந்தியா வந்தபோது திராவிடர்கள் சங்க இலக்கியங்களில் கூறப்படும் கந்து அல்லது சிவலிங்கத்தையும் கொற்றவை என்ற வெற்றித் தேவதையையும் வேலன் என்ற குமரனையும் வேறு பல தெய்வங்களையும் வழிபட்டு வந்தார்கள். பலிகளும் செலுத்தினார்கள்.

2. அன்னியர்களின் தீ வழிபாடு

தோமா இந்தியாவுக்கு வந்த காலங்களில் இந்தியாவின் வடமேற்குப் பகுதிகளில் வெளிநாட்டாராகிய அன்னியர்கள், முன் விவரிக்கப் பட்டபடி, நாடோடிகளாக வசித்து வந்தார்கள். அவர்கள் தீ வழி பாட்டுக்காரர்கள். குதிரை, காளை, ஆடு, எருமை போன்ற மிருகங் களைத் தீயிற் சுட்டு, அவற்றின் மாமிசத்தைச் சோம, சுரா பானங்களோடு (மதுவகை) சாப்பிட்டு வந்தார்கள்.

தோமாவின் உபதேசங்கள்

தோமா அப்போஸ்தலன் இந்தியாவுக்கு வரும்போது புதிய ஏற்பாட்டுப் புத்தகம் எழுதப்படவில்லை. தோமா பழைய ஏற்பாட்டுப் புத்தகங்களின் அடிப்படையிலும், விண்ணுலகத்தை விட்டு மனிதனாய் அவதரித்துத் தன்னோடு வாழ்ந்த இயேசு கிறிஸ்துவின் வாழ்க்கையின் அடிப்படையிலும் இந்திய ஜனங்களுக்குப் போதித்தார். தோமா உபதேசித்த போதனைகளின் முக்கிய அம்சங்கள் ஆவன:-

1. ஒரே ஒரு தேவன் உண்டு. அவர் பிதா, குமாரன், பரிசுத்த ஆவி ஆகிய திரித்துவ தேவன் ஆகும் (Doctrine of Trinity).

2. மனிதன் பாவமில்லாதவனாய்த் தூய நிலையில் தேவனால் படைக்கப்பட்டான். ஆனால் அவன் தேவகட்டளை மீறியதால் பாவத்தில் வீழ்ச்சியடைந்தான் (Doctrine of Fall of man).

3. வீழ்ச்சி அடைந்த மனிதனை மீட்கும் படி கடவுள் இந்த உலகத்தில் மனிதனாய் அவதரித்தார் (Doctrine of Avathar).

4. மனிதனாய் அவதரித்த தேவன் ஜனங்களின் பாவ பரிகாரத்திற்காகத் தன்னையே பலியாக்கினபடியால் இனிமேல் நாம் பலி செலுத்த வேண்டியதில்லை (Doctrine of Fulfillment of sacrifice).

5. நமக்காகத் தம்மையே பலியாக்கிய கடவுளை விசுவாசிப்பவனுக்கு இரட்சிப்பு உண்டு (Doctrine of Salvation by faith).

தோமாவின் உபதேசங்களால் ஏற்பட்ட மாற்றங்கள்

தோமாவின் உபதேசங்களைச் சமண மதத்தைச் சார்ந்தவர்களும், புத்த மதத்தைச் சார்ந்தவர்களும், பழங்கால திராவிட தொழுகையைச் சார்ந்தவர்களுமான பெரும் கூட்டம் திராவிட மக்கள் ஏற்றுக் கொண்டார்கள். எனவே சமண பவுத்த மதங்களிலும் பழங்காலத் திராவிட தொழுகைகளிலும் பெரும் மாற்றங்கள் ஏற்பட்டன. அம்மாற்றங்களைக் குறித்துப் பார்ப்போம்.

1. புத்த மதத்தில் ஏற்பட்ட மாற்றங்கள்

a) மகாயான புத்தமதம்

தோமா இந்தியாவுக்கு வந்த போது இந்தியாவில் காணப்பட்ட ஒரு முக்கியமான மதம் திராவிடர்களின் புத்தமதம் ஆகும். புத்த மதம் ஒரு நாத்திக மதமாகக் கருதப்பட்டது. தோமா தேவன் உண்டென்றும், அவர் பிதா, குமாரன், பரிசுத்த ஆவி ஆகிய திரியேக தேவன் என்றும், அவர் மனிதனாக அவதரித்தார் என்றும் போதித்தார். இந்தக் கொள்கையை அனேக புத்த மதத்தவர்கள் ஏற்றுக் கொண்டார்கள். அவர்கள் தங்கள் நாத்திகக் கொள்கையை விட்டுவிட்டு கடவுளை ஏற்றுக் கொண்டார்கள். அவர்கள் கடவுளின் மூவொருமைக் கொள்கைக்குத் தர்மகாயா, சம்போக காயா, நிர்மாண காயா என்ற திரித்துவப் பெயரை வைத்துக் கொண்டார்கள். இவர்கள் புத்தரைத் தெய்வமாக வணங்க ஆரம்பித்தார்கள். இவர்கள் நாளடைவில் கோயில்களைக் கட்டிப் புத்தர் சிலையை வழிபட்டார்கள். இவ்வாறு தோமாவின் கடவுள் கோட்பாட்டை ஏற்றுக்

கொண்ட புத்தர்களின் மதம் மகாயான புத்த மதம் என்று அழைக்கப் பட்டது.

b) ஹீனாயான புத்தமதம்

தோமாவின் கொள்கையை ஏற்றுக் கொள்ளாமல் முன்னிருந்த கொள்கைகளையே கடைப்பிடித்துக் கொண்ட புத்தர்கள் ஹீனாயான புத்தர்கள் என்று அழைக்கப்பட்டார்கள்.

இவ்விதமாய்த் தோமாவின் உபதேசத்தின் காரணமாகப் புத்தமதம் மகாயானம் ஹீனாயானம் என்று இரு பிரிவுகளாகப் பிரிந்தது. ஆதி கொள்கைகளைக் கொண்ட ஹீனாயான புத்தமத நூல்கள் பாலி மொழி யில் எழுதப்பட்டன. ஆனால் கிறிஸ்தவக் கொள்கைகளால் மாற்ற மடைந்த மகாயான புத்தமத நூல்கள் கிறிஸ்துவுக்குப்பின் சமிஸ்கிருத மொழியில் எழுதப்பட்டன.

2. சமணமதத்தில் ஏற்பட்ட மாற்றங்கள்

a) ஸ்வேதாம்பரர்கள்

சமண மதமும் கடவுள் நம்பிக்கையற்ற நாத்திக மதமாக இருந்து வந்தது. சமண மதத்திலும் ஒரு சாரார் தோமாவின் கொள்கைகளை ஏற்றுக் கொண்டார்கள். தோமாவின் கடவுள் கொள்கையை ஏற்றுக் கொண்ட சமணர்கள் ஸ்வேதாம்பரர்கள் என்று அழைக்கப்பட்டார்கள். இவர்கள் மிதவாதிகள். வெள்ளை ஆடைகளை அணிவார்கள்.

b) திகம்பரர்கள்

கடவுள் கொள்கையை ஏற்றுக் கொள்ளாத சமணர்கள் திகம்பரர்கள் என்று அழைக்கப்பட்டார்கள். அவர்கள் அணிவதற்கு ஆடைகள் கூட தேவையில்லை என்று தங்களை வெறுக்கிறவர்கள். அவர்கள் தங்க ளையே வெறுத்து மற்றெந்த உயிரையும் சேதப்படுத்தாமல் தனித்த வாழ்க்கை செய்து உணவையும் உட்கொள்ளாமல் தங்களையே சாவுக்கு ஒப்புக்கொடுத்து விடுவார்கள். இவ்வாறு, தோமாவின் கொள்கையால் சமணமதம் ஸ்வேதாம்பரம், திகம்பரம் என இரண்டாகப் பிரிந்தது.

3. தோமாவின் உபதேசங்கள் திருக்குறளில்

திருவள்ளுவர் இயற்றிய திருக்குறள் தோமாவின் உபதேசக் கொள்கைகளை விளக்கிக் காட்டும் ஓர் சிறந்த நூல் என்று இந்நாட்களில் நிரூபிக்கப்பட்டுள்ளது. கிறிஸ்தவ நோக்கில் படித்தால் மட்டுமே திருக்குறளின் கருத்துக்களைச் சரியான முறையில் புரிந்து கொள்ள முடியும். எடுத்துக்காட்டாக ஓரிரு குறிப்புகள் மட்டும் கீழ்த்தரப் படுகின்றன.

திருக்குறளில் இறை வாழ்த்து

திருவள்ளுவர் பாயிரமாகிய முதல் நான்கு அதிகாரங்களை முகவுரையாகக் கூறுகிறார். அவற்றில் முதல் மூன்று அதிகாரங்களும் இறைவனை வாழ்த்திப் பாடுவன ஆகும். திருவள்ளுவர் கடவுளின் திருத்துவக் கொள்கையை இங்கே விளக்குகிறார். அவர் கடவுளை பிதா, பரிசுத்த ஆவி, குமாரன் ஆகிய திரித்துவத் தேவன் என்ற நிலையில் கடவுள், வான், நீத்தார் என்று கூறி வாழ்த்துகிறார்.

கடவுளின் திரித்துவம்

கடவுள் வாழ்த்து, வான் சிறப்பு, நீத்தார் பெருமை ஆகிய மூன்று அதிகாரங்களில் திரித்துவக் கடவுளை வாழ்த்துகின்ற சில வார்த்தைகள் மட்டும் உதாகரணமாகக் கீழ்த் தரப்படுகின்றன.

விவிலியம் 'ஆதியிலே தேவன்' என்று ஆரம்பிக்கும் வண்ணமாய்த் திருக்குறளின் முதல் குறள் 'ஆதிபகவனை'க் குறிப்பிடுகிறது. பகவன் என்றால் தன்னைத் தானே பகுத்து நிற்பவன் என்பது பொருள். கடவுள் தம்மை பிதா, பரிசுத்த ஆவி, குமாரன் என மூன்றாகப் பகுத்து நிற்கிறார்.

மலர்மிசை ஏகினான்

விவிலியத்தில் நீங்கள் தேவனுடைய ஆலயமாயிருக்கிறீர்கள் என்று கூறியிருப்பதைப் பார்க்கிறோம். திருக்குறளில் கடவுள் இதயமாகிய தாமரையில் வீற்றிருப்பவர் என்று கூறப்பட்டுள்ளது.

ஐந்தவித்தான்

திருக்குறளில் 6-வது குறள்பா :-

"பொறிவாயில் ஐந்தவித்தான் பொய்தீர் ஒழுக்க
நெறிநின்றார் நீடு வாழ்வார்"

பொறியாகிய கருவியில் (சிலுவையில்) தன் ஐந்து புலன்களையும் அவித்தவனாகிய அல்லது பலியாக்கியவனாகிய இறைவன் காட்டிய வழி நிற்பவன் நீடுவாழ்வு (நித்திய ஜீவன்) பெற்றுக் கொள்வான் என்பது இதன் பொருள். இது மனிதனாய் அவதரித்துச் சிலுவையில் தன்னைப் பலியாக்கிய இயேசுக் கிறிஸ்துவை மட்டுமே குறிப்பதாகும்.

பரிசுத்த ஆவியை வாழ்த்தும் வான் சிறப்பு

விவிலியத்தில் பரிசுத்த ஆவியை மழையாகவும் முன்மாரி பின்மாரியாகவும் கூறப்படுகிறது (ஓசி. 6 : 3). திருவள்ளுவர் பரிசுத்த ஆவியை வான் சிறப்பாக வர்ணிக்கிறார்.

குறள் 20

"நீரின்று அமையாது உலகெனின் யார்யார்க்கும்
வானின்று அமையாது ஒழுக்கு"

நீரில்லாமல் இந்த உலகம் இயங்காது. அதுபோல பரிசுத்த ஆவியின் அபிஷேகம் இல்லையெனில் உலக மக்களிடம் ஒழுக்கம் நிலைநிற்க முடியாது என்பது பொருள்.

குமாரனை வாழ்த்தும் நீத்தார் பெருமை

குமாரனாகிய கடவுளைப் பற்றிச் சொல்லும் போது அவர் வானுலகை விட்டு மண்ணுலகிற்கு வந்து தம்மைத் தாமே நீத்தவர் (பலியாக்கியவர்) என்றும், அந்த நீத்தாருடைய பெருமையைக் கூறும் நூலே (விவிலியம்) சிறந்த நூல் என்றும் விளக்கப்படுகிறது.

உயிர்த்தெழுந்தவர்

அவர் தம்மைத் தாமே பலியாக்கிய போதிலும் மீண்டும் புத்துயிர் பெற்றவர் அதாவது உயிர்த்தெழுந்தவர் (குறள் 24).

அவர் புத்துயிர் பெற்றதற்குத் தேவதூதர்களால் சாட்சி பெற்றவர் (குறள் 25).

நீத்தார் பெருமையை விளக்கும் விவிலியம்

அவர் பெருமையைக் குறித்து நிலத்து மறைமொழியாகிய விவிலியம் விளக்குகிறது (குறள் 28).

அவர் இவ்வுலகத்திலுள்ள அனைத்து உயிர்களையும் இரட்சிக்கும் அந்தணர் (குறள். 30).

இவ்வாறு திருவள்ளுவர் குமாரனாகிய நீத்தாரை வாழ்த்துகிறார்.

இதுபோன்று திருக்குறளில் எல்லா குறள்பாக்களிலும் கிறிஸ்தவக் கொள்கைகள் நிறைந்திருப்பதைக் குறித்து Dr. தெய்வனாயகம் போன்ற அறிஞர்கள் விளக்கம் தருகிறார்கள்.

4. மூவொருமைக் கொள்கையின் வளர்ச்சி

பிதா, பரிசுத்த ஆவி, குமாரன் ஆகிய தோமாவின் திரித்துவ உபதேசத்தைத் திராவிடர்கள் தங்கள் வழிகளில் ஏற்றுக் கொண்டார்கள். அதுமட்டுமல்ல, அதைத் தங்கள் தங்கள் நிலைகளில் விளக்கினார்கள். இவ்விளக்கங்களால் சைவம், வைணவம் ஆகிய இரு மதங்கள் தோன்றலாயின.

5. சைவ வைணவ மதங்களின் தோற்றம்

தோமாவின் திருத்துவ உபதேசத்தைத் திருவள்ளுவர் போன்ற அறிஞர்கள் ஏற்றுக்கொண்டு அவர்கள் பாடிய சில பாடல்களின் கருத்துக்களைக் கவனித்தோம். சில காலங்களுக்குப்பின் அதைக்குறித்து சிந்திக்கத்தொடங்கிய பழந்திராவிட மக்களின் இடையே சில கருத்து வேறுபாடுகள் ஏற்படலாயின. இதன் காரணமாகத் தோமாவால்

கொண்டுவரப்பட்ட ஆதி இந்தியக் கிறிஸ்தவம், சைவம் என்றும் வைணவம் என்றும் இரு பிரிவுகளாகத் தோன்றலாயிற்று.

1. சைவம்

பழந்திராவிட மக்கள் தங்கள் முக்கிய கடவுளான சிவனைப் பிதா என்ற ஸ்தானத்தில் எடுத்துக்கொண்டார்கள். தங்களது வேலன் அல்லது குமரன் என்ற கடவுளைக் குமாரன் என்ற ஸ்தானத்திலும் எடுத்துக் கொண்டார்கள். பரிசுத்த ஆவியைக் குறித்துச் சிந்திக்கலாயினர். பிதா, அதாவது அப்பனும், குமாரன், அதாவது மகனும் இருப்பதால் பரிசுத்த ஆவி அம்மை, அதாவது பெண்ணாகத் தான் இருக்க வேண்டும் என்று எடுத்துக் கொண்டார்கள். மட்டுமல்ல, பரிசுத்த ஆவியை 'ஆவி' அல்லது 'வல்லமை' அல்லது 'பெலன்' அல்லது 'Power' என்ற கருத்தில் 'சக்தி' என்று அழைத்தார்கள். இவ்வாறு பரிசுத்த ஆவியைப் பெண்பாலாக எடுத்துக் கொண்டு அவர்கள் திரித்துவத்தை அப்பன், அம்மை, மகன் அல்லது சிவன், சக்தி, குமரன் என்று அழைத்தார்கள். இவர்கள் சைவர்கள் என்று அழைக்கப்பட்டார்கள்.

2. வைணவம்

பரிசுத்த ஆவியைப் பெண்பாலாக எடுத்துக் கொள்வதை மறுசாரார் ஒத்துக் கொள்ளவில்லை. பரிசுத்த ஆவியினாலே கன்னி மரியாள் கர்ப்பவதியானாள் என்று காணப்படுவதால், பரிசுத்த ஆவியைப் பெண்ணாகக் கூறக்கூடாது, ஆணாகத்தான் கூற வேண்டும் என்று அவர்கள் கருதினார்கள். எனவே அவர்கள் பிதாவைச் சிவன் என்றும், பரிசுத்த ஆவியை விண்ணிலிருந்து வந்தவன் என்ற பொருளில் ஆண் பாலாக விட்டுணு (விஷ்ணு) என்றும், குமாரனை விஷ்ணுவிலிருந்து தோன்றிய பிரம்மா என்றும், திரித்துவத்தைச் சிவன், விஷ்ணு, பிரம்மா என்று எடுத்துக் கொண்டார்கள். இவர்கள் வைணவர்களென்று அழைக்கப்பட்டார்கள்.

6. பக்தி இயக்கங்கள்

தோமாவின் புது உபதேசங்களால் புத்துயிர் பெற்ற திராவிட பக்தர்கள் பக்திப் பரவசத்தோடு தேவாரம், திருவாசகம், நாலாயிரத்

திவ்யப் பிரபந்தம் போன்ற பக்திப் பாடல்களை கி.பி 5-ம் நூற்றாண்டுக்குப் பின் உருவாக்கினார்கள். இவை திராவிட மக்களிடையே பக்திப் பரவசத்தையும் உற்சாகத்தையும் ஊக்கத்தையும் உருவாக்கின. இதனிமித்தம் கி.பி. 5-ம் நூற்றாண்டிற்குப் பின் தமிழகத்தில் உருவான இயக்கங்கள் பக்தி இயக்கங்கள் என அழைக்கப்படுகின்றன.

தெற்கிலிருந்து வடக்கே

பக்தி இயக்கங்கள் தெற்கிலிருந்து வடக்கே பரவின. சமண பௌத்த மதங்களிலிருந்த அனேக திராவிடர்கள் இப்புதிய இயக்கங்களில் சேர்ந்தார்கள். இவ்வாறு சேர்ந்தவர்களில் குறிப்பிடத்தக்கவர் திருநாவுக்கரசர் என்பவராவர்.

ஆழ்வார்கள், நாயன்மார்கள்

தோமாவின் கிறிஸ்தவ உபதேசங்கைகளை ஏற்றுக் கொண்ட திராவிடர்களின் வழி பக்தி இயக்கம் உண்டானது என்று பார்த்தோம். இவ்வியக்கங்களில் இரு பிரிவுகளைப் பார்க்கிறோம். சைவத் தலைவர்கள் நாயன்மார் எனவும் வைணவத் தலைவர்கள் ஆழ்வார்கள் எனவும் அழைக்கப்பட்டார்கள். பக்திப் பாடல்களான பன்னிரு திருமுறைகள் சைவப் பாடல்களாகவும் நாலாயிர திவ்ய பிரபந்தம் வைணவப் பாடல்களாகவும் காணப்படுகின்றன.

அதிகாரம் 5

சைவ வைணவக் கோவில்கள்

இந்தியாவின் வடமேற்குப் பகுதிகளில் சுற்றித்திரிந்த அன்னியர்களுக்கு ஆலய வழிபாடு இருந்ததில்லை. இந்தியாவில் முதலாம் நூற்றாண்டுக்கு முன்னிருந்த மதங்களான சமணமும் பௌத்தமும் நாத்திக மதங்களானதால் கடவுள் வழிபாட்டுக்கான ஆலயங்கள் அவர்களுக்கு இருந்ததில்லை. தோமாவால் கிறிஸ்தவக் கொள்கைகள் போதிக்கப்பட்டபின் திராவிட மக்களுக்கு ஆலயங்கள் தோன்றலாயின.

சமண பௌத்த கோயில்கள்

கடவுள் உண்டென்ற கொள்கையை ஏற்றுக் கொண்ட திராவிடர்களான சமண பௌத்த மதத்தவர்கள் கோயில்கள் அமைத்துக் கொண்டார்கள். அவர்கள் மகாவீரரையும், புத்தரையும் கடவுள் அவதாரங்களாகக் கொண்டு கோயில்களில் வழிபடத் தொடங்கினார்கள்.

சைவ வைணவ கோயில்கள்

சைவ, வைணவச் சமயங்களைச் சேர்ந்த திராவிடர்களும் தங்கள் வழிபாட்டிற்காக ஆலயங்களை அமைக்கத் தொடங்கினார்கள். ஆலயங்கள் ஆகம முறைப்படி பிராகாரம், பரிசுத்த ஸ்தலம், மகா பரிசுத்த ஸ்தலம் ஆகிய அமைப்புக்களோடு எருசலேம் தேவாலயத்தின் மாதிரியின்படி செய்யப்பட்டன. இந்தியாவில் பல்லவர்கள் காலத்தில் கோயில்களும், விக்கிரகங்களும் பெருகின.

உலகில் முதல் கோயில் வழிபாடு

கோயில் வழிபாடு அல்லது ஆலய வழிபாட்டின் ஆரம்பத்தைக் குறித்துப் பரிசுத்த வேதாகமத்தில் தான் பார்க்க முடிகிறது. மோசே இஸ்ரவேல் ஜனங்களை வழி நடத்தும் போது ஜனங்கள் சீனாய் மலை அடிவாரத்தில் ஒரு வருடம் தங்கியிருந்தார்கள். தேவன் சீனாய் மலையில் மோசேயிடம் பேசினார். அங்கே ஜனங்களுக்குச் சட்டதிட்டங்கள் கொடுத்தார். அதோடு, தேவன் ஜனங்களின் நடுவில் வாசம்பண்ண விரும்பினார். அதற்காக ஒரு வாசஸ்தலத்தை உண்டாக்கக் கட்டளை யிட்டார். மட்டுமல்ல அதின் மாதிரியை மோசேக்குக் காட்டி அதே வண்ணமாய்ச் செய்யக் கட்டளையிட்டார். அதின் அளவுகளையும் கொடுத்தார். செலுத்த வேண்டிய பலிகளையும் அவைகள் செலுத்தப்பட வேண்டிய விதங்களையும் குறித்துக் கற்பித்தார். இவைகளைக் குறித்து யாத் 25, 26, 27 அதிகாரங்க ளில் வாசிக்கிறோம்.

முதல் ஆராதனைக் கூடம்

தேவன் சீனாய் மலையில் காண்பித்த வண்ணமாகவும் அந்த அளவுகளின் படியேயும் முதற்கோயில் (ஆசரிப்புக் கூடாரம்) அங்கே கி.மு. 1461-ல் செய்யப்பட்டது. கானானில் இஸ்ரவேலர் சென்றடைந்த பின் அந்த ஆசாரிப்புக் கூடாரம் அனேக வருடங்கள் சீலோவில் வைக்கப் பட்டிருந்தது.

கற்களாலான முதல் தேவாலயம்

சாலொமோனின் நாட்களில் எருசலேமில் கற்களாலான முதல் தேவாலயம் கி.மு. 972-ல் கட்டப்பட்டது. அதற்குக் குறிக்கப்பட்ட ஆகம முறைப்படியே அந்த ஆலயம் கட்டப்பட்டது. அப்படியே அதன் பணிமுட்டுகளும் செய்யப்பட்டன.

கட்டுமானப்பணிகள்

I ராஜா 6 ,7 அதிகாரங்களில் எருசலேம் தேவாலயம் கட்டப்பட்ட விதங்கள் விளக்கப்படுகின்றன. அங்கே ஒடுக்கமான ஜன்னல்கள்,

சுற்றுக்கட்டுகள், அறைகள், ஒட்டுச்சுவர்கள், சுழல் படிகள், சித்திர வேலைகள், கொத்து வேலைகள், பொன் தகட்டால் மூடுதல், இரட்டைக் கதவுகள், தூண்கள் மேல் உத்திரங்கள், உத்திரங்கள் மேல் மச்சுப் பாவுதல், கும்பங்கள், ஜலதாரைகள் முதலானவைகளைக் குறித்து விளக்கப் படுகிறது. இவை யாவும் சைவக் கோயில்களில் நாம் பார்க்க முடிகிறது.

சைவ வைணவக் கோயில்கள் எருசலேம் தேவாலயத்தின் மாதிரியைப் பின்பற்றிப் பழைய ஏற்பாட்டு ஆகமங்களில் கூறப்பட்ட விதிகளின் படி கட்டப்பட்டவைகளாகக் காணப்படுகின்றன.

வெண்கலப் பணிமுட்டுகளும் குத்து விளக்குகளும்

யாத். 25:31-39; 27:3,19,20,21 வசனங்களில் பணிமுட்டுகளெல்லாம் வெண்கலத்தால் செய்யப்பட வேண்டுமென்றும், குத்துவிளக்கு எப்பொழுதும் எரிந்து கொண்டிருக்க வேண்டுமென்றும் கூறப்பட்டிருக்கிறது. சந்நிதி ஸ்தானத்தில் ஆசாரியர்கள் குத்து விளக்கைச் சாயங்காலந் தொடங்கி விடியற்காலை மட்டும் எரிய வைக்க வேண்டும் *(கி.மு. 1461).* இவை சைவக்கோயில்களிலும் கடைப் பிடிக்கப்படுகின்றன.

கண் விழித்திருக்கும் ராத்திரி

யாத். 12:42 -ல் கர்த்தர் இஸ்ரவேலரை எகிப்து தேசத்திலிருந்து புறபடப்பண்ணினதினால் அதை அவர்கள் முக்கியமாய் ஆசரிக்க வேண்டிய இராத்திரியாக்கினார். சைவர்களும் கண்விழித்திருக்கும் ராத்திரியை ஆசரிக்கிறார்கள்.

ஆசாரியனின் மணியோசை

யாத்.28 : 34 -ல் ஆசாரியனின் அங்கியின் ஓரங்களில் மணிகள் தொங்கவிடப்படவேண்டுமேன்று பார்க்கிறோம். இதை ஒட்டி கோவில் களில் பூசாரி மணியடிப்பது வழக்கமாயிருக்கிறது. அவ்வாறு யாத் 28:36-ல் தலையில் ஒரு பட்டத்தைக் கட்டும் முறையும் பார்க்கிறோம்.

அபிஷேக தைலம், சாம்பிராணி

யாத் 30:23-38 வசனங்களில் அபிஷேக தைலம் உண்டு பண்ணும் முறைகளும் சாம்பிராணி செய்யும் முறையும் சொல்லப்பட்டிருக்கின்றன. இவைகளையும் தூபம் காட்டுதலையும் நாம் சைவக் கோயில்களில் பார்க்கிறோம். ஆலய வேலைகள் செய்ய வேண்டிய வேலையாட்களைக் குறித்தும் அவர்கள் செய்ய வேண்டிய வேலைகளைக் குறித்தும் யாத். 31:1-6 வசனங்களில் பார்க்கிறோம்.

தமிழ்நாட்டில் அதிகக் கோயில்கள்

இந்தியாவில் முக்கியமான -275 சைவக் கோயில்களில் 230 கோயில்கள் தமிழ்நாட்டில் அமைந்துள்ளன. அவ்வண்ணமாக இந்தியா விலுள்ள முக்கியமான 108 வைணவக் கோயில்களில் 96 கோயில்கள் தமிழ்நாட்டிலேயே உள்ளன. எனவே சைவ வைணவக் கோயில்கள் தமிழ்நாட்டில் ஆரம்பிக்கப்பட்டுப் பிற இடங்களில் பரவின என்று அறிந்து கொள்ளலாம்.

கோயில்களில் பலிபீடம்

எருசலேம் தேவாலயத்தில் இருந்த வண்ணமாய்க் கோயில்களில் பலிபீடங்கள் வைக்கப்பட்டிருந்தாலும் பலிசெலுத்தப்படாதது குறிப்பிடத் தக்கதாகும். சைவ, வைணவக் கொள்கைகளில் ஒன்றான பலி நிறை வேற்றுக் கொள்கையே பலிபீடம் இருந்தும் பலி செலுத்தப்படாமையின் காரணமாகும்.

கோயிலில் கன்றுக்குட்டி

இஸ்ரவேலின் ராஜாவாகிய யெரொபெயாம் (கி.மு. 798 - 762) பொன்னினால் இரண்டு கன்றுக் குட்டிகளை உருவாக்கி ஒன்றைப் பெத்தேலிலும் ஒன்றைத் தாணிலும் ஸ்தாபித்தான் என்றும் கோவிலைக் கட்டி லேவியின் புத்திரர் அல்லாத ஈனமானவர்களை ஆசாரியர் ஆக்கி பண்டிகைகளும் ஏற்படுத்தினான் என்றும் I இராஜ .12 :28 to 33 வசனங்களில் வாசிக்கிறோம். சைவ வைணவக் கோயில்களில் கன்றுக்குட்டி இடம்பெறுவதும் நோக்கத்தக்கது.

அதிகாரம் 6

சமிஸ்கிருத மொழி தோற்றுவித்தல்

சமிஸ்கிருத மொழி

பொதுவாகச் சமிஸ்கிருத மொழி கிறிஸ்துவுக்கும் அனேக ஆண்டுகளுக்கு முன் இருந்த மொழியென்று பேசப்படுவதுண்டு. ஆனால் அது தவறாகும். சமிஸ்கிருத மொழி இந்தியாவில் கி.பி 2-ம் நூற்றாண்டில் திராவிடர்களால் உருவாக்கப்பட்ட மொழியாகும். உலகின் எந்தப் பகுதிகளிலும் எந்தக் காலங்களிலும் இது தாய்மொழியாய்ப் பேசப் படவோ உபயோகிக்கப்படவோ இல்லை என்பது குறிப்பிடத்தக்க தாகும். இது ஒரு குறிப்பிட்ட நோக்கத்துக்காக உருவாக்கப்பட்ட பொம்மை மொழியாகும்.

கி.மு 3-ம் நூற்றாண்டுக்குமுன்

கி.மு 3-ம் நூற்றாண்டில் திராவிடச் சக்ரவர்த்தியான அசோகன் புத்த மதக் கொள்கைகளைக் கல்வெட்டுகளிலும் ஸ்தூபிகளிலும் பொறித்து வைத்தான். அன்று இருந்த எல்லா மொழிகளிலும் அதை எழுதி வைத்தான். அந்நாட்களில் பெர்சியர், கிரேக்கர் முதலான அன்னியர்கள் இந்தியாவின் வடமேற்குப் பகுதிகளில் வசித்திருந்தார்கள். அவர்கள் கிரேக்க மொழி, அராமிக் மொழி ஆகிய அவரவர் மொழிகளைப் பயன்படுத்தி யிருந்தார்கள். ஆனால் அவர்களில் ஒருவரும் சமிஸ்கிருத மொழி பேசியதில்லை. ஏனென்றால் சமிஸ்கிருத மொழி அன்று இருந்த

தில்லை. எனவே கி.பி. 3ஆம் நூற்றாண்டில் அசோகன் எழுதிய கல்வெட்டுகளில்..... பாலி, அர்த்தமாகதி, கிரேக்கம், அராமிக் முதலான எல்லா மொழிகளும் பயன்படுத்தப்பட்ட போதிலும் சமிஸ்கிருதம் இடம் பெறவில்லை. இதிலிருந்து கி.மு 3-ம் நூற்றாண்டிலும் சமிஸ்கிருத மொழி வழக்கில் இருந்ததில்லை என்பது விளங்குகிறது.

சமிஸ்கிருதம் - முதல் கல்வெட்டு

சமிஸ்கிருத மொழி முதல் முதலாகக் கல்வெட்டுகளில் உபயோகிக் கப்பட்டிருப்பது கத்தியவாறில் உள்ள 'கிர்னார்' என்ற இடத்தில் காணப் படும் பாறையின் ஒரு பகுதியிலாகும். அது கி.பி. 150-ல் வாழ்ந்த ருத்திரதமனா (Rudradhamana) என்ற உஜ்ஜெயினி பிரபுவால் 'பிராமி' எழுத்துக்களில் பொறிக்கப்பட்டதாகும். அதே பாறையில் கி.மு 3-ம் நூற்றாண்டில் அசோகனால் பொறிக்கப்பட்ட 'பிராகிர்த' எழுத்துக்கள் இருப்பது குறிப்பிடத்தக்கதாகும்.

சமிஸ்கிருத மொழியின் காலம்

மேலே கூறப்பட்டவைகளிலிருந்து சமிஸ்கிருத மொழி கி.மு. 3ம் நூற்றாண்டு வரை வழக்கில் இருந்ததில்லை என்றும் அது கி.பி. முதலாம் நூற்றாண்டுக்குப் பின் தோற்றுவிக்கப்பட்ட ஒரு மொழியென்றும் அறிந்து கொள்ளலாம்.

சமஸ்கிருதம் - பொருள்

'சமிஸ்கரிப்பது' என்றால் சீர்ப்படுத்துவது என்று பொருள். சமஸ்கிருத மொழி என்பதின் பொருள் சீராக அமைக்கப்பட்ட அல்லது சமிஸ்கரிக்கப்பட்ட மொழி என்பதாகும்.

சமிஸ்கிருத மொழி தோற்றுவிக்கப்பட காரணம்

கி.மு 6-ம் நூற்றாண்டுக்குப்பின் பெர்சியர்கள், கிரேக்கர்கள், ரோமர்கள், சகர்கள், கூஷாணர்கள் ஆகிய அன்னியர்கள் கூட்டம் கூட்டமாக இந்தியாவின் வட மேற்கு எல்லைகளில் குடியேறி வசித்து

வந்தார்கள் என்று பார்த்தோம். இவர்கள் பல நாடுகளிலிருந்து வந்த படியால் பல பாஷைகள் பேசியிருந்தார்கள். ஆனால் அவர்களில் ஒருவராகிலும் சமிஸ்கிருத மொழி பேசியதில்லை. அறிஞர்களின் ஆராய்ச்சிப் படி கி.பி 1-ம் நூற்றாண்டில் இந்தியாவுக்கு வந்த தோமாவின் கடவுள் கொள்கைகளைத் திராவிட மக்கள் ஏற்றுக் கொண்டார்கள் என்றும் அந்தக் கொள்கைகளைத் தீவிரமாக எல்லா மக்களிடமும் பரவச் செய்வதற்காக அன்று பேசப்பட்ட தமிழ், பாலி, அர்த்தமாகதி, பாரசீகம், கிரேக்கம், அரமேயம், லத்தீன் ஆகிய எல்லா மொழிகளையும் ஒன்று சேர்த்துச் சீர்படுத்தி; அதாவது சமஸ்கரித்து திராவிட அறிஞர்கள் பொதுவான ஒரு புது மொழியை உருவாக்கினார்கள் என்றும் காணப்படுகிறது.

கடவுள் கொள்கையைப் பரப்ப

சமிஸ்கிருதம் இயல்பாக ஓரிடத்தில் அல்லது ஓர் இனத்தவர் மத்தியில் பேசப்பட்ட மொழி அன்று. மாறாக அது ஒரு குறிப்பிட்ட நோக்கத்துடன் அதாவது கடவுள் கொள்கையை அனைத்து மக்களுக்கும் அறிவிக்கத் திராவிட அறிஞர்களால் தோற்றுவிக்கப்பட்ட ஒரு மொழியென்று பார்க்கிறோம். புதிதாக உருவாக்கப்பட்ட இந்தச் சமிஸ்கிருத மொழி மூலம் திராவிட மக்கள் தாங்கள் அறிந்து கொண்ட கடவுள் கொள்கை களை அன்று இந்தியாவில் வசித்து வந்த எல்லா மக்களுக்கும் அறிவித் தார்கள். அதற்காகவே சமிஸ்கிருத மொழி உருவாக்கப்பட்டது.

அதிகாரம் 7

வேதங்கள் தோற்றுவித்தல்

வேதங்கள் எழுதப்பட்ட காலம்

பொதுவாக வேதங்கள் கிறிஸ்துவுக்கும் அனேக ஆண்டுகளுக்கு முன் எழுதப்பட்ட ஒன்றாகப் பேசப்படுவதுண்டு. ஆனால், அந்தக் கருத்து தவறானதாகும். வேதங்கள் சமிஸ்கிருத மொழியில் எழுதப்பட்ட மத நூல்களாகும். சமிஸ்கிருத மொழி கி.பி. 2-ம் நூற்றாண்டுக்கு முன் இருந்ததில்லை என்பதை முன்னால் பார்த்தோம். எனவே இவை (வேதங்கள்) 2-ம் நூற்றாண்டிற்குப் பிந்திய காலங்களில் தான் எழுதப் பட்டிருக்க வேண்டும். அதற்கு முன்னதாக எழுதப்பட்டதாக இம் மட்டும் சான்றுகளோடு எவராலும் நிரூபிக்கப்படவில்லை.

Dr. அலெக்ஸாண்டர் ஹாரீஸ் கருத்து

இதைக் குறித்து Dr. அலெக்ஸாண்டர் ஹாரீஸ் என்பவர் "The development of civilization and religion in India and its influence on the world" என்னும் நூலில் கீழ்கண்டவாறு கூறியுள்ளார்.

"The bibliographical evidences indicate that the vedas are written in the Grantha and Nagari scripts, and according to tradition veda vyasa, a Dravidian compiled and wrote the vedas. The Grantha Script belongs to the Southern group of scripts and veda vyasa being a Dravidian would certainly have used it since the earliest evidence for Grantha is only in the 5th C.AD, the vedas were written rather late".

வேதவியாசர்

கி.பி. முதலாம் நூற்றாண்டில் இந்தியாவுக்கு வந்த தோமா கடவுளைப் பற்றிய கொள்கைகளைப் போதித்தார். அதை ஏற்றுக் கொண்ட திராவிடர்கள் தாங்கள் அனுபவித்த பக்தி நிலைகளை எல்லாருக்கும் அறிவிக்கும் வகையில் சமிஸ்கிருத மொழியை உருவாக் கினார்கள் என்று பார்த்தோம். திராவிடரான வேதவியாசர் பலிக் கோட்பாட்டை விளக்கும் வகையில் முதலில் வேதங்களை எழுதினார்.

பலிகள்

கி.மு 6-ம் நூற்றாண்டு முதல் பல காலங்களிலும் இந்தியாவில் புகுந்து கொண்டே இருந்த அன்னியர்கள்; கூட்டம் கூட்டமாய் இந்தியா வின் வடமேற்குப் பகுதிகளில் சுற்றித்திரிந்தார்கள். அவர்கள் குதிரை, காளை, பசு ஆகிய மிருகங்களைத் தீயில் சுட்டுத் தின்று மது வகைகளை அருந்தி நாடோடிப் பாடல்களைப் பாடி வந்தார்கள். நாளடைவில் இது ஒரு வித பலி அல்லது யாகம் என்ற நிலை ஏற்பட்டது. திராவிடர்களும் தங்கள் பழந்திராவிட வழிபாட்டுப் பாடல்களைப் பாடிப் பலி செலுத்தி வந்தார்கள். தோமா பலி நிறைவேற்றுக் கொள்கையைப் போதித்த போதிலும் அன்றைய வேத புத்தகத்தில் அதாவது பழைய ஏற்பாட்டு நூல்களில் பலி செலுத்துவது குறித்து விவரிக்கப்பட்டிருந்தது. பலி நிறைவேற்றுக் கொள்கையை விளக்குவதற்குப் பலிக் கொள்கைகளைக் குறித்தும் விளக்க வேண்டியிருந்தது.

நான்கு வேதங்கள்

இந்நிலையில் சமிஸ்கிருதப் பண்டிதரான வேதவியாசர், மேற்கண்ட எல்லாப் பலி முறைகளையும் மனதிற்கொண்டு, சமிஸ்கிருத மொழியில் செய்யுள்களை 'ரிக்' என்ற பெயரிலும், இசையோடு கூடிய பாடல் களைச் சாமம் என்ற பெயரிலும், பலியிடும் முறைகளிலுள்ள பாடல் களை எஜுர் என்ற பெயரிலும் பிற பாடல்களை அதர்வணம் என்ற பெயரிலும் அமைத்து வேதத்தை நான்கு பகுதிகளாக உருவாக்கினார் என்று காணப்படுகிறது.

1. 'ரிக்' வேதம்

ரிக் வேதம் பத்து மண்டலங்களையுடையது. பத்தாம் மண்டலம் பிற் காலங்களில் சேர்க்கப்பட்டது என்று கூறப்படுகிறது.

பிரிவுகள்

மண்டலங்கள்	-	10
சூக்தங்கள்	-	1017
மந்திரங்கள்	-	10600

அக்கினிக்கு முக்கியத்துவம்

ரிக்கு வேதம் அக்கினியைப் புகழ்ந்துக் கொண்டே ஆரம்பிக்கிறது.

'அக்னி மீளே புரோகிதம்
யஜ்ஞசிய தேவம் ருத் விஜயம்
ஹோதாரம் ரதன தாதமாய், ருக் 1-1-1

எக்ஞ அல்லது யாகப் புரோகிதனும், தேவனும், ஹோதாரமும், முக்கிய தேவனுமான அக்னியைத் துதிக்கிறேன்.

சோமனைப் பற்றிய பாடல்

அபாம சோமா ம்ருதா அத்ரம கன்ய
ஜோதிர விதாம தேவான்
திம் நூ நமஸ்மான் க்றண வதராதி
கிழுதூர் திரமிர்த மர்த்யஸ்ய ருக்கு- 8-48-3

ஓ! சோமமே, நீ அமிர்தோடு கூடியவன். நாங்கள் உன்னைப் பானம் செய்து அமிர்தராகத் திகழ்வோம். பின்பு சொர்க்கத்தில் சென்று தேவர் களோடு பழகுவோம். அப்போது சத்துருக்கள் என்ன செய்வார்கள் ?

அந்நாட்களில் பிராமணர்கள் (ஆரியர்கள்) பசு, ஆடு குதிரை, எருமை முதலான மிருகங்களைப் பலி செலுத்தி அவைகளை ஆசையோடு சாப்பிட்டு சோம பானத்தை(மது) அருந்தி வந்தார்கள் என்று பார்க்கிறோம்.

பலிமாம்சம் வேகவைப்பது குறித்து

யோவாஜினம் பரி பஸ்யந்தி ப்கவம்

யஈ மாக்யூ சுரபிர் நிர்ஹரேதி

யெ சார்வதோ மாம்ச பிக்ஷாம் உபாசத

உதோ தோஷம பிதிர் ந இன்மது

சூலத்தில் இருந்து வெந்து கொண்டிருக்கும் குதிரையின் மணம் நன்கு விரும்பத்தக்க நிலையை எட்டும்பொழுது அதை எடுக்க வேண்டும். பசுவின் பாகங்கள் சரியாக வேகவைக்க வேண்டும்.

(வேகவைத்த மாமிசத்தை பங்குபோடுவதற்கு ஆசையோடு காத்தி ருந்தார்கள்)

ருக் 1 - 162 - 10

2. சாமவேதம்

இதன் மந்திரங்கள் பாடல்கள் ஆகும். அதிலுள்ள 75 மந்திரங்க ளைத் தவிர மற்றவைகளெல்லாம் ரிக் வேதத்திலிருந்து எடுக்கப்பட்ட வையாகும். இதில் மொத்தம் 1544 மந்திரங்கள் உள்ளனவென்று கூறப் படுகிறது.

3. யஜுர் வேதம்

இதில் *1999* மந்திரங்கள் உள்ளன. இவை பலிகளுக்கான மந்திரங்களாகும்.

4. அதர்வணம்

இதன் மந்திரங்கள் பிற்காலங்களில் உண்டாக்கப்பட்டவை என்று கூறப்படுகிறது. ஆரம்ப காலங்களில் வேதங்கள் வேதத்றயீ (மூன்று வேதங்கள்) என்று அழைக்கப்பட்டிருந்தன. அதர்வணத்துக்கு 20 காண் டங்களும் 5987 மந்திரங்களும் உள்ளன.

(மேலும் தகவல்களை அறிய விரும்புவோர் 'பாரதீய மத சம்கிரகம்' By Krishnankutty படிக்கவும்)

கி.பி.6-ம் நூற்றாண்டில் காணப்பட்ட மதங்கள்

கி.பி 6-ம் நூற்றாண்டில் இந்தியாவில் காணப்பட்ட மதங்களாவன:-

1. சமண மதம்

2. புத்த மதம்

திராவிடர்களின் இவ்விரு மதங்களும் நாத்திகக் கொள்கை உடையவைகளாயிருந்தன. அவை பலி மறுப்புக் கொள்கை உடையவைகளாகும். அவைகளில் பலி செலுத்துவது கிடையாது.

3. சைவம்

4. வைணவம்

ஆகிய இவ்விரு மதங்களும் தோமாவின் ஆதி இந்தியக் கிறிஸ்தவக் கொள்கைகளால் வளர்ச்சி அடைந்து கொண்டிருந்தன. இவையும் திராவிட மக்களால் பின்பற்றப்பட்ட மதங்களாகும். அவைகளில் பலி செலுத்தல் கிடையாது.

அந்நாட்களில் காணப்பட்ட வழிபாடுகள்

1. பழந்திராவிட வழிபாடு

அந்நாட்களில் திராவிட மக்களில் ஒரு பிரிவினர் தங்கள் பழங்கால வழிபாடுகளைக் கடைபிடித்து வந்தார்கள். அவர்கள் பலி செலுத்துவதுண்டு.

2. அந்நியர்களின் தீ வழிபாடு

இந்தியாவில் வந்தேறிய அன்னியர்கள் தீ வழிபாட்டுக் காரர்கள். இவர்கள் பின்நாட்களில் ஆரியர்கள் என்று அழைக்கப்பட்டார்கள்.

இந்த ஆரியர்களின் தீ வழிபாடு இயற்கை வழிபாட்டோடு சேர்ந்ததாகும். பிருத்வி, வருணன், அக்கினி, சூரியன், வாயு என்னும் ஐம்பெரும் பூதங்களையும் தியசு, அதிதி, மருத்துக்கள், இந்திரன், மித்திரன் முதலான பிற தேவர்களையும் அன்னியர்கள் வழிபட்டு

வந்தார்கள். திராவிட அறிஞர்கள் உருவாக்கிய வேதங்களையும் அன்னியர்களான ஆரியர்கள் பின்பற்றி அவற்றைத் தங்களுடையதாக்கிக் கொண்டார்கள். மிருகங்களைப் பலி செலுத்தி அவைகளின் மாம்சத்தைச் சாப்பிட்டு வந்தார்கள்.

மத ஒற்றுமை

கி.பி. 6-ம் நூற்றாண்டு இறுதி வரை இந்தியாவில் மத ஒற்றுமையும் மத நல்லிணக்கமும் இருந்து வந்தனவென்று காணப்படுகிறது. திரு. நீலகண்ட சாஸ்திரி என்பவர் இதைக்குறித்துக் கூறுகையில் "Till the close of the 6th century A.D, different Religious Sects lived together in adminerable harmony" என்று கூறுகிறார்.

அதிகாரம் 8

சைவ வைணவ இலக்கிய வளர்ச்சி

தோமா அப்போஸ்தலனின் கொள்கைகளின் அடிப்படையில் உருவான திருக்குறள், பக்திப் பாடல்கள், ஆகியவைகளைத் தொடர்ந்து திராவிட அறிஞர்கள் தமிழில் அனேகம் சமய இலக்கிய நூல்களை இயற்றினார்கள்.

இவ்விலக்கியங்களை ஆராய்ந்து பார்க்கும் போது அவைகள் அனைத்தும் தோமாவினால் புகட்டப்பட்ட விவிலியத்தின் அடிப்படை கருத்துக்கள் என்று அறிந்து கொள்ளலாம்.

சைவ சித்தாந்தம்

சைவமதத்தின் கொள்கைகள் சைவ சித்தாந்தம் என்று அழைக்கப் படுகிறது. சைவ சித்தாந்தம் 14 சாஸ்திரங்கள் அடங்கியதாகும். இது மெய் கண்ட சாஸ்திரம் என அழைக்கப்படுகிறது. சைவ சித்தாந்த சாஸ்திரங்கள் மெய்கண்டாரால் எழுதப்பட்ட சிவஞான போதத்தின் அடிப்படையில் எழுதப்பட்டவையாகும்.

சிவஞானபோதம்

சிவஞானபோதம் கி.பி 13-ம் நூற்றாண்டில் மெய்கண்டாரால் எழுதப்பட்டதாகும். இது சூத்திரத்தால் ஆக்கப்பட்டது. சூத்திரம் என் பது பெரிய ஆலமரத்தை ஒரு சிறு புல்லின் நுனியிலுள்ள பனித்துளியில்

பிரதிபலித்துக் காட்டுவது போன்று பரந்த கருத்துக்களைச் சிறு சூத்திரத்தில் பிரதிபலிப்பதாகும்.

உள்ளடக்கம்

சிவஞான போதத்தில் 40 வரிகள் அடங்கிய 12 சூத்திரங்கள் மட்டுமே உள்ளன. சிவஞானபோதம் என்றால் சிவம் அல்லது அன்பு ஆகிய ஞானத்தைப் போதிப்பது என்பதே பொருள். அதாவது யோ. 3:16-ல் கூறப்படும் தேவ அன்பு இங்கே விளக்கப்படுகிறது. ‘தேவன் தம்முடைய ஒரே பேறான குமாரனை விசுவாசிக்கிறவன் எவனோ அவன் கெட்டுப் போகாமல் நித்திய ஜீவனை அடையும் படிக்கு அவரைத் தந்தருளி, இவ்வளவாய் உலகத்தில் அன்பு கூர்ந்தார்’. சிவஞான போதம் கிறிஸ்தவ அடிப்படையில் எழுதப்பட்டிருப்பதால் இதைக் கிறிஸ்தவ அடிப்படையில் நோக்கினால் மட்டுமே அதின் விளக்கங்களைச் சரியாய் புரிந்து கொள்ள முடியும்.

சிவஞான போதத்தின் கருத்துக்கள்

பரிசுத்த வேதாகமத்தில் ஆதியாகமம் முதல் வெளிப்படுத்தின விசேஷம் வரைக் கூறப்பட்டிருக்கும் கருத்துக்களின் சத்து சிவஞான போதத்தில் தரப்பட்டுள்ள 12 சூத்திரங்களில் அடக்கப்பட்டுள்ளது. இதை 5 முக்கியப் பகுதிகளாகப் பிரித்துக் கூறலாம்.

5 பகுதிகள்

1. மனிதனின் படைப்பும் வீழ்ச்சியும்.
2. வீழ்ச்சியடைந்த மனிதனின் (ஆன்மாவின்) நிலை.
3. வீழ்ச்சியடைந்த மனிதனைக் கடவுள் தேடி வந்து மீட்பது.
4. மீட்கப்பட்டபின் மனிதனின் நிலை.
5. மீட்கப்பட்ட மனிதன் கடவுளோடு நித்திய வாழ்வில் இணைவது.

விளக்கத்திற்குச் சில எடுத்துக்காட்டுகள்

மனிதனின் படைப்பும் வீழ்ச்சியும் குறித்து

சூத்திரம் *-1*

அவன் அவள் அது எனும் அவை மூவினைமையின்
தோற்றிய திதியே ஒடுங்கி மலத்துளதாம்
அந்தம் ஆதி என் மனார் புலவர்

விளக்கம்

(அவன், அவள், அது) அவன் ஆகிய முதல் மனிதன் (ஆதாம்) அவளாகிய ஏவாள் அதுவாகிய உலகம் எனும் அவை மூன்றையும் (மூவினைமையின்) மூன்று வெவ்வேறு செயல்களால் (தோற்றிய திதியே) இறைவன் தோற்றுவித்தான். (ஒடுங்கி) அவை தூய நிலை யிலிருந்து ஒடுங்கி, (மலத்துளதாம்) பாவத்தில் விழுந்தன. (அந்தம் ஆதி) அது தூய நிலையின் அந்தமும் பாவ நிலையின் ஆரம்பவுமானது. (என்மனார் புலவர்) இது அறிஞர்கள் கூற்று

படைப்பும் வீழ்ச்சியும் - விவிலியத்தில்

விவிலியத்தில் கூறப்பட்டுள்ள படைப்பும் மனிதனின் வீழ்ச்சியும் குறித்து இங்கே தெளிவாக விளக்கப்படுகிறது. ஆதாம், ஏவாள், உலகம் ஆகிய மூன்றும் வெவ்வேறு வினைகளால் படைக்கப்பட்டதைக் குறித்து வேதம் தெளிவாய்க் கூறுகிறது. ஆதிமனிதனாகிய ஆதாம் மண்ணினால் படைக்கப்பட்டான். முதல் பெண்ணாகிய ஏவாள் எலும்பிலிருந்து படைக்கப்பட்டாள். உலகம் வார்த்தையினால் படைக்கப்பட்டது.

தூய நிலையும் பாவ நிலையும்

படைக்கப்பட்ட நிலையில் ஆதாமும் ஏவாளும் தூய நிலையில் இருந்தார்கள். சர்ப்பமானது (சாத்தான்) அவர்களை வஞ்சித்த போது அவர்கள் தூய நிலையிலிருந்து ஒடுங்கி, பாவநிலையில் விழுந்தார்கள். இது தூய நிலையின் அந்தமும் பாவநிலையின் தொடக்கவும் ஆயிற்று.

இவ்வாறு மனுக்குலத்தில் பாவம் பிரவேசித்த விதம் விளக்கப் படுகிறது. பரிசுத்த வேதாகமத்தின் அடிப்படையில் அல்லாமல் சிவ ஞான போதத்தின் இந்த சூத்திரத்துக்குச் சரியான விளக்கம் கொடுக்க ஏவராலும் கூடாது.

வீழ்ச்சியடைந்த மனிதனின் மீட்பு குறித்து

சூத்திரம்: *8*

ஐம்புல வேடரின் அயர்ந்தனை வளர்ந்து எனத்
தம் முதல் குருவு மாய்த் தவத்தினில் உணர்த்த விட்டு
அன்னியம் இன்மையின் அரன் கழல் செலுமே.

ஆன்மாவானது*(ஐம்புலவேடரின்)* மெய், வாய், கண், மூக்கு, செவி ஆகிய ஐம்புல இச்சைகளாகிய வேடனுடன் வளர்ந்து *(அயர்ந்தனை என)* தன்னையும் தன்னைப் படைத்த கடவுளையும் அறியாமல் மயங்கி விட்டதை*(தம்முதல்)* தமக்கு முதல்வனாகிய இறைவன் கண்டு *(குருவுமாய்)* குருவாக உலகில் வந்து *(தவத்தினில்)* பாவத்துன்பத்தைத் தாமே ஏற்றுக் கொண்டு, சிலுவை மரணமாகிய தவத்தை நிறை வேற்றியதை *(உணர்த்தி)* ஆன்மாவுக்கு உணர்த்திக் காட்டும் போது *(விட்டு)* ஆன்மாவானது தன் பாவத்தை விட்டு பிரிந்து, *(அன்னியம்-இன்மையின்)* இறைவனோடிருந்த பிளவு நீக்கப்பட்டு *(அரன்)* இறைவனின் *(கழல் செலுமே)* திருவடியை சென்று அடையும்.

அங்குக் கூறப்படும் எடுத்துக்காட்டு

இதைச் சைவ சித்தாந்தம் ஒரு எடுத்துக்காட்டுடன் விளக்குகிறது:-

ஒரு ராஜா தன் மகனை இழந்துவிட்டான். அந்த மகன் வேடர் களோடு வேடனாகக் காட்டில் வசிக்கிறான். தான் ஒரு ராஜாவின் மகன் என்பதையும் அவன் மறந்துவிட்டான். ஒரு நாள் ராஜா தன் மகன் வேடர்களோடு காட்டில் வசிப்பதை அறிய வந்தான். உடனே அவனைப் பார்க்க விரும்பினான். ஆனால் தான் ராஜாவாக அங்குச் சென்றால் மகன் தன்னிடம் வராமல் ஓடிவிடக் கூடும் என்று உணர்ந்தான். எனவே

தானும் ஒரு வேடனாக வேடம் பூண்டு காட்டுக்குச் சென்றான். மகனோடு பேசினான். உண்மையை விளக்கிக் கூறினான். பின்பு தன்னோடு அழைத்துக் கொண்டு சென்றான்.

விவிலிய விளக்கம்

தேவ சாயலாகப் படைக்கப் பட்ட மனிதன் பாவத்துக்கு உட்பட்டு தேவனை விட்டுத் தூரம் போனான். உலகச் சிற்றின்பத்திற்குத் தன்னை ஒப்புக் கொடுத்தான். தப்பிப் போன மனிதனை மீண்டும் தன்னிடம் சேர்ப்பதற்காகத் தேவன் பரலோகத்தை விட்டுப் பூமியில் ஒரு மனிதாக அவதரித்து அவனை இரட்சித்து மறுபடியும் தம்மிடம் சேர்த்துக் கொள்கிறார்.

இழந்து போனதைத் தேடவும் இரட்சிக்கவுமே மனுஷ குமாரன் வந்திருக்கிறார். *(லூக் 19 :10)*. பாவிகளை ரட்சிக்கக் கிறிஸ்து இயேசு உலகத்தில் வந்தார் *(1 தீமோ1:15)*; அவர் தம்மைத் தாமே வெறுமை யாக்கி அடிமையின் ரூபமெடுத்து, மனுஷர் சாயலானார். *(பிலி 2:7)*

மீட்கப்பட்ட மனிதன் கடவுளோடு இணைதல் குறித்து

சூத்திரம்-12

செம்மலர் நோன்தாள் சேரல் ஒட்டா
அம்மலம் கழீஇ அன்பரோடு மரீஇ
மாலற நேயம் மலிந்தவர் வேடமும்
ஆலயந்தானும் அரன் எனத் தொழுமே.

பொருள்

(செம்மலர்நோன் தாள்) மனிதனுக்காகத் தம் உயிரை பலியாக் கியதால் ரத்தம் சொட்டிக் காட்சி அளிக்கும் சிவந்த பாதங்களை (சேரல் ஒட்டா) சேரவிடாமல் தடுத்து நின்ற(அம்மலம் கழீஇ) அந்தக் கொடிய பாவம் கழுவப்பட்டவர்கன் (அன்பரொடு மரீஇ) அன்பராகிய அவ ரோடு (இறைவனோடு) இணைக்கப்பட்டு (மால்அற) மயக்கம் நீங்கி, (நேயம் மலிந்து) தேவ அன்பால் நிரப்பப்பட்டு (அவர் வேடமும்)

இறைவனின் மகிமையின் சாயலைப் பெற்று (அரன்) இறைவனோடு (ஆலயம் தானும் என) மகிழ்ந்து உறையும் கோயிலாக அமைந்து இறைவனை என்றும் வாழ்த்தி இன்புறுவார்கள்.

விளக்கம்

சிலுவைத் தவத்தால் சிந்தப்பட்ட இரத்தம் இறைவனாகிய இயேசுவின் காலடிகளில் காணப்படுவதால் அவை செம்மலரைப் போல் காட்சியளிக்கின்றன. ஒரு மனிதனை கடவுளோடு சேரவிடாமல் தடுத்து நிறுத்துகின்ற மலமாகிய பாவம் இயேசுவின் சிவந்த பாதங்களிலிருந்து வரும் இரத்தத்தால் கழுவப்படுகிறது. அப்பொழுது அவனைப் பற்றி நின்ற மயக்கம் நீக்கப்படுகிறது.

இந்த நிலையை அடைந்த மனிதர்கள் கடவுளோடு இணைந்து வாழத் தகுதி அடைகிறார்கள். அப்படிப்பட்டவர்கள் (மீட்கப்பட்டவர்கள்) இயேசுவின் வருகையில் பழைய சரீரத்தின் தன்மைகளைக் களைந்து மறுரூபமடைந்து இயேசுவோடு சேர்த்துக் கொள்ளப்படுகிறார்கள். அவர்கள் இயேசுவோடு கூட இணைந்து நித்தியகாலமாகத் தேவனைத் துதித்து மகிழ்ந்திருப்பார்கள். இது மீட்கப்பட்டவர்களின் நித்திய வாழ்வு ஆகும்.

விவிலியத்தில்

1யோ.1:7-ல் "கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவின் இரத்தம் சகல பாவங்களையும் நீக்கி நம்மைச் சுத்திகரிக்கும்" என்றும், ஏசா *35:10* -ல் "கர்த்தரால் மீட்கப்பட்டவர்கள் திரும்பி ஆனந்தக் களிப்புடன் பாடிச் சீயோனுக்கு வருவார்கள் "என்றும், *1* கொரி. *15 : 52, 1* தெச. *4:16, 17*-ல் "எக்காளம் தொனிக்கும் அப்பொழுது.... நாமும் மறுரூபமாக்கப் படுவோம்; கர்த்தர் தாமே... இறங்கி வருவார்; அப்பொழுது கிறிஸ்துவுக்குள் மரித்தவர்கள் முதலாவது எழுந்திருப்பார்கள். பின்பு உயிரோடிருக்கும் நாமும்.... மேகங்கள் மேல் அவர்களோடே கூட ஆகாயத்தில் எடுத்துக் கொள்ளப்பட்டு இவ்விதமாய் எப்பொழுதும் கர்த்தருடனே கூட இருப்போம் என்றும் வாசிக்கிறோம்.

ரத்தினச்சுருக்கம்

இவ்விதமாய்ச் சிவஞான போதம் விவிலியத்தின் முக்கியக் கருத்துக்களான, மனிதனின் மகிமையான படைப்பு, மனிதனின் வீழ்ச்சி, வீழ்ச்சியால் பாவம் பிரவேசித்தல், பாவத்திலிருந்து மீட்டுக் கொள்ள கடவுள் மனு உரு ஆதல், கடவுள் தம்மையே பலியாக்குதல், அதன் மூலம் மீட்பைச் சம்பாதித்தல், அந்த மீட்பை ஏற்றுக் கொண்டவர்கள் மறுரூபமடைந்து கடவுளோடு சேர்க்கப்பட்டு நித்திய சந்தோஷம் அனுபவித்தல் ஆகிய முக்கிய அம்சங்கள் அனைத்தும் இரத்தினச் சுருக்கமாக விளக்கப்படுவதைப் பார்க்கிறோம்.

மற்றும் பாடல்கள்

இதே வண்ணமாய்க் கிறிஸ்தவத்தின் அடிப்படைக் கொள்கைகளை வேறு அனேக சைவ, வைணவப் பாடல்களிலும் காணலாம். எடுத்துக் காட்டாக :-

a) *கடவுள் ஏன் மனிதனாய் பிறந்தார் என்பதைப் பற்றி:*

i) *"பொய்ந்நின்ற ஞானமும் பொல்லா ஒழுக்கும் அழுக்குடம்பும்*
இந்நின்ற நீர்மை இனியாம் உறாமை உயிர் அளிப்பான்
எந்நின்ற யோனியுமாய்ப் பிறந்தாய் இமையோர் தலைவா"

(நம்மாழ்வார் திருவிருத்தம் 1-3580)

பொருள்

கறைபட்ட ஞானமும், தவறான ஒழுக்கமும், அழுக்கு (பாவம்) நிறைந்த உடம்பும் நம்மை ஆட்கொள்ளாமல் நமக்கு நல்லதோர் வாழ்வைத் தருவதற்காகவே இறைவன் ஒரு ஸ்திரீயில் பிறந்தார்.

ii) *"இறவா இன்பத்து எமை இருத்த*
வேண்டிப் பிறவா முதல்வன் பிறந்தான்."

(போற்றிப்ப ஃறொடை 69)

பொருள்

நீங்காத நித்திய இன்பத்தில் நாம் இருக்க வேண்டும் என்பதற்காகப் பிறவா முதல்வனாகிய இறைவன் பிறந்தான்.

b) சிருஷ்டி பாவத்தில் வீழ்ந்த காரணத்தைக் குறித்து

"முக்தி முதற் கொடிக்கே மோகக் கொடி படர்ந்து
அத்தி பழுத்தது என்று உந்தீ பற
அப்பழம் உண்ணாதே உந்தீ பற"

(திருவுந்தியார் - 41)

பொருள்:

முக்தி நிலையாகிய இன்ப நிலையில் படைக்கப்பட்டவற்றுள் முதல் கொடியில் (ஆதாம்) மோகமாகிய பாவக் கொடி படர்ந்தது. எப்பொழுதென்றால் 'உண்ணாதே' என்று கூறிய பழத்தை அவன் உண்டபோது.

விவிலியத்தின் விளக்கம்

'அப்பழத்தை உண்ணாதே' என்று தேவன் முதல் மனிதனாகிய ஆதாமுக்குக் கட்டளையிட்டார். ஆனால் அவன் கடவுளின் கட்டளையை மீறிப் பாவம் செய்த போது, முதல் கொடியாகிய ஆதாமில் மோகக் கொடியாகிய பாவம் படர்ந்தது.

எனவே ஆதாம் வழி பிறக்கிற மக்கள் அனைவருமே பாவத்துக்கு உள்ளாயினர். இவ்வாறு பிறக்கும் போதே அவர்களைத் தொடர்ந்து வருகின்ற பாவத்தை 'சகஸமலம்"(இயல்பாகவே வரும் பாவம்) என சைவமும் "ஜென்மபந்தம்"என வைணவமும் குறிப்பிடுகின்றன.

c) மனிதரை மீட்கக் கடவுள் மனிதனானார்

"அவன் கண்டாய் நன்னெஞ்சே ஆரருளும் கேடும்
அவன் கண்டாய் ஐம்புலனாய் நின்றான் அவன் கண்டாய்"

(நாலாயிர திவ்விய பிரபந்தம் இயற்பா இரண்டாந் திருவந்தாதி (24)-3307)

பொருள்

மாசே இல்லாத கடவுள் மாசுள்ள மனிதனின் பாவத்தை அறுத்து மீட்பதற்காக ஐம்புலன்களையுடைய மனிதனானார்

சித்தர்கள் பாடல்கள்

சித்தர்கள் கடவுளோடு நெருங்கிய உறவை வளர்த்தவர்கள். அவர்கள் கடவுளின் அருளும் வல்லமையும் அதிகமாய் பெற்று அனேகப் பாடல்களையும், இலக்கியங்களையும், தத்துவங்களையும், சாத்திரங்களையும் இயற்றினார்கள். மட்டுமல்ல, அவர்கள் அந்நாட்களில் எழுந்த பொல்லாத பிராமணீய ஜாதிக்கொள்கைகளை எதிர்த்தார்கள். ஆரியர்கள் திராவிடர்களின் மதங்களில் பல திருக்குகள் செலுத்தி ஆரிய வைதீகத்துக்கு அடிமைப்படுத்த முயற்சித்த போது அதைச் சித்தர்கள் எதிர்த்தார்கள்.

அகஸ்தியர் என்ற சித்தரின் பாட்டு

அகஸ்தியர் கடவுளின் பிறப்பு இறப்பு, உயிர்ப்பு ஆகியவற்றைச் சுட்டிக் காட்டிப் பாடும் பாடல்

"வணங்குவாய் செகசோதி ஒருவனாகி
மாநிலத்தை ஒரு நொடியில் வகுத்தே மண்ணில்
குணமான மனிதரையும் படைத்த பின்பு
குவலயத்தில் தானுதித்துக் குருவாய் வந்து
சனமான சமுசாரம் ஒன்றில்லாமல்
சன்னியாசி போலிருந்து தவத்தைக் காட்டி
அன்பான சித்தர்களை இருத்திப் போட்டு
அகண்டதலஞ் சென்றவரை அண்டுவாயே"

அதிகாரம் 9

வேதாந்த வளர்ச்சி

திராவிடராகிய வேதவியாசரால் சமிஸ்கிருத மொழியில் எழுதப் பட்ட வேதங்களைக் குறித்து முன்னே பார்த்தோம்.

வேதங்களை விளக்குவது பிராமணங்களாகும். பிராமணங்களோடு இணைக்கப்பட்டவை ஆரண்யகங்கள். ஆரண்யகங்களின் கடைத்துகை யாக இருப்பவை உபனிஷத்துக்கள். எனவே ஒவ்வொரு வேதங்களுக் கும் பிராமணங்களும், ஆரண்யகங்களும், உபனிஷத்துக்களும் உண்டு.

வேதங்களின் பிராமணங்கள்

1. ரிக் வேத பிராமணங்கள்

ஐதரேயம், கவுஷிதம் போன்றவை

2. சாம வேத பிராமணங்கள்

சாந்தோக்கியம் போன்றவை

3. சுக்ல எஜுர் வேதத்தில்

சதபதப் பிராமணம் போன்றவை

4. யஜுர் வேதத்தில்

தைத்தரீய பிராமணம் போன்றவை

5. அதர்வண வேதத்தில்

கோபதப் பிராமணம் போன்றவை

உபநிஷத்துக்கள்

இவை வேதங்களின் விளக்க உரைகளான பிராமணங்களுடையவும் ஆரண்ணியகங்களுடையவும் கடைத்துகையாக உண்டாக்கப்பட்டவை. இவைகளுக்கு வேதாந்தம் என்று பெயர்.

பிரிவுகள்

ரிக் வேதத்தில் 21 பிரிவுகளும், யஜுர் வேதத்தில் 109 பிரிவுகளும், சாம வேதத்திற்கு 1000 பிரிவுகளும் ஒவ்வொரு பிரிவுகளுக்கும் ஒவ்வொரு உபனிஷத்துக்களும் உள்ளதாக முக்தி கோபனிஷத்தில் சொல்லப்படுகிறது. ஆனால் 108 உபனிஷத்துக்கள் முக்கியமானவை என்றும் அது கூறுகிறது.

1. ரிக்வேத உபனிஷத்துக்கள்

ஐதரேயம் போன்ற - 10

2. கிருஷ்ண யஜுர் வேதிகம்

கடம், தைத்தரீயம் போன்ற - 30

3. சுக்ல யஜுர் வேத சாகியம்

ப்ரகதாரண்யம் போன்ற -19

4. சாம வேதம்

கேனம், சாந்தோக்கியம் போன்ற - 16

5. அதர்வ சாகீயம்

முண்டகம், மாண்டுக்யம் போன்ற -31

தசோபனிஷத்துக்கள்

உபனிஷத்துக்களில் மிக முக்கியமானவையாகக் கருதப்படுபவை தசோபனிஷத்துக்கள் எனப்படுகின்றன. அவையாவன :

"ஈசம், கேனம் கடம்ப்றஸ்ன முண்டக மாண்டூக்கிய, தித்திரி
ஐதரேயம், சஃ்ச்சாந்தோக்கியம் ப்ரஹதாரண்யகம் ததா"

கருத்துக்களின் வேறுபாடு

வேதங்களில் பல முறைகளிலான விளக்கங்களும் சிந்தனைகளும் காலாகாலங்களில் அளிக்கப்பட்டு வந்தன. நூல்களை எழுதுபவர்கள் தங்கள் கருத்துக்களை வலியுறுத்தினார்கள். உபனிஷத்தை இயற்றியவர்களும் வேறுபட்ட கருத்துடையவர்களாயிருந்தார்கள். எனவே உபனிஷத்துக்கள் ஒவ்வொன்றும் வேறுபட்ட கருத்துடையவைகளாகவும் காணப்படுகின்றன.

வேதமும் வேதாந்தமும்

பழைய ஏற்பாட்டுச் சமயம் பலி செலுத்தி வழிபட்ட சமயமாகும். அது போல ஆரியர்களால் ஏற்றுக் கொள்ளப்பட்ட வேதங்களும் பலி செலுத்தும் முறைகளைக் கூறுவனவாகும். புதிய ஏற்பாடு பலி செலுத்தும் முறைகளை நிறுத்தி விடுவனவாகும். அது குமாரனாகிய கிறிஸ்து மனுக்குலத்தின் பாவ பரிகாரத்துக்காகத் தம்மையே பலி செலுத்தி விட்டபடியால் இனிமேல் பலி செலுத்தத் தேவை இல்லை என்ற பலி நிறைவேற்றுக் கோட்பாட்டை வலியுறுத்துகிறது. அதே வண்ணமாய் வேதாந்தம் வேதங்களில் கூறப்படும் பலிக் கோட்பாட்டை நிறுத்திப் பலி நிறைவேற்றுக் கோட்பாட்டை வலியுறுத்துகிறது. வடநாட்டில் தோமாவின் ஊழியம் வேதாந்தமாக வளர்ந்தது.

வேதாந்தத்தின் அடிப்படை நூல்கள்

வேதாந்தத்தின் அடிப்படையான நூல்கள் 'பிறஸ்தான த்றயா' என்று அழைக்கப்படுகின்றன. அவையாவன 1. உபனிஷத்துக்கள் 2. பிரம்ம சூத்திரம் 3. பகவத் கீதை ஆகியவையாகும்.

தரிசனங்கள்

உபனிஷத்துக்கள் பெரும்பாலும் உரைநடை வடிவங்களில் அமைந்துள்ளன. அவை பற்பல காலங்களில் பற்பல முனிவர்களின் மாணாக்கள் எழுப்பிய வினாக்களுக்கு அளிக்கப்பட்ட விடைகளாகும். உபனிஷத்துகளின் கருத்துகளை ஒன்றுபடுத்தி விளக்கும் முயற்சிகளாக வேதாந்தத் தரிசனங்கள் காணப்படுகின்றன. அந்தத் தரிசனங்களாவன :-

1. சாங்கியம் 2. யோகம் 3. நியாயம் 4. வைசேடிகம் 5. பூர்வ மீமாம்சை 6. உத்தர மீமாம்சை என்பவை ஆகும்.

பூர்வ மீமாம்சை

தரிசனங்களில் பூர்வ மீமாம்சை மட்டும் ஆரியரான ஜைமினி எழுதியுள்ளார். மற்றவை எல்லாம் திராவிடர்களான கபிலன், பதஞ்சலி, அக்ஷபாதன், கணாதனன், பாதராயணன், வியாசர் ஆகியோர் எழுதியவை. ஜைமினி என்பவர் பலிக் கோட்பாடு தொடர வேண்டும் என்ற கருத்தில் புரோகிதருடைய நலனுக்காக எழுதிய தரிசனமே பூர்வ மீமாம்சை என்பது.

பிரம்ம சூத்திரம்

பூர்வ மீமாம்சையைத் தவிர மீதமுள்ள 5 தரிசனங்களையும் இணைத்து பிரம்ம சூத்திரம் என்னும் வேதாந்தச் சூத்திரம் வியாசரால் இயற்றப் பட்டது. இது பிரம்மனாகிய கடவுளைப் பற்றிய ஞானத்தை விளக்கி உரைக்கிறது. பிரம்மன் என்பது இயேசுக் கிறிஸ்துவையே குறிக்கும் என்றும் 'பிரம்ம சூத்திரம்' இயேசுக்கிறிஸ்துவைப் பற்றிய ஆன்மீக ஆராய்ச்சியே ஆகும் என்றும் காணப்படுகிறது. பிரம்ம சூத்திரம் சாரீரக 'மீ மாம்சை' என்ற பெயரிலும் அழைக்கப்படுகிறது. அதாவது சரீரத்தில் வந்த கடவுளைப் பற்றிய ஞானம் என்பது இதன் பொருள். இது இயேசுவைப் பற்றியே இயற்றப்பட்ட நூல் என்பதைச் சமீப கால ஆராய்ச்சிகள் விளக்குகின்றன. வியாசரின் உத்தர மீமாம்சை வேதாந்தம் என்றே அழைக்கப்படுகிறது.

பலி நிறைவேற்றுக் கோட்பாடு

வியாசரின் கருத்துகள் அனைத்தும் பலிநிறைவேற்றுக் கோட்பாட்டை அடிப்படையாகக் கொண்டவையாகும் .கடவுள் மனிதனாகி மனிதனுக்காகப் பலியாகிவிட்டார். எனவே இனிமேல் மனிதன் பலி செலுத்த வேண்டியதில்லை என்னும் கருத்து தோமாவால் உபதேசிக்கப்பட்டபடியால் அது வேதாந்தமாக இந்தியாவிலும் ஏற்றுக்கொள்ளப்பட்டது. பாவப்பரிகாரத்துக்குப் பலிகள் தேவை என்பதற்காக வியாசர் தாம் இயற்றிய வேதங்களில் பலிக் கோட்பாட்டை விளக்கினார். ஆனால் தேவனே மண்ணில் வந்து பலியாகி விட்டதால் இனிமேல் மனிதன் பலி செலுத்தத் தேவையில்லை என்பதே பலி நிறைவேற்றுக் கோட்பாடு. இதை விளக்குவதே வேதாந்தம்.

வேதாந்தத்தில் பலி நிறைவேறல்

ரிக் வேதம் 10 - ஆவது காண்டத்தில் பிரஜாபதி அல்லது யஜ்ஞ புருஷனைக் குறித்துச் சொல்லப்படுகிறது. வேதத்தின் அந்தமாக யஜ்ஞ புருஷன் பலியாக்கப்பட வேண்டும். அது பாவியரின் பாவங்களுக்குப் பரிகாரமாகும். யஜ்ஞ புருஷன் பலியாக்கப்பட்ட பின் வேதங்களில் கூறப்படும் பலி செலுத்தப்பட வேண்டியதில்லை. இதுவே வேதாந்தமாகும்.

யாக புருஷன்

இந்த யஜ்ஞ புருஷனைக் குறித்து ரிக் வேதத்தில் பின்னால் சேர்க்கப்பட்ட 10-ஆவது காண்டத்திலும் மற்றும் உபநிடதங்களிலும் பார்க்கலாம்.

பிராஜாபதி ஒரு 'யாக' சரீரத்தை விரும்பினார்

தஸ்யஹ பிரஜாபதே ரத்தமேவ
மர்த்யமாஸி தர்த்தம மிற்தம்
சதேவேத்ய ஆத்மானம் பிறதாய
அதைய்த மாத் மன பிறதிமான மஸ்ய

ஜத்யல் யஜ்ஞும் தஸ்மா தாக்யூ

பிரஜாபதிர் யஜ்ஞ

சதபத பிராமணம் 10-1-3:2

பொருள்

பிரஜாபதி தனக்குப் பாதி அழிவுக்குரியதும், பாதி அழிவில்லாதது மான ஒரு சரீரத்தை வாஞ்சித்து அதைப் பெற்றுக் கொண்டார். அதை அவர் தாமாகப் பலியாக்கினார். எனவே பிரஜாபதியே யஜ்ஞும் அல்லது யாகம் ஆனார். இது இயேசு கிறிஸ்துவைத் தவிர வேறு ஒருவருக்கும் பொருந்தாது. இயேசு மனுஷ குமாரனும் தேவகுமாரனுமாய் உலகத்தில் வந்து தம்மையே சிலுவையில் பலியாக்கினார்.

பிரஜாபதியே பலிப்பொருள்

"புருஷோவா வயஜ்ஞ"

புருஷனே தான் யஜ்ஞும் (யாகம்)

சாந்தோக்ய உப 3-16-1

"சேயா காமயத மேத்யம் ஸ இதம் ஸ்யால்

ஆத்மன் வ்யனேன ஸ்யமிதி"

பிரகதா. உப 1-2-7

பரிசுத்தமான ஒரு யஜ்ஞ (யாக) சரீரம் எனக்குண்டாகட்டும் என்று பிரஜாபதி விரும்பினார். (சங்கீதம் 40.6, எபி 10.6,7. காண்க).

பலி மிருகங்கள் கடவுள் பலிக்கு நிழலே

"தம் யஜ்ஞும் பற்ஹிஷி ப்றவ்ச்சன்

புருஷம் ஜாத மக்கிரத;

தேன தேவா அயஜந்தா

சாத்யா றுஷய ஸ்சயே"

ரிக்- புருஷ சூக்தம் 90-7

முதல்முதலாய் உண்டான அந்த யஜ்ஞ ரூபனான புருஷனைத் தேவர்களும் பலிப் பொருளாக ஏற்றுக்கொண்டு (பசு மற்றும் மிருகங்கள் என்ற நிலையில் ஏற்றுக் கொண்டு) யஜ்ஞும் செய்தார்கள்.

யஜ்ஞ புருஷனின் அற்பணம்

ய இமா விஸ்வா புவனானி ஜுஹ்வ த்றுஷிற்
ஹோதா ன்ய சீபத் பிதா ந:
ஸ ஆ சிக்ஷ த்ரமிணாமிச்ச மான :
ப்றதம ச்சதவராம் ஆ விவேச.

ரிக் 81:1

உலக சிருஷ்டிகரே எங்கள் பிதா. அவரே பலி செலுத்துபவர். அவர் தாமாகவே தம்மைப் பலியாக அர்ப்பணித்தார்.

இங்குக் கூறப்படும் பிரஜாபதி இயேசு கிறிஸ்துவுக்கே பொருத்தமானது. அவர் யஜ்ஞ சரீரத்தோடு பூமியில் வந்தார். (உலகத் தோற்றத்துக்கு முன் அடிக்கப்பட்ட தேவ ஆட்டுக் குட்டி) அவர் தாமாகவே தம்மை உலக வரலாற்றில் பலியாக்கினார். "அவர் உலகத்தில் பிரவேசிக்கும் போது ....ஒரு சரீரத்தை எனக்கு ஆயத்தம் பண்ணினீர் ....அப்பொழுது நான் தேவனே உம்முடைய சித்தத்தின் படி செய்ய இதோ வருகிறேன்...." எபி 10 :5,7.

முக்திக்கு ஒரே வழி

"தேவா ஹமேதம் புருஷம் மகாந்தா மதித்யவர்ணம் தமஸ: பரஸ்தாத்
சமேவ விதித் வாதி ம்றுத்யு மேதி நான்ய பந்தா வித்ய தேயனாய"

யஜுர் வேதம் 31:18

மகிமையுடையவராகிய இந்தப் பிரஜாபதியை ஒளிமயமானவராய் நான் காண்கிறேன். இவரை அறிவதால் மட்டுமே சாவை ஜெயிக்க முடியும். வேறு வழிகளே இல்லை. இவரே ஒரே வழி.

"நானே வழியும் சத்தியவும் ஜீவனுமாயிருக்கிறேன் என்னாலே அல்லாமல் ஒருவனும் பிதாவிடத்தில் வரான் " யோ. 14:6. மனிதனுக்காகப் பலியானவர் மற்றொருவரும் இல்லை. அவரை ஏற்றுக் கொள்பவருக்கு மட்டுமே இரட்சிப்பு உண்டு.

(இவைகளைக் குறித்து மேலும் அறிய விரும்புவோர் கிருஷ்ணன் குட்டி என்பவர் எழுதிய 'பாரதீய மத சம்கிரகம்' என்ற நூலைப் படிக்கவும்.)

அதிகாரம் 10

இதிகாசங்களும் புராணங்களும்

இதிகாசங்கள் இரண்டு

1. இராமாயணம்
2. மகா பாரதம்

இராமாயணம்

இதை எழுதியவர் வால்மீகி என்ற திராவிடர். இது பாலகாண்டம், அயோத்திய காண்டம், ஆரண்ய காண்டம், கிஸ்கிந்த காண்டம், சுந்தர காண்டம், யுத்த காண்டம், உத்தர காண்டம், என்று ஏழு காண்டங்களாகப் பிரிக்கப்பட்டிருக்கிறது.

இராமாயணக் கதைகள் அத்யாத்ம இராமாயணம், வால்மீகி இராமயணம், பாதாள இராமாயணம், தசமுக இராமாயணம் முதலான பல வடிவங்களில் உள்ளன. ஒவ்வொரு கதையும் ஒவ்வொரு விதமாகக் காணப்படுகிறது. சீதையை இராவணனின் மகளாகக் கூறும் கதைகளும் உள்ளன. இராமனின் கதை கற்பனைக் கதை என்று ஆர்.சி.தத் என்பவர் கூறியிருக்கிறார். ஞான சூரியன் என்ற நூலில் இராமர் கதை அசோக மன்னனை மனதிற் கொண்டு இயற்றப்பட்ட ஒரு கற்பனைக் கதை என்று கூறப்படுகிறது.

மகாபாரதம்

மகாபாரதத்தை இயற்றியவர் வியாசர் என்ற திராவிடர். உண்மைக் கதைகள், கற்பனைக் கதைகள், வரலாற்றுக் கதைகள், புராணங்கள் ஆகியவற்றைப் பொருத்தப்படுத்தும் முயற்சிகளாகும் மகாபாரதம் என்று பாரதீய தர்சனத்தில் ராதாகிருஷ்ணன் கூறுகிறார்.

பொருள் அடக்கம்

ஒரே குடும்பத்தின் அரச குமாரர்கள் ராஜ்யத்தின் உரிமை கோரி குழுவினராகப் பிரிந்து நடத்திய போர்தான் மகாபாரதத்தின் முக்கிய பொருள். இது ஆதிபருவம், சபாபருவம், வனபருவம், விராடம், உத்யோகம், பீஷ்மம், த்ரோணம், கர்ணம், சல்யம், சௌப்த்திகம், ஸ்திரீ, சாந்தி, அனுஸாஸனம், அஸ்வ மேதிகம், ஆஸ்ரமவாசிகம், மௌசலம், மகாபிரஸ்தானம், சொர்காரோகணம் என்ற பதினெட்டு அதிகாரங்களாகப் பிரிக்கப்பட்டிருக்கிறது. பீஷ்மபருவத்தில் ஒரு பாகம்தான் பகவத் கீதை.

பகவத் கீதை

இது பீஷ்ம பருவம் 25 முதல் 45 வரையிலான பாகங்களில் காணப் படுகிறது. கிருஷ்ணனுக்கும், அர்ஜீனனுக்கும், நடந்த உரையாடல் பகவத் கீதை என அழைக்கப்படுகிறது. கௌரவ பாண்டவர்கள் இரு பக்கங்களில் யுத்தத்திற்காக அணிவகுத்து நிற்கிறார்கள். போரின் மத்தியில் பாண்டவச் சேனையின் சுடரென ஜொலிக்கும் அர்ஜுனன் தேரை ஓட்டி வந்த கிருஷ்ணனிடம் தேரை நிறுத்தச் சொன்னதையிட்டு தேர் நிறுத்தப்படுகிறது. சுற்றிலும் நிற்கும் சகோதரர்களையும், பெந்துக்க ளையும், சினேகிதர்களையும், குருமாரையும் பார்த்து யுத்தம் செய்ய மனமற்றுப் போயிருந்த அர்ஜுனனை ஊக்குவித்து உற்சாகப்படுத்தி யுத்தம் செய்யத் தூண்டும் தத்துவ உபதேசம் ஆகும் கீதை.

அனாரியமான பாகவத மதத்தை ஆரிய தர்மத்துடன் ஒன்று சேர்த்து பாகவதத்தின் வாசு தேவக் கிருஷ்ண பக்திக்கு முக்கியத்துவம் கொடுத்து கிருஷ்ணனை உன்னதத் தெய்வமாக உயர்த்தி எழுதப்பட்ட ஒன்றாகும் கீதை என்று 'India Histroy'-யில் Sreedaramenon கூறியிருக்கிறார்.

புராணங்கள்

புராணங்கள் என்றால் பழங்காலங்களில் உண்டானவை என்று பொருள். மகா புராணம், உப புராணம் என்று இருவகைப் புராணங்களைக் காண்கிறோம். வேதாந்தங்களைச் சாதாரண மக்கள் புரிந்து கொள்ளும் விதம் அவற்றின் கருத்துக்களைக் கதைகளில் புகுத்தி எழுதப்பட்டவையாகும் புராணங்கள்.

பிரிவுகள்

புராணங்களை 1. பிரம்ம புராணங்கள் 2. விஷ்ணு புராணங்கள் 3. சிவ புராணங்கள் என மூன்றாகப் பிரித்துக் காட்டுகின்றனர்.

புராணங்களும் அவதாரங்களும்

அவதாரம் என்ற வார்த்தைக்குக் கீழே இறங்கி வருதல் என்பது பொருள். கடவுள் பரலோகத்தை விட்டு பூமிக்கு இறங்கி வந்தார் என்பதே அதின் பொருள். கடவுள் மனிதராகப் பிறந்தார் என்பது ஒரு வரலாற்று நிகழ்ச்சியாகும்.

இயேசுவைத் தவிர வரலாற்றில் மனிதனாகப் பிறந்த தேவன் மற்று எவரும் இல்லை. வரலாற்றுக்கு அடிப்படையான ஒன்றை விளக்குவதற்காகப் புராணக் கதைகள் உண்டாக்கப்பட்டன. புராணங்களில் விஷ்ணுவுக்கு 24 அவதாரங்கள் உள்ளதாகக் கூறப்படுகிறது. தேவிபாகவதப்படி 26 அவதாரங்கள் என்றும் கூறப்படுகிறது. சிலர் பாலபத்திரனையும் சிலர் புத்தரையும் அவதாரமாக எடுத்துக் கொள்கிறார்கள். ப்றுகுவின் சாபத்தால் விஷ்ணு அவதாரங்கள் எடுக்க வேண்டியதாயிற்று என்று விளக்கப்படுகிறது. பொதுவாக முக்கியமானதாகக் கூறப்படும் அவதாரங்கள் பத்து.

தசாவதாரங்கள்

மத்ஸ்ய, கூர்ம, வராஹச்ச, நரசிம்ஹச்ச, வாமனா;
ராமோ, ராமஸ்ச, ராமஸ்ச, கிருஷ்ண, கல்க்கிற், ஜனாற்தனா.

மத்ஸ்ய அவதாரம்

பிராம்மாவின் கைகளிலிருந்து வேதங்களை அபகரித்துக் கொண்டு சென்ற ஹயக்ரீவனைக் கொன்று வேதங்களை மீட்பதே இவ் அவதார நோக்கம்.

கூர்மம்

துர்வாச மகரிஷியின் சாபத்தால் சபிக்கப்பட்ட தேவர்களைச் சாபத்தினின்று விடுவித்து முன் நிலைமைக்குக் கொண்டு சேர்ப்பதற்கு மருந்தாகிய அமிர்தத்தை எடுக்க பால்கடல் கடையப்பட்டது. மந்தர மலை மத்தாகவும் வாசுகி என்ற சர்ப்பம் கயிறாகவும் உபயோகிக்கப் பட்டது. ஆனால் மந்தரமலை தாழ்ந்து போக ஆரம்பித்த போது விஷ்ணு ஆமையாக அவதரித்து மலையைத் தாங்கிக் கொண்டார் (மீட்டுக் கொண்டார்) என்பது புராணம்.

வராகம்

ஹிரண்யாக்ஷன் என்ற அசுரன் பூமியைக் கையில் எடுத்துக் கொண்டு பாதாளத்தில் ஓடி விட்டான். விஷ்ணு வராகமாய்(பன்றி) அவதரித்து ஹிரண்யாக்ஷனைக் கொன்று பூமியை மீட்டுக் கொண்டார்.

நரசிம்ஹம்

பக்தனான ப்ரஹ்ளாதனின் பிதாவான ஹிரண்யகசிபுவைக் கொல்வ தற்காக நரசிம்ஹமாக அவதரித்து ப்ரஹ்ளாதனை மீட்டுக் கொண்டார்.

வாமனன்

மகாபலியைக் கீழ்படுத்தித் தேவர்களை மீட்டுக் கொண்டார்.

பரசுராமன்

துன்மார்க்கர்களான சத்ரிய ராஜாக்களைக் கொன்று தர்மத்தை நிலை நாட்டினார்.

ஸ்ரீராமன்

இராவணனைக் கொன்று சீதையை மீட்டார்.

பலபத்ரன்

கிருஷ்ணனின் அவதாரத்தை ஆதரித்து உதவி செய்தார்.

ஸ்ரீறி கிருஷ்ணன்

துஷ்ட நிக்ரகம் செய்து தர்மம் நிலைநாட்டி நீதியை வளர்த்தார்.

கல்கி

கலியுகத்தில் அதர்மம் உன்னத நிலையில் எட்டும்போது துஷ்டரை நிக்கிரகம் செய்வதுதான் இந்த அவதாரத்தின் நோக்கம்

வரலாற்றில் அவதரித்தவர்

உலக வரலாற்றில் தேவன் மனிதனாக அவதரித்தார். அவர் இயேசு கிறிஸ்து ஒருவரே. அந்த வரலாற்று நிகழ்ச்சியைத் தோமா திராவிடர்களுக்கு விளக்கினார். பின்நாட்களில் அந்த வரலாற்று நிகழ்ச்சியை ஆதாரமாகக் கொண்டு பலகதைகள் உருவாக்கப்படுவதைப் பார்க்கிறோம். இவை புராணக் கதைகளென்று அழைக்கப்படுகின்றன. நடந்த ஒரே ஒரு வரலாற்று நிகழ்ச்சி (மனிதனை மீட்கக் கடவுள் உலகத்தில் அவதரித்தார் என்பது) பல புராணக் கதைகளில் கடவுள் உலகில் அவதரித்து மீட்டுக் கொள்கிறவர் என விளக்கப்படுகிறது.

அதிகாரம் 11

ஆதி இந்திய கிறிஸ்தவச் சின்னங்கள்

1. ஐரோப்பியர் வழி கிறிஸ்தவர்களின் சின்னம்

ஐரோப்பியர் வழி கிறிஸ்தவர்கள் இன்று சிலுவைச் சின்னத்தைத் தங்களுக்குப் புனிதமாக வைத்துக் கொள்கிறார்கள். ஆலய முகப்புகளிலும், ஆலயங்களுக்குள்ளும், சிலுவையைப் பல அமைப்புகளில் வைத்துக் கொள்கிறார்கள். வீடுகளிலும், அலுவலகங்களிலும், வாகனங்களிலும், விசேஷித்த எல்லா இடங்களிலும் சிலுவைச் சின்னத்தைப் பார்க்கலாம். பெண்களும் ஆண்களும் கூட சிலுவை அடையாளத்தை மாலைகளில் அணிகிறார்கள். மதகுருக்கள் தங்கள் கழுத்தில் தொங்க விடுகிறார்கள். இவையாவும் குமாரனாகிய கடவுள் (இயேசு) சிலுவையில் மாண்டு இரட்சிப்பை மக்களுக்குத் தந்தருளியதை நினைவு படுத்துவதே ஆகும்.

2. ஆதி இந்தியக் கிறிஸ்தவர்களின் சின்னம்

ஆதி இந்தியக் கிறிஸ்தவர்களும் தங்களுக்குச் சின்னங்களை வைத்துக் கொண்டார்கள். அவை திருநீறு, சந்தனம், குங்குமம் என்பவை ஆகும். பாவத்தைப் பரிகரிக்கும் அடையாளமாகத் திருநீற்றை உண்டாக்கும் விதத்தைக் குறித்து பரிசுத்த வேதாகமத்தில் (எண்.19 அதி) தான் நாம் முதல் முதலாகப் பார்க்க முடிகிறது. பிதா, குமாரன், பரிசுத்த ஆவியாகிய திரித்துவக் கடவுளைச் சுட்டிக்காட்டும் வகையில் திருநீற்றை மூன்று கோடுகளாகப் போடுகிறார்கள். அவற்றில் குமாரனைக் குறிக்கும் மையக்

கோட்டில் குமாரன் மரத்தில் மாண்டார் என்பதை நினைவுபடுத்தும் வகையில் சந்தன மரக்கட்டையை உரைத்து அடையாளம் போடுகிறார்கள். குமாரனாகிய கடவுள் மரத்தில் ரத்தம் சிந்தியதை நினைவு கூரும் வகையில் சந்தனத்தின் மேல் சிவப்புக் குங்குமம் துளி போன்ற பொட்டாகப் போடுகிறார்கள்.

சைவர்கள்

சைவர்கள் பொதுவாகத் திருநீறு சந்தனப் பொட்டு, குங்குமம் ஆகியவை அணிந்து கொள்ளுகிறார்கள். ஆனால் இந்த ஆசாரங்கள் எங்கிருந்து வந்தன, எதற்காகச் செய்யப்படுகின்றன என்பது குறித்து அவர்கள் சிந்திப்பதில்லை.

திருநீற்றுத் திருநாள்

கிறிஸ்தவத் திருநாட்களில் சாம்பற் புதன்கிழமை திருநீற்றுத் திருநாள் என்று சிறப்பிக்கப்படுகிறது. அந்நாளில் கிறிஸ்தவர்களின் சில பிரிவினர் தங்கள் நெற்றிகளில் திருநீறு பூசிக் கொள்ளுகிறார்கள். இது இயேசு கிறிஸ்துவின் பாடு மரணங்களைத் தியானம் செய்யும் தவசு காலத்தின் தொடக்க நாளிலாகும்.

விவிலியத்தில் திருநீறு

பழைய ஏற்பாட்டில் திருநீறு தயாரிக்கும் முறை குறித்து எண்.19 அதிகாரத்தில் பார்க்கிறோம். பழுதற்ற ஒரு செங்கிடாரியைப் பாளையத்துக்குப் புறம்பே எடுத்துச் சென்று அதை அடித்து அதின் தோலும் மாம்சமும் இரத்தமும் சாணியும் சுட்டெரித்து அந்தச் சாம்பலை வாரி சுத்தமான ஒரு இடத்திலே இஸ்ரவேல் புத்திரரின் சபைக்குத் தீட்டு கழிக்கும் பொருட்டாகக் கொட்டி வைக்க வேண்டும், அது பாவத்தைப் பரிகரிக்கும். புதிய ஏற்பாட்டு காலத்தில் இயேசுக் கிறிஸ்து இரத்தம் சிந்தியதால் அவருடைய இரத்தத்திற்கு முக்கியத்துவம் கொடுக்கப் பட்டிருப்பதை எபி *9 : 13, 14* -ல் வாசிக்கிறோம்.

சைவ, வைணவச் சமயங்களில் திருநீறு

திராவிடர்கள் தோமா அப்போஸ்தலரின் கிறிஸ்தவக் கொள்கை களை ஏற்றுப் கொண்டபடியால் ஏற்பட்ட விளைவுகளே சைவ, வைணவ மதங்கள் என்று பார்த்தோம். பழைய ஏற்பாட்டுக் காலத்திற்குப் பின் கிறிஸ்தவத்தின் அடையாளமாகச் சைவர்கள் திருநீற்றைப் பயன்படுத்த லானார்கள். பிதா, குமாரன், பரிசுத்த ஆவி ஆகிய கடவுளின் திரித்துவக் கோட்பாட்டை உலகத்தாருக்கு விளக்குவதற்காகத் திருநீற்றால் மூன்று கோடுகள் இடப்பட்டன. குமாரன் மரத்தில் இரத்தம் சிந்தியதால் பாவ மன்னிப்பு ஏற்பட்டது என்பதனை விளக்க மகனைக் குறிக்கும் மையக் கோட்டின் மத்தியில் மரத்தின் வழியாக இரத்தம் சிந்தினார் என்பதைத் தெரிவிக்க சந்தன மரத்தினால் ஆன சந்தனப் பொட்டும் அதின் மையத்தில் இரத்தத்தைக் குறிக்கச் சிவப்புக் குங்கும பொட்டும் இடப்பட்டு இயேசுக் கிறிஸ்துவின் நற்செய்தியைச் சைவர்கள் வெளிப்படுத்துகிறார்கள்.

திருநீற்றிலிருந்து திருமண்

சைவத்திலிருந்து வைணவம் பிரிய நேர்ந்த போது திருநீற்றிலிருந்து திருமண் அணியும் நிலை ஏற்பட்டது. இயேசு இரத்தம் சிந்தி நம்மை மீட்டுக் கொண்டார் என்பதைக் காட்ட நெற்றியில் மூன்று கோடுகள் செங்குத்தாக மேலிருந்து கீழாக இடப்பட்டன. குமாரன் இரத்தம் சிந்து வதைக் காட்ட மைய்யக்கோடு சிவப்புக் கோடாக மாற்றப்பட்டது. மேலிருந்து இரத்தம் வடிவதை காட்டச் சிவப்புக் கோடு மேலே ஒடுக்கமாகவும் கீழே வரவர விரிவாகவும் காட்டப்பட்டது.

பழைய ஏற்பாட்டில் கூறப்பட்டுள்ள திருநீற்றையும் புதிய ஏற்பாட்டில் கூறப்படும் இயேசு கிறிஸ்துவின் சிலுவை மரணத்தால் கிடைக்கப் பெறும் இரட்சிப்பையும் அடிப்படையாகக் கொண்டு ஆதி இந்தியக் கிறிஸ்தவர்கள் திருநீறு, சந்தனப் பொட்டு, குங்குமம் ஆகியவற்றை உபயோகித்து வந்தார்கள். பின்நாட்களில் ஆதி இந்தியக் கிறிஸ்தவ நிலைகள் திசை திருப்பப்படவே சைவ, வைணவ மதங்கள் இந்து மதம் என்ற போர்வைக்குள் சிக்கி இவை இன்று பொருள் இழந்தவையாய்க் காணப்படுகின்றன. மட்டுமல்ல, இவற்றின் உண்மை நோக்கத்தை அழித்துவிடத் தக்கதாய் திருநீறு, சந்தனம், குங்குமம்

மாற்றப்பட்டு காவிப் பொட்டு மட்டும் வைத்துக் கொள்ள மக்கள் இழுக்கப்படுகிறார்கள்.

ஓம், ஆம், ஆமேன்

ஆம் அல்லது ஆமேன் என்பதன் பொருள் அப்படியே ஆகக் கடவது என்பதாகும். விவிலியத்தில் பழைய ஏற்பாட்டில் அது கடவுளின் நாமமாகவும் கூறப்படுகிறது. ஓம் என்பதும் ஆம் என்பதற்குப் பதிலாய்ப் பயன்படுத்தும் சொல்லாகவே காணப்படுகிறது. யோவான் ஆதியிலே வார்த்தை இருந்தது அந்த வார்த்தை தேவனாயிருந்தது..... என்கிறார். ஆதி வார்த்தையின் தொனி (ஒலியாகவும்) காணப்படுகிறது.

ஓம் என்ற வார்த்தை வேதங்களிலும் பயன்படுத்தப்படுகிறது. அங்கே ஓம் என்பது முனை மந்திரம் அல்லது பிரணவ மந்திரம் என்று கூறப்படுகிறது. வேதாந்தத்தில் ஓம் என்ற மந்திரம் முக்கியமானதாகக் கருதப்படுகிறது. 'ஓம்' என்பது தமிழில் 'ஆம்' என்பதைக் குறிக்கும். ஆம், ஆமேன் என்னும் சொற்கள் இயேசுக் கிறிஸ்துவுக்கு வழங்கும் பெயர்களாகவும் காணப்படுகின்றன (2கொரி *1 :20* வெளி *3:14*). ஓம் என்பதை ஓம் காரம் என்றும் குறிப்பிடுவர். அது வார்த்தை. வார்த்தை கடவுளே. வார்த்தை மாம்சமாகியவர் இயேசு கிறிஸ்துவே ஆவார். ஓங்காரத்திலிருந்து பிரபஞ்சமே உண்டாயிற்று என்று சைவ வைணவ நூல்கள் கூறுகின்றன. தேவனே சருவ சிருஷ்டிகர். தேவன் வார்த்தையினால் பிரபஞ்சத்தைச் சிருஷ்டித்தார் என விவிலியம் கூறுகிறது (ஆதியாகமம் முதலாம் அதிகாரம்)

விவிலியத்தில் காணப்படும் ஆம் ஆமேன் ஆகிய வார்த்தைகள் பிற்காலங்களில் வேதங்களில் ஓம் காரமாக எடுத்துக் கொள்ளப்பட்டன. "அவருடைய நாமம் வார்த்தை என்பதே" - வெளி. *19 : 13*

பிரிவு : II

இந்துத்துவாவும் சைவ வைணவர்களின் விடுதலை முயற்சியும்

அதிகாரம் 12

இந்துத்துவாவின் ஆரம்பம்

கி.பி 7-ஆம் நூற்றாண்டு முதல் 14 ஆம் நூற்றாண்டு வரையிலான காலங்களில் திராவிட மக்கள் எந்தெந்த வகைகளில் முன்னேற்றம் அடைந்திருந்தார்கள் என்று பார்த்தோம். அதே வேளையில் அதே காலங்களில் (7 to 14 C. AD) அன்னியர்களான ஆரியர்கள் திராவிடர்களைப் படிப்படியாகக் கீழ்படுத்தித் திராவிடர்களின் சகல மேன்மைகளையும் அபகரித்து அவர்களை இழிவுபடுத்தி ஜாதிக் கொள்கை என்ற வருணா சிரம தர்மத்தை அவர்கள் மேல் திணித்து அவர்களை அடக்கி ஆளத் தொடங்கிவிட்டார்கள். இதுவே இன்று பேசப்படும் இந்துத்துவாவின் ஆரம்பமாகும்.

ஆரியர்கள் - ஒரு இனமா ?

பொதுவாக ஆரியர்கள் என்று ஒரு இனம் முன்னால் இருந்து வந்ததாகவும் அந்த ஜாதியினர் மிக மேன்மையானவர்கள் என்றும் அவர்கள் இந்தியாவில் குடியேறினார்கள் என்றும் கூறப்படுவதுண்டு. ஆனால் அந்தக் கூற்று முற்றிலும் தவறானதாகும். ஆரியர்கள் என்று ஒரு இனம் உலகின் எந்தத் தேசத்திலும் இருந்ததில்லை என்பது தான் வரலாற்று உண்மை. அப்படியானால் இன்று இந்தியாவில் ஆரியர்கள் என்று அழைக்கப்படும் மக்கள் யார் ? எங்கிருந்து வந்தவர்கள் ? அவர்களுடைய வரலாற்றுப் பின்னணியம் என்ன ? அவர்கள் திராவிட

இந்தியாவில் என்னென்ன செய்தார்கள் ? என்பதைக் குறித்து நாம் அறிய வேண்டும்.

பன்னாட்டு அன்னியர்கள்

கி.மு 6- ஆம் நூற்றாண்டு முதல் அன்னிய நாட்டாராகிய பெர்சியர்கள், கிரேக்கர்கள், ரோமர்கள், சகர்கள், குஷாணர்கள் ஆகியோர் இந்தியாவில் குடியேறினார்கள் என்றும் அவர்கள் இந்தியாவின் வடமேற்குப் பகுதிகளில் வசித்து வந்தார்கள் என்றும் முன்னால் பார்த்தோம். கி.பி 4-ஆம் நூற்றாண்டிலிருந்து ஹூணர்கள் இந்தியாவுக்கு வர ஆரம்பித்தார்கள்.

ஹூணர்கள் வருகை

ஹூணர்கள் சீனாவின் எல்லைப் பகுதிகளில் கி.மு 2 ஆம் நூற்றாண்டில் நாடோடிகளாக வாழ்ந்து கொண்டிருந்தவர்கள் ஆகும். இவர்களில் ஒரு பிரிவினர் ரோமப் பேரரசைத் தாக்கினர். மற்றொரு பிரிவினர் குப்தர் காலத்தில் இருந்தே அனேக தடவைகளில் இந்தியா மீது படையெடுத்தனர். கி.பி 606-க்குப் பின் ஹர்ஷவர்த்தனனின் காலத்திலும் அவர்கள் இந்தியா மீது படையெடுத்து வந்தனர். ஹர்ஷ வர்த்தனன் அவர்களைத் தடைசெய்து வந்தான்.

கி.பி. 647-ல் ஹர்ஷவர்த்தனின் மரணத்துக்குப் பின் அவர் சாம்ராஜ்யம் நலிவுற்றது. அதோடு ஹூணர்களின் பெலன் அதிகரித்தது. அவர்கள் படையெடுத்துக் கூட்டமாய் இந்தியாவில் பிரவேசித்தார்கள்.

அன்னியர்கள் ஒன்றுபடுதல்

முன்பு இந்தியாவுக்குள் புகுந்து இந்தியாவின் வடமேற்குப் பகுதிகளில் வசித்து நாடோடிகளாய் சுற்றித் திரிந்து, குதிரை, ஆடு, மாடு போன்ற மிருகங்களைத் தீயில் சுட்டுத் தின்று, சோமபானம், சுராப்பானம் ஆகிய மதுவகைகளை அருந்தி இவ்விதமாய் வாழ்க்கை நடத்தி வந்த அன்னியர்களோடு ஹூணர்கள் சேர்ந்து கொண்டார்கள். இவ்வாறு பெர்சியர்கள், கிரேக்கர்கள், ரோமர்கள், சகர்கள், கூஷாணர்கள் ஆகிய

கூட்டத்தாரோடு ஹூணர்களும் சேர்ந்து கொண்டு கி.பி 7-ம் நூற்றாண்டு முதல் வேறுபட்ட ஒரு வாழ்க்கை முறையை ஆரம்பித்தார்கள்.

மவுண்ட் அபு கூட்டணி

கொடூரமான மூர்க்க வெறியுள்ள ஹூணர்களோடு அன்னியர்களான மற்று ஐந்து கூட்டத்தாரும் ஒருங்கிணைந்து வாழ ஆரம்பித்தார்கள். அவர்கள் எல்லோரும் சேர்ந்து ராஜஸ்தானிலுள்ள மவுண்ட் அபு என்ற இடத்தில் வைத்து கூட்டணி ஒன்றை அமைத்துக் கொண்டார்கள். ஏழாம் நூற்றாண்டு வரை தங்களுக்குள் ஒற்றுமை இல்லாமல் ஒருவரோடு ஒருவர் சண்டை போட்டுக் கொண்டிருந்த அன்னியர்கள் அது முதல் தங்களுக்குள் ஒற்றுமை ஆகி இந்திய மக்களை மிகவும் கொடுமைப் படுத்தத் தொடங்கினார்கள். இவர்கள் இராஜ புத்திரர் என அழைக்கப் பட்டார்கள். வரலாற்று ஆசிரியர்கள் ஹூணர்களைச் சாத்தானின் கூட்டம் என குறிப்பிட்டுள்ளார்கள்.

ஆரியவர்த்தம்

மேற்கூறியபடி இணைந்து கொண்ட பெர்சியர்கள், கிரேக்கர்கள், சகர்கள், ரோமர்கள், கூஷாணர்கள், ஹூணர்கள் ஆகிய அன்னியர்கள் பெரும் பெலன் பெற்று வடமேற்கு இந்தியாவின் சில பகுதிகளைப் பிடித்துக் கொண்டார்கள். அவர்கள் பிடித்துக் கொண்ட பிரதேசம் ஆரியவர்த்தம் என்று அழைக்கப்பட்டது. அந்தப் பிரதேசத்தில் இருந்த திராவிடர்களை அவர்கள் ஒடுக்கித் துன்புறுத்தினார்கள். அனேகர் துரத்தப்பட்டார்கள். ஆரியர் என்ற வார்த்தைக்கு மேன்மையானவர்கள் என்பது பொருள். ஆரியவர்த்தத்தில் திராவிடர்களைக் கீழ்ப்படுத்தித் தங்களை மேன்மைப்படுத்தித் தங்களுக்கென்று ஒரு வாழ்க்கை முறையை அமைத்துக் கொண்ட அன்னியர்கள் தங்களை ஆரியர்கள் அல்லது மேன்மையானவர்கள் என்று அழைத்துக் கொண்டார்கள்.

ஆரியர்கள் யார் ?

முன் கூறியபடி பல தேசங்களில் இருந்து பல காலங்களில் இந்தியாவுக்கு வந்து நாடோடிகளாய் சுற்றித் திரிந்து கூணர்களுடன் ஒன்று

சேர்ந்து தங்கள் தனித்தன்மைகளை இழந்து ஒரு சமுதாயம் ஆக மாறி ஆரியவர்த்தத்தைப் பிடித்துக் கொண்ட அன்னியர்களே ஆரியர்கள் என்று அழைக்கப்பட்டார்கள் என்று காணப்படுகிறது.

ஆரியர்களைக் குறித்து டாக்டர் அலெக்ஸாண்டர்

டாக்டர் அலெக்ஸாண்டர் ஹாரீஸ் என்பவர் The development of civilization and Religion in India என்ற நூலில் எடுத்துக் கூறியிருப்ப தாவது :-

The Rajputs maintained their unchallenged supremacy over northern India from the death of Harsha to the first Turk invasion. That is why, the period between 647 to 1200 AD is known as the Rajput period . The Rajaputs were the descendants of sakas, Hunas and Kushans who came to India and settled here. Later they entirely mixed themselves in the Indian society and almost lost their individuality.

In Northern India after the regin of Harsha, that is in the 7th C.A.D the reign of 'Huns' started spreading and they are referred to as demonic hordes by the historians. Huns were the cruel rulers who tyrannically suppressed and oppressed the Dravidians in northern India from 7th C.A.D. to 12th C.A.D. During this period the 1. persians 2. Greeks 3. Sakas 4. Romans 5. Kushans and the 6. Huns who came to India in different periods with out any religion were united as Aryans (sanskrit word for noble) and were ruling. During this time the Aryan laws like manudharma Sasthra, which elevate the Aryans (Foreiners) and degrade the Dravidians (Indians) were devised.

அதிகாரம் 13

ஜாதிக்கொள்கை என்ற வாழ்க்கை முறை

ஆரியர்கள் தாங்கள் பிடித்துக் கொண்ட ஆரிய வர்த்தத்தில் தங்களுக் கென்று ஒரு வாழ்க்கை முறையை ஏற்படுத்திக் கொண்டார்கள். அது நிறம் அல்லது வருணத்தின் அடிப்படையில் அமைக்கப்பட்டது. அதவாது, வந்தேறிய வெள்ளை நிறத்தார் ஆகிய அன்னியர்கள் உயர்ந்தவர்கள் (ஆரியர்கள்) என்றும் மண்ணின் மைந்தர்களாகிய கருமை நிறமுடைய திராவிடர்கள் (இந்தியர்கள்) தாழ்ந்தவர்கள் என்றும் பிளவுநிலை ஏற்ப டுத்தப்பட்டது. ஆரிய வர்த்தத்தில் திராவிடர்களுக்கு எந்த உரிமையும் கொடுக்கப்படாமல் அன்னியரான ஆரியர்களே இராஜ்யத்தின் முழு உரிமைகளையும் பகிர்ந்து எடுத்துக் கொண்டார்கள். இது நிறத்தின் அடிப்படையில் உண்டாக்கப்பட்ட பொல்லாத ஜாதிக் கொள்கை ஆகும். இது ஜாதி வேற்றுமைக்கும் இனவெறிக்கும் காரணமாக அமைந்தது.

முதலிடத்தில் பிராமணர்கள்

ஆரிய வர்த்தத்தில் புரோகிதத்துவம், பலி, வழிபாடு ஆகிய சமயச் சடங்குகள் செய்யும் பொறுப்பு ஒரு கூட்டத்தாருக்கு அளிக்கப் பட்டது. அவர்கள் பிராமணர்கள் என்று பின்னால் அழைக்கப்பட்டார் கள். அவர்களுக்கு அனேக சலுகைகள் கொடுக்கப்பட்டன. அவர்கள் அரசர்களுக்கு ஆலோசகர்களாகவும் வைக்கப்பட்டார்கள்.

பிராமணர் என்ற பெயர்

பொதுநிலையில் சிவனை வழிபடுவோர் சைவர் என்றும் விஷ்ணுவை வழிபடுவோர் வைணவர் என்றும் கிறிஸ்துவை வழிபடுவோர் கிறிஸ்த

வர் என்றும் அழைக்கப்படுவார்கள். இவ்வடிப்படையில் பிரம்மனை வழிபடுவோர் பிராமணர் என்று அழைக்கப்பட வேண்டும். ஆனால் பிரம்மனை வணங்குவோர் எல்லாரும் பிராமணர் என்று இன்று அழைக் கப்படுவதில்லை. ஏனென்றால் பிராமணர் என்பது ஒரு சாதிப்பெயர் ஆக்கப்பட்டுவிட்டது.

சாதிப் பெயராக்கப்பட்டது எப்படி ?

ஆதி சங்கரர் என்பவரின் 'அஹம்பிரம்மாஸ்மி' என்ற அத்வைதக் கொள்கை இதற்காகப் பயன்படுத்தப்பட்டது. திராவிடர்களுடைய சிவன், விஷ்ணு, பிரம்மா எனும் மும்மூர்த்திக் கோட்பாட்டில் வரும் பிரம்ம னுக்கு ஒரு திருப்பம் கொடுக்கப்பட்டது. அதாவது 'அஹம் பிரம்மாஸ்மி' என்பதற்கு நானே கடவுள் என்று விளக்கம் அளிக்கப்பட்டது.

பிரம்மத்தை உடையவர்கள் பிராமணர்கள். என்றாலும் பிராமணர் மட்டுமே (அகம் பிரம்மாஸ்மி) நானே கடவுள் என்ற நிலையில் இருக்க முடியும் என்றும், மற்றவர்கள் தங்களை அவ்வாறு கூற முடியாது என்றும் பின்னால் விளக்கம் கொடுக்கப்பட்டது. இதிலிருந்து பிராமணர் என்பது ஒரு சாதிப் பெயராக உருவாக்கப்பட்டது. அவ்வாறு பிராமணர் உயர் சாதியினராக அமர்ந்து கொண்டார்கள்.

இரண்டாவது இடத்தில் சத்திரியர்கள்

ஆட்சி அமைத்து ஆளுகை செய்யும் பொறுப்பு அன்னியர்களான இரண்டாவது பிரிவினருக்கு அளிக்கப்பட்டது. அவர்கள் சத்திரியர்கள் என்று அழைக்கப்பட்டார்கள்.

மூன்றாவது இடத்தில் வைசியர்கள்

வணிகம் செய்வதும் பிறதொழில்கள் நடத்தும் பொறுப்பும் அன்னியர்களான மூன்றாவது பிரிவினருக்கு அளிக்கப்பட்டது. அவர்கள் வைசியர்கள் என அழைக்கப்பட்டார்கள்.

அடிமைப்பட ஒப்புக்கொண்ட திராவிடர்கள் சூத்திரர்

மேற்கூறிய மூன்று பொறுப்புகளையும் அன்னியர்களான ஆரியர்களே வைத்துக் கொண்டார்கள். திராவிடர்கள் தங்கள்நாட்டில் தங்களுக்குப்

பொறுப்புகள்கொடுக்கப்படாததால் கலக்கமடைந்தார்கள். இந்நிலையில் ஆரியர்கள் திராவிடர்களைத் தங்களுக்கு அடிமை வேலை செய்ய வற்புறுத் தினார்கள். வேறு வழியின்றி திராவிடர்களில் ஒரு பிரிவினர் ஆரியர்களுக்கு அடிமைகளாக இருக்க ஒப்புக் கொண்டார்கள். அவ்வாறு அடிமைகளாக் கப்பட ஒப்புக் கொண்ட திராவிடர்களை ஆரியர்கள் தங்களோடு சேர்த்துக் கொண்டு அவர்களைச் சூத்திரர் என்று அழைத்தார்கள்.

நான்கு ஜாதிகள்

இவ்வாறு 1.பிராமணன், 2. சத்திரியன், 3. வைசியன் (இவர்கள் 3 கூட்டத்தாரும் அன்னியர்கள்), 4. சூத்திரன் (இவர்கள் திராவிட இனத்திலிருந்து பிரிக்கப்பட்ட ஒரு பகுதியினர்) என்ற நான்கு ஜாதிகள் உருவாக்கப்பட்டன. இதுவே சதுர்வர்ண்ணம் என்பது. இவர்கள் சவருணர்கள் (ஜாதியுடையவர்கள்) என்றும் அழைக்கப்பட்டார்கள்.

கீழடங்க மறுத்தோர்

ஆரியர்கள் ஏற்படுத்திய மேற்கூறியவாழ்க்கைமுறையை ஒரு கூட்டம் திராவிடர்கள் எதிர்த்தார்கள். எதிர்த்தவர்கள் அரச பரம்பரையைச் சேர்ந்தவர்களும்,சிறந்த எழுத்தாளர்களும், பண்டிதர்களும்,தத்துவ மேதைகளும், சித்தர்கள், முனிவர்கள், புரோகிதர்கள் போன்றவர்களும் ஆவர். எதிர்த்த திராவிடர்களை ஆரியர்கள் மிகக்கொடுமையாய் நடத்தி னார்கள். அவர்களைப் பஞ்சமர்கள், ஜாதி இல்லாதோர் (அவர்ணர்கள்) தீண்டத்தகாதவர்கள், அதமர்கள், தஸ்யூக்கள், எதிரிகள், சண்டாளர்கள் என்றெல்லாம் அழைத்துத் துரத்தினார்கள். துரத்தப்பட்ட திராவிடர்கள் பலர் காடுகளுக்கு ஓடிச்சென்றார்கள். சிலர் வேறு வழியின்றி அங்கேயே வசிக்கலாயினர். அப்படிப்பட்டவர்கள் மிகமிலேச்சமான வேலைகள் செய்ய வற்புறுத்தப்பட்டார்கள்.

இவ்வாறு அன்னியர்களான ஆரியர்களின் ஜாதிக் கொள்கை ஆரிய வர்த்தத்தில் திணிக்கப்பட்டுத் திராவிட மக்கள் சூத்திரர்கள் என்றும் பஞ்சமர் என்றும் இரு ஜாதிகளாகப் பிரிக்கப்பட்டு இழிவுபடுத்தப் பட்டார்கள். இதுவே இந்நாட்களில் 'இந்துத்துவா' என்று கூறப்படும் வாழ்க்கை முறையின் ஆரம்பம்.

அதிகாரம் 14

சட்டமாக்கப்பட்ட வாழ்க்கை முறை

(ஜாதிக்கொள்கை)

ஆரியவர்த்தத்தில் ஏற்படுத்தப்பட்ட வாழ்க்கை முறை என்ற ஜாதிக் கொள்கை ஆரியவர்த்தத்தின் அரசியல்சாசனமாக்கப்பட்டது. அவ்வாறு எழுதப்பட்ட நூல் மனுநூல் என்று அழைக்கப்பட்டது. அது வருணத்தை (நிறத்தை) அடிப்படையாகக் கொண்டது. மனுச்சட்டம் மனித நேயத்திற்கும் மனித நீதிக்கும் மாறுபட்டதாகும். அது திராவிடர்களை இழிவுபடுத்தி அடிமைபடுத்துவதற்காக அன்னியர்களான ஆரியர்களால் உருவாக்கப்பட்ட சட்டம் ஆகும்.

மனுச்சட்டம் கூறுவதென்ன ?

மனுச்சட்டப்படி மனிதனுக்குச் சமத்துவம் கூடாது. சிறுமீன் பெரிய மீனுக்கு இரையாக வேண்டும் என்பது இயற்கையின் சட்டம். அது போல பெலவீனன் பெலவானுக்கு அடிமை ஆக வேண்டும். ஆரியன் பிறப்பால் உயர்ந்தவன், திராவிடன் பிறப்பால் தாழ்ந்தவன். திராவிடன் பிறப்பால் ஆரியனுக்கு அடிமை ஆக வேண்டும். இந்த மனுதர்ம்மப்படி கீழ்சாதியைச் சார்ந்த ஒருவன் மேல்சாதியைச் சார்ந்த ஒருவனைத் தன் உடலின் ஏதாவது ஒரு பகுதியால் தாக்கினால் அந்தப் பகுதி வெட்டப்பட வேண்டும். அவன் தன் கையையோ கம்பையோ உயர்சாதிக்காரனுக்கு முன்பாக உயர்த்தினால் அவனுடைய கை வெட்டப்பட வேண்டும். கோபத்தில் அவன் தன் காலடியால் தாக்கினால் அவன் காலடி வெட்டப்பட வேண்டும்.

மேல்சாதிகாரன் ஒருவன் உட்காரும் இடத்தில் கீழ்சாதிக்காரன் ஒருவன் உட்கார முயன்றால் அவன் இடுப்பில் சூடுபோட்டு அப்புறப் படுத்த வேண்டும். அல்லது அவன் உட்காரும் பிட்டத்தையே வெட்டி விட வேண்டும். அவன் மேல்சாதிக்காரன் மேல் இறுமாப் பாய் துப்பி னால் அவனுடைய உதடுகள் இரண்டும் வெட்டப்பட வேண்டும். மேல்சாதிக்காரன் மீது சிறுநீர் கழித்தால் அவனுடைய ஆணுறுப்பு வெட்டப்பட வேண்டும். மேல் சாதிக்காரன் முடி, காலடி, தாடி, கழுத்து முதலிய ஏதாவதொன்றைப் பிடித்து இழுத்தால் அவன் கையைத் தயக்கமின்றி வெட்டிவிட வேண்டும்.

ஆரிய வர்த்தத்தில் திராவிட மக்கள் இப்படிப்பட்ட கொடூரமான மனுச்சட்டத்தின் கீழ் அடிமைப்படுத்தப்பட்டார்கள்.

சங்கரர் உறுதிப்படுத்திய ஜாதிக் கொள்கை

9-ம் நூற்றாண்டில் ஆதி சங்கரன் என்பவர் அத்வைதக் கொள் கையைப் பரப்பினார். அது 'அகம் பிரம்மாஸ்மி' என்று கூறும் கொள்கை ஆகும். எல்லாமே கடவுள், எல்லாமே ஒன்று தான், இரண்டல்ல. ஒவ்வொரு மனிதனும் பிரம்மம், என்பது அந்தக் கொள்கை. அதவாது, கடவுளின் அம்சம். ஆனால் அதிலும் ஆதி சங்கரர் ஒரு விளக்கம் கொடுத்துத் திருப்பிவிட்டார். எல்லாருமே பிரம்மம் என்றாலும் அவர்களில் பிராமணர்கள் மட்டுமே பிரம்ம நிலையில் உயர்த்தப்பட்ட வர்கள் என்று கூறினார். இந்தக் கொள்கையினால் பிராமணர்கள் கடவுள் நிலைக்கு உயர்த்தப்பட்டார்கள். ஆரியப் புரோகிதர்கள் பிராமணர்கள் என்ற ஜாதியினராக அமைக்கப்பட்டார்கள்.

பிற்காலங்களில்ஆரியர்கள் திராவிடர்களின் தெய்வங்களையும் பறித்துக் கொண்டார்கள். பிரம்மா திராவிடர்களின் மும்மூர்த்திகளில் ஒருவர். ஆரியர்கள் திரவிடக் கடவுளாகிய பிரம்மாவை எடுத்துக் கொண்டு அகம் பிரம்மாஸ்மி என்றதத்துவத்தை உருவாக்கி தங்களையே கடவுளாக்கிக் கொண்டார்கள்.

நிரந்தரமாக்கப்பட்ட ஜாதிக்கொள்கை

வருணாசிரமம் என்ற ஜாதிக் கொள்கையைச் சங்கரர் உறுதிப் படுத்தினார். ஆரியர்கள் திராவிடர்களை அடிமைப்படுத்தி நிரந்தரமாக

ஆட்சி செய்யும்படியாக இந்தியாவில் ஐந்து இடங்களில் சங்கர மடங்களை அமைத்துக் கொண்டார்கள். அவையாவன 1. U.P யில் ஜோசி மடம் 2. குஜராத்தில் துவாரகை மடம் 3. ஒரிசாவில் பூரி மடம் 4. கன்னடத்தில் சிறிங்கேரி மடம் 5. தமிழ் நாட்டில் காஞ்சி சங்கர மடம் (தமிழ்நாட்டில் சங்கர மடம் பிற்காலங்களில் அமைக்கப்பட்டது).

ரிக் வேதத்தில் ஜாதிக் கொள்கை

ஆரியர்களுடைய வாழ்க்கை முறையாகக் கருதப்படும் ஜாதிக் கொள்கை ரிக் வேதக் காலத்தில் இருந்ததில்லை என்று கூறப்படுகிறது. சதுர் வர்ணம் அதாவது நான்கு வர்ணங்களைப் பற்றிப் பின்னால் சேர்க் கப்பட்டதாகக் கருதப்படும் ரிக்வேதம் 10-ம் காண்டம் புருஷ சூக்த்தத்தில் கீழ்க்கண்டவாறு கூறப்படுகிறது :-

பிராமணோஸ்யா சுக மாஸீத்
பாகியூ ராஜன்ய : க்றித:
ஊறு ததஸ்யா யத் வைசிய:
பத் ப்பியாம்சூத்ரோஅஜாயதா

அதாவது, அவருடைய (பிரம்மாவின்) முகத்திலிருந்து பிராமண னும் தோளிலிருந்துசத்திரியனும் தொடையிலிருந்து வைசியனும் கால்களிலிருந்து சூத்திரனும் வந்தார்கள். இதுவும் ஓர் தவறான விளக்க மாகும். இதன் அடிப்படையில் மனுநூல் ஒரு தர்மம் ஆக்கப்பட்டு மனுதர்ம்ம சாஸ்திரம் என்றும், வருணாசிரம தர்மம் என்றும் அழைக்கப் பட்டது.ஆனால் உண்மையில் இது தர்மத்துக்கு மாறானதாகும். மதத்துக்கு இங்கு இடமே இல்லை என்று காணமுடிகிறது.

பிறவிச் சுழற்சி திணிக்கப்பட்ட ஜாதிக் கொள்கை

பிறவிச் சுழற்சிக் கொள்கை (Cycle of Birth) அன்னியரான ஆரியரின் கொள்கையுமல்ல, வேதங்களில் கூறப்பட்ட ஒன்றும் அல்ல. அது திராவிட மக்களின் சமண பௌத்த மதங்களின் கொள்கை ஆகும். ஆனால்பிராமணர்கள் தங்கள்அந்தஸ்தையும், முதன்மை ஸ்தானத்தையும் ஒருபோதும் இழந்துவிடாமல் இருக்கவும் திராவிடர்களை நிரந்தரமாக

அடிமைபடுத்தி வைத்துக் கொள்ளவும் பிறவிச் சுழற்சி கொள்கைக்குத் தவறான விளக்கம் கொடுத்து தங்கள் ஜாதிக் கொள்கையை நிலை நாட்டப் பயன்படுத்தினார்கள்.

தவறான விளக்கம்

பிராமணர்கள் பிறவிச் சுழற்ச்சிக் கொள்கைக்குத் தவறான விளக்கம் கொடுத்தார்கள். அதாவது, முன் ஜன்மத்தில் சல்கர்மங்கள் (நற்கிரியைகள்) செய்தபடியால் பிராமணர்கள் இந்த ஜன்மத்தில் உயர்ந்த ஜாதியினராகப் பிறந்திருக்கிறார்கள். சண்டாளர்கள் முன் ஜன்மத்தில் துர்க்கிரியைகள் செய்தபடியால்இந்த ஜன்மத்தில் கீழ்ச் சாதியினராய் பிறந்திருக்கிறார்கள். இந்தச் சண்டாளர்கள் இந்த ஜன்மத்தில் தர்மத்தைக் காத்துவந்தால், அதாவது வருணாசிரம தர்மத்தைக் காத்து அதின்படி பிராமணர்களை முதன்மைஸ்தானத்தில் வைத்து நடந்தால் அடுத்த ஜன்மத்தில் உயர்ந்த ஜாதியாய்ப் பிறக்கலாம் எனக் கற்பித்தார்கள்.

போராடாதே

எனவே, இதற்காகப் பொறாமைப்படுவதோ, போராடுவதோ கூடாது. அது அதர்மம். இந்த ஜன்மத்தில் தீண்டத்தகாதக் கீழ்ச்சாதியில் பிறந்தவனை மனுதர்மப்படி கடினமாய் நடந்துவதைக் குறித்து எவ்வித தயவோ, பரிதபிப்போ இருத்தலும் கூடாது. அப்படி செய்வது அதர்மம் என்றும் போதித்தார்கள். இந்தக் கொள்கையைப் பாமர மக்கள் தொடங்கிப் பண்டிதர்கள் மட்டும் கோடிகோடியான மக்கள் இந்நாட்களிலும் கூட ஏற்றுக் கொண்டு நம்பி நடக்கிறார்கள். உயிரினங்களுக்குப் பலபிறவிகள் உண்டென்றும் தாங்கள் செய்யும் நல்ல கர்மங்களால் அடுத்த ஜென்மத்தில் உயர்ந்த பிறவி அடையலாம் என்றும் நம்புகிறார்கள். இது மதமற்ற ஜாதிக் கொள்கையினருக்கு (இந்துத்துவ வாதிகளுக்கு) நல்ல வாய்ப்புகள் அளிக்கிறது.

அதிகாரம் 15

ஜாதிக் கொள்கையால் ஏற்பட்ட சீர்கேடுகள்

கி.பி. 7-ஆம் நூற்றாண்டிலிருந்து ஆரிய வர்த்தத்தில் தங்கள் ஆட்சியை ஸ்தாபித்து திராவிட மக்களை அடிமைப்படுத்திய ஆரியர்கள் இந்தியாவின் பிற இடங்களிலும் தங்கள் ஆதிக்கத்தை ஸ்தாபித்து திராவிட மக்களை அடிமைப்படுத்தலாயினர். அதனால் திராவிட மக்கள் மேலும் சீர்குலைக்கப்பட்டார்கள். அவர்கள் தங்கள் ஆதி மேன்மைகள் எல்லாம் பறிக்கப்பட்டு இழிவுபடுத்தப்பட்டார்கள்.

புலால் உண்ணாத திராவிடப் பூசாரிகள்

முற்காலத்தில் திராவிட மக்கள் பழந்திராவிட வழிபாட்டைக் கடைபிடித்து வந்தார்கள். அவர்கள் ஆடு, மாடு போன்ற மிருகங்களை பலி செலுத்தி அவற்றின் மாம்சத்தைப் புசித்து வந்தார்கள். ஆனால் கி.பி. முதலாம் நூற்றாண்டில் இந்தியாவுக்கு வந்த தோமாவின் உபதேசத்தை ஏற்றுக் கொண்ட திராவிடர்கள் பின் நாட்களில் தங்களுக்குச் சைவ, வைணவ மதங்களை ஏற்படுத்திக் கொண்டார்கள். அதுமட்டுமல்லாமல் கடவுள் இந்த உலகத்தில் அவதரித்து மனிதனின் பாவத்துக்காகத் தம்மையே பலி செலுத்தியபடியால் இனிமேல் கடவுளுக்குப் பலிசெலுத்த வேண்டியதில்லை என்ற பலிநிறைவேற்றுக் கொள்கையையும் ஏற்றுக் கொண்டார்கள். எனவே எருசலேம் தேவாலயத்தின் அமைப்பில் கட்டப் பட்ட சைவ வைணவ கோயில்களில் பலிபீடங்கள் இருந்தாலும் அங்குப் பலி செலுத்தப்படுவதில்லை. மிருகங்களைப் பலி செலுத்தாத காரணத் தால் திராவிட புரோகிதர்கள் புலால் உண்ணுவதை நிறுத்தி விட்டார்கள். சைவ உணவுக்கு முக்கியத்துவம் கொடுக்கப்பட்டது.

புலால் உண்ணும் பிராமணர்கள்

வந்தேறிய அன்னியர்களான ஆரியர்களுக்கு மதம் கிடையாது. பிராமணர்கள் தீயை வழிபடுகிறவர்கள். வழிபாடு மதம் அல்ல, அது ஒரு தொழுகை மட்டுமே. அவர்களுக்குக் கோயில் கிடையாது. அவர்கள் பிறித்துவி, வருணன், அக்கினி, சூரியன், வாயு போன்ற ஐம்பெரும் பூதங்களையும் தியசு, அததி, மருத்துக்கள் ஆகியவற்றையும் இந்திரன், மித்திரன் போன்ற பிற தேவர்களையும் வழிபட்டவர்கள். அவர்கள் குதிரை, ஆடு, மாடு, பசு, எருமை போன்ற மிருகங்களை தீயில் சுட்டு யாகம் செய்து அவற்றின் மாம்சத்தைச் சோமம், சுரா ஆகிய மது பானங்களோடு சேர்த்துப் புசித்து வந்தார்கள்.

திராவிடக் கோயில்கள் பறிப்பு

திராவிட மக்களின் உரிமைகளையும், உடைமைகளையும் பறித்துக் கொண்ட ஆரியர்கள் மதத்தின் அடிப்படையிலும் திராவிடர்களைக் கீழ்ப்படுத்தத் திட்டமிட்டார்கள். எனவே அவர்கள் திராவிடர்களால் கட்டப்பட்ட சைவ, வைணவக் கோயில்களையும் பறித்துக் கொண் டார்கள். திராவிடர்கள் தீண்டத்தகாத கீழ்ச்சாதியினர் என்றும் எனவே அவர்கள் அவர்களுடைய கோயில்களுக்குள் நுழைய அருகதை அற்ற வர்கள் என்றும் கூறித் திராவிடர்களைக் கோவில்களில் நுழையக்கூடாத படி தடை செய்தார்கள். திராவிடர்களுக்குத் தாங்கள் கட்டின கோயில் களில் சென்று வழிபடுவதற்குக் கூட உரிமையில்லாமலாயிற்று

திராவிடப் பூசாரிகள் துரத்தப்படுதல்

திராவிடர்களின் கோயில்களில் திராவிடப் புரோகிதர்கள் பக்திப் பரவசம் நிறைந்தவர்களாய்க் கடவுளின் அருள்வார்த்தைகளைப் பக்தர்க ளுக்குப் பகிர்ந்து அளிக்கிறவர்களாய் இருந்தார்கள். எனவே இந்தத் திராவிட புரோகிதர்கள் பெருமைக்குரியவர்களாகக் கருதப்பட்டார்கள். இந்தப் புரோகிதத்துவம் மிகக் கனத்துக்குரிய வேலையாய் இருந்தது. பிராமணர்கள் திராவிடப் புரோகிதர்களை விரட்டி அவர்களுக்குத் தங்கள் ஜாதிக் கொள்கையால் தீண்டத்தகாதவர்கள் என்று முத்திரைக் குத்திக் கோயில்களிலிருந்தே துரத்தி விட்டார்கள். அனேக புரோகிதர்களைக் கொலையும் செய்தார்கள். “பாப்பானுக்கு மூத்த பறையன் கேள்ப்பாரில் லாமல் கீழ்ச் சாதியானான்” என்ற பழமொழி இதைக் குறிப்பதாகும்.

பிராமணர் சைவ உணவுக்கு மாற்றம்

மதம் இல்லாத ஆரியர்கள் திராவிடர்களின் கோயில்களைப் பிடித்துக் கொண்டார்கள். ஆனால் அவர்கள் வேள்வி செய்து குதிரை, எருமை, ஆடு, மாடு, பசு போன்றவற்றைத் தின்பவர்கள். திராவிடர்களின் சைவ, வைணவக் கோயில்களில் பலி செலுத்துவதும் கிடையாது, புலால் உண்ணுவதும் கிடையாது. ஆனால் புலால் உண்ணாத திராவிடப் புரோகிதர்களின் ஸ்தானத்தில் பிராமணர்களே பிரவேசித்துத் தங்களைப் புரோகிதர்கள் ஆக்கிக் கொண்டார்கள். இதற்காக அவர்கள் புலால் உண்ணுவதை நிறுத்திவிட வேண்டிய கட்டாயம் ஏற்பட்டது. திராவிடர்களை மேற்கொள்ள வேண்டும் என்ற ஒரே காரணத்திற்காகப் பிராமணர்கள் சைவ உணவுக்கு மாறிவிட்டார்கள்.

திராவிடத் தெய்வங்களைப் பறித்துக் கொள்ளுதல்

சிவன்

திராவிடர்களை மதத்தின் அடிப்படையில் கீழ்ப்படுத்துவதற்காக மதமே இல்லாத ஆரியர்கள் திராவிடர்களுடைய தெய்வங்களையும் கூட எடுத்துக்கொண்டார்கள். ஆரம்பத்தில் திராவிடர்களின் முக்கிய கடவுளான சிவனைச் சூத்திர கடவுள் என இகழ்ந்த ஆரியர்கள் பிற்காலத்தில் சிவனைத் தங்கள் கடவுளாக்கிக் கொண்டார்கள். வேதங்களில் சிவன் என்ற கடவுளையே பார்க்க முடியாது. அங்கே காணப்படும் ருத்திரன் என்ற ஒரு கலகக்காரனானக் கடவுளைத் திராவிடர்களின் அன்பே உருவான சிவனோடு ஒருங்கிணைத்துப் பின்நாட்களில் ருத்திர சிவன் என்றழைக்கத் தொடங்கினார்கள்.

விஷ்ணு

அவ்வாறு வேதங்களில் விஷ்ணு என்ற கடவுள் கிடையாது. அங்கே விஷ்ணு என்று குறிப்பிட்டிருப்பது, சூரியனையே தவிர கடவுளைக் குறிப்பது அல்ல. திராவிடர்களுடைய கடவுளான விஷ்ணு என்பது விண்ணிலிருந்து அவதரித்தவர் என்பதையே குறிக்கும். பிற்காலங்களில் ஆரியர்கள் விஷ்ணுவையும் எடுத்துக் கொண்டார்கள்.

பிரம்மா

தவிரவும் திராவிடர்களின் பிரம்மனை ஆரியர்கள் எடுத்துக் கொண்டு பிரம்மாவின் முகத்திலிருந்து தோன்றியவர்களே பிராம ணர்கள் என்று கூறித் திராவிடர்களுடைய கடவுளான பிரம்மாவின் ஸ்தானத்தில் பிராமணர்கள் கடவுள்களாக அமர்ந்து விட்டார்கள். ஆரியர்களின் மேற்கண்ட செயல்கள்எல்லாம் திராவிடர்களின் சைவ வைணவ மதங்களைச் சீர்குலைத்தன. மட்டுமல்ல ஜாதிக் கொள்கையின் அடிப்படையில் சைவ வைணவ மதங்களும் வேத வேதாந்தங்களும் பிரா மணருக்கு அடிமைப்பட வேண்டிய கட்டாயம் ஏற்பட்டது. அதாவது சைவ வைணவ மதங்கள் ஆரியர்களின் மதங்கள் என்று எல்லோரும் கருதுவதற் கேற்றவிதமாய் எல்லாவற்றையும் மாற்றி அமைத்துக் கொண்டார்கள்.

சித்தர்களை அழித்தல்

தோமாவின் கிறிஸ்தவ நெறிகளை ஏற்றுக் கொண்டதிராவிடர்கள் பக்திப் பாடல்களை இயற்றினார்கள். பக்தி வாழ்க்கையில் ஈடுபட்டார்கள். அவர்கள் எல்லாத் துறைகளிலும் ஞானவும் அறிவும் மிகுந்தவர்களாய் இருந்தார்கள். தேவ பக்தியும் மனித நேயமும் மிகுந்த அவர்கள் பிராம ணர்களின் ஜாதிக்கொள்கையைக் கடுமையாய் எதிர்த்தார்கள். பிராமணர்கள் அவர்களை அரசர்களின் உதவியோடு அழிக்கத் தொடங்கினார்கள்.

குகையிடிக்கலகம்

ஆரியர்களின் ஜாதிக் கொள்கைகளையும்மதப்பேதமைகளையும் எதிர்த்த சித்தர்கள் பெருமளவில் கொடுமைப்படுத்தப்பட்டார்கள். இவ்வாறு கொடுமைப்படுத்தப்பட்ட சித்தர்கள் காடுகளுக்கு ஓடிச் சென்று குகைகளில் வசித்தார்கள். அவர்களை ஆரியப் பிராமணர்களின் தூண்டுதலினால் அரசர்கள் வெகுவாய்த் துன்புறுத்தினார்கள்.

3-ஆம் குலோத்துங்கச் சோழனின் நாட்களில் குகைகளில் வசித்தி ருந்த சித்தர்கள் அனேகர் கொல்லப்பட்டார்கள். இது குகையிடிக்கலகம் என்று அழைக்கப்படுகிறது.

வேதங்களைத் தடைசெய்தல்

வேதங்கள், இதிகாசங்கள் வேதாந்தம் ஆகிய எல்லாவற்றையும் எழுதியவர்கள் திராவிடர்களே. அவைகள் சமிஸ்கிருத மொழியில் எழுதப்பட்டன. சமிஸ்கிருத மொழியும் திராவிடர்களால் உண்டாக்கப் பட்டது. ஆரியர்கள் திராவிடரின் சமிஸ்கிருத மொழியை எடுத்துக் கொண்டு அதை தேவமொழி என்றார்கள். ஆனால் அதோடு திராவிடர் கள் கீழ்சாதியினரென்றும் கீழ்ச்சாதியினரான திராவிடர்கள் வேதங்களை படிக்கக் கூடாதென்றும் தடை செய்தார்கள். சமிஸ்கிருதத்தில் எழுதப் பட்ட வேதங்களைத் திராவிடர் கேட்பதற்குத் தடை விதித்தார்கள். மறுப்போரின் காதுகளில் ஈயம் உருக்கி விடப்பட்டது.

தமிழை அழித்தல்

தமிழை நீச பாஷை என்று இகழ்ந்து அதை அழிப்பதற்கு ஆவன செய்தார்கள். தமிழ் இலக்கியங்கள் பல அழிக்கப்பட்டன. உயர்ந்த கருத்துக்கள் அடங்கிய தமிழ் இலக்கியங்கள் வெளிக்கொண்டு வரப் படாமல் மறைக்கப்பட்டன.

இலக்கியங்களுக்குத் தவறான உரைகள்

திராவிடர்களின் தமிழ், சமிஸ்கிருதம் ஆகிய இலக்கியங்களுக்கு ஆரியர்கள் தவறான விளக்க உரைகள் எழுதி திராவிடர்களின் அரிய கருத்துக்களைத் திசை திருப்பினார்கள். மட்டுமின்றி தவறான கருத்துக் களை இலக்கியங்களில் இடைச்செருகவும் செய்தார்கள்.

இதனால்திராவிடர்கள் உண்மைக்கு மாறாகத் திணிக்கப்பட்ட கருத்துக்களையே படிக்க நேர்ந்தது.

தொடர்ந்து நீடித்த பிராமணீயம்

இவ்வாறு கி.பி 7-ம் நூற்றாண்டில் ஆரியர்களால் ஆரம்பிக்கப்பட்ட பிராமணீயம் என்ற ஜாதிக்கொள்கை கி.பி 14-ம் நூற்றாண்டுக்குப் பின் னும் திராவிட மக்களின் எல்லா மேன்மைகளையும் பறித்துக் கொண்டு அவர் களை மென்மேலும் இழிவுப்படுத்தி ஒடுக்கிக் கொண்டே இருந்தது.

அதிகாரம் 16

இந்துத்துவா என்ற புதுப் பெயர்

ஆங்கிலேயர் இந்தியாவில்

கி.பி 7 ஆம் நூற்றாண்டுக்குப் பின் ஆரியர்களின் ஜாதிக்கொள்கை என்ற பிராமணீயம் திராவிட மக்களைச் சீரழித்து கொண்டே இருந்தது என்று பார்த்தோம். அதோடு முகலாய ஆட்சிக் காலத்திலும் பிராமணர்கள் தங்கள் பிராமணீயத்தை அரசாங்க உதவியோடு காத்துக் கொண்டார்கள். முகலாயர் ஆட்சிக்குப் பின் ஆங்கிலேயர்கள் தங்கள் ஆட்சியை ஸ்தாபித்தார்கள். ஆங்கிலேயர் ஆட்சிக் காலத்தில் ஆரியர்களின் பிராமணீயக் கொள்கை அதன் உச்சநிலையை எட்டிற்று. மட்டுமல்ல அது இந்தியச் சட்டத்திலும் நுழைந்து "இந்துத்துவா" என்ற புதுப்பெயர் பெற்றுத் திராவிட மக்களை மேலும் சீர்குலைக்கத் தொடங்கி விட்டது.

ஆங்கிலேயர் ஆட்சியில் ஜாதிக்கொள்கை

ஆங்கிலேயர்கள் இந்தியாவில் வணிகத்துக்காக வந்தார்கள். அவர்கள் நாளடைவில் தங்கள் ஆதிக்கத்தை ஸ்தாபித்துக் கொண்டார்கள். மேலும் இந்தியாவின் பல பகுதிகளைப் பிடித்துக் கொண்டு தேசத்தை ஆளத் தொடங்கினார்கள்.

கல்கத்தாவில் உச்ச நீதி மன்றம்

இந்தியாவை ஆளத்தொடங்கிய ஆங்கிலேயர்கள் கி.பி. 18 ஆம் நூற்றாண்டில் கல்கத்தாவில் ஓர் உச்சநீதி மன்றம் அமைத்தார்கள். சர்

வில்லியம் ஜோண்ஸ் என்பவர் அங்கு நீதிபதியாய் இருந்தார். இந்திய மக்களுக்கு நீதி வழங்குவதற்கான சட்டங்கள் இயற்ற வேண்டிய பொறுப்பு நீதிபதியான வில்லியம் ஜோன்சுக்கு ஏற்பட்டது. இந்திய மக்களில் இஸ்லாமிய மதத்தைச் சேர்ந்தவர்களுக்கு நீதி வழங்க அவர் இஸ்லாமிய சட்டத்தைப் பயன்படுத்தினார். அவ்வாறு கிறிஸ்தவ மதத்தைச் சேர்ந்தவர்களுக்கு நீதி வழங்க அவர் கிறிஸ்தவ மதச் சட்டத்தை (Christain law) பயன்படுத்தினார்.

புதுச் சட்டத்தின் தேவை

முஸ்லீம்கள் கிறிஸ்தவர்கள் ஆகியோரைத் தவிர இந்தியாவில் வசித்து வந்த பிற மக்களுக்கு நீதி வழங்குவதற்கு ஏற்ற முறையில் ஒரு சட்டம் இயற்ற வேண்டிய சூழல் அவருக்கு ஏற்பட்டது. இதற்கான வழி முறைகளைக் குறித்து வில்லியம் ஜோன்ஸ் ஆராயத் தொடங்கினார்.

மனுச் சட்டம் கொடுக்கப்பட்டது

இந்திய மக்களுக்குத் தகுந்த முறையில் ஓர் சட்டநூல் இயற்று வதற்காக ஏற்பட்டுள்ள சூழ்நிலையைக் கவனித்து அறிந்த பிராமணர்கள் அந்தச் சூழ்நிலையைத் தங்களுக்குச் சாதகமாகப் பயன்படுத்திக் கொண் டார்கள். ஆரியவர்த்தத்தில் திராவிடர்களை ஒடுக்கி இழிவுபடுத்தியும் அன்னியரான ஆரியர்களைச் சிறப்பித்து உயர்த்தியும் எழுதப்பட்ட வருணாசிரமதர்மம் என்ற மனுச் சட்டத்தைச் சர் வில்லியம் ஜோன்சிடம் கொடுத்து இதை இந்திய மக்களுக்குப் பொதுவான சட்டமாகப் பயன் படுத்தலாம் என்று ஆலோசனை கூறினார்கள்.

மனுச்சட்டம் ஆங்கிலத்தில் மொழிப்பெயர்ப்பு

தம்மிடம் கொடுக்கப்பட்ட மனுச்சட்டம் என்பது மண்ணின் மைந் தர்களாகிய திராவிடர்களுக்கு எதிராக அன்னியர்களால் தயாரிக்கப்பட்ட ஒன்று என்ற உண்மையைப் புரிந்து கொள்ளாமல் சர் வில்லியம் ஜோன்ஸ் அதை சமஸ்கிருத மொழியிலிருந்து ஆங்கில மொழியில் மொழி பெயர்க்கச் செய்தார்.

மொழி பெயர்ப்பால் வந்த விளைவுகள்

வருணாசிரமத் தர்மம் என்ற மனுச்சட்டம் நிறத்தின் அடிப்படையில் தயாரித்ததாகும். அது இந்தியாவில் வந்தேறிய வெள்ளை நிறமுடைய அன்னியர்களுக்காக இயற்றப்பட்டதாகும். அது அவர்களால் பிடிக்கப் பட்ட ஆரிய வர்த்தத்தில் திராவிடர்களை இழிவு படுத்தியும் வெள்ளை யர்களை மேன்மைப்படுத்தியும் எழுதப்பட்டதாகும். அதில் வெள்ளை நிறமுடைய ஆரியர்கள் ஆளப்பிறந்தவர்களென்று சிறப்பிக்கப்பட்டி ருந்தது. இந்தக் கூற்று வெள்ளை நிறமுடைய ஐரோப்பியர்களை எல்லாம் மெய் சிலுக்க வைத்தது.

வில்லியம் ஜோண்ஸின் உருவச்சிலை

சந்தோஷத்தின் மிகுதியால் வெள்ளையர்கள் கையில் மனுநூல் பிடித்த வண்ணம் சர் வில்லியம் ஜோண்சின் உருவச் சிலை ஒன்றை வெஸ்ட் மினிஸ்டர் ஆபி (West minster Abby)-யில் வைத்தார்கள். அச்சிலை இன்றும் அங்கு வைக்கப்பட்டிருக்கிறது. அதைத் தொடர்ந்து வெள்ளை நிறத்தவரான ஐரோப்பியரெல்லோரும் தங்களை ஆரியர்கள் என்று கூறிக் கொள்ளத் தொடங்கினார்கள். அவர்கள் ஆரியர் என்பது ஒரு இனத்தவர் என்றே தவறாய் எண்ணிக் கொண்டார்கள். இப்படிப்பட்ட வீண் பெருமையினால் ஜெர்மனியில் ஹிட்லர் லட்சக்கணக்கான யூதர்களைக் கொன்று குவிக்க நேர்ந்தது.

இந்துச் சட்டம் (Hindu Law)

அன்னியர்களின் வருணாசிரம தர்ம்மமென்ற மனு நூலைக் கி.பி. 1794-ல் சர் வில்லியம் ஜோண்ஸ் மொழி பெயர்த்து அதற்கு இந்து லா புக் (Hindu law Book) என்று பெயர் வைத்தார். அது மட்டுமல்ல அதின் அடிப்படையில் இந்தியச் சட்டத்தையும் அமைத்து அதற்கு இந்துலா (Hindu law) என்று பெயர் வைத்தார். எனவே வில்லியம் ஜோண்ஸ் என்பவரால் வகுக்கப்பட்ட Hindu law என்பது ஆரிய வர்த்தத்தில் வந்தேறிய அன்னியர்களுக்காக அமைக்கப்பட்ட ஆரியர்களின் ஜாதிக் கொள்கை அல்லது வாழ்க்கை முறை என்ற வருணாசிரமத் தர்மத்தின் அடிப்படையில் ஆனதே ஆகும்.

'இந்துலா' விலிருந்து 'இந்துயிஸம்'

வில்லியம் ஜோண்சால் ஏற்படுத்தப்பட்ட Hindu law என்ற ஆங்கில வார்த்தையிலிருந்து முதல்முதலாக இந்துயிசம் 'Hinduism' என்ற வார்த்தை உருவாக்கப்பட்டது. Hinduism என்பதற்கு Hindu law உருவா வதற்குக் காரணமான அடிப்படைக் கொள்கைகள் என்பதே பொருள். Hindu law மனுநூலின் அடிப்படையில் உருவானதாகும். மனுநூல் என்பது ஜாதிக் கொள்கையே. அதாவது கருமை நிறமுடைய திராவிடர்கள் பிறப்பால் இழிந்தவர்கள், அடிமைகள், வெள்ளை நிறமுடைய ஆரியர்கள் பிறப்பால் உயர்ந்தவர்கள், அவர்கள் ஆளப்பிறந்தவர்கள், திராவிடர்கள் ஆரியர்களால் ஆளப்பட வேண்டும். இவ்வாறு திராவிடர்களை ஆரியர்கள் அடிமைகளாக்கி வாழும் வாழ்க்கை முறையே அந்த ஜாதிக் கொள்கை. இப்படிப்பட்ட ஜாதிக்கொள்கை என்ற வாழ்க்கை முறையை ஏற்படுத்து வதற்காகத் திராவிடர்களை என்ன வேண்டுமானாலும் செய்யலாம். அதுவே நீதி. அதுவே தர்ம்மம் என்று எடுத்துக் கொள்ளப்பட்டது.

இந்துத்துவா என்ற புதுப்பெயர்

இந்துயிசம் 'Hinduism' என்ற ஆங்கில வார்த்தைக்குப் பயன்படுத்தப் பட்ட சமஸ்கிருத வார்த்தையே 'இந்துத்துவா' என்பது. எனவே இந்துத் துவா என்பது வருணாசிரமத் தர்மம் அல்லது ஜாதிக்கொள்கை அல்லது பிராமணீயம் என்ற ஆரிய வாழ்க்கை முறைக்கு உருவாக்கப் பட்ட புதுப்பெயராகும்.

இந்துத்துவா ஒரு வாழ்க்கை முறை ?

இந்நாட்களில் இந்துத்துவா அல்லது Hinduism என்பது ஒரு மதம் அல்ல. அது ஒரு வாழ்க்கை முறை என்று எல்லா இந்துத்துவவாதிகளாலும் பேசப்படுகிறது. அப்படியானால் அது யாருடைய வாழ்க்கை முறை ? அது யாரால் உண்டாக்கப்பட்ட வாழ்க்கை முறை? அது யாருக்காக உண்டாக்கப்பட்டது? என்பவைகளைக் குறித்து நாம் அறிய வேண்டியது அவசியமாகும்.

ஆரியர்களின் வாழ்க்கை முறை

இது வெள்ளை நிறத்தவராகிய ஆரியர்கள் தங்களை உயர்த்திச் கருமை நிறமுடைய திராவிடர்களை இழிவுபடுத்தி ஜாதியின் அடிப்படையில் தங்களுக்காக அமைத்துக்கொண்ட ஒரு வாழ்க்கை முறையே ஆகும். இது சிறுபான்மையினரான ஆரியர்கள் பெரும் பான்மையினரான திராவிடர்களை அடக்கி ஆளுவதற்காக ஏற்படுத்திக் கொண்ட சூட்சியே அல்லாமல் வேறல்ல.

வாழ்க்கை முறையால் வகுக்கப்பட்ட ஜாதிகள்

1. அன்னியர்களுக்குத் துணை நின்று சொந்த மக்களைக் காட்டிக் கொடுத்தவர்களை உயர்சாதி ஆக்கினார்கள். (Forward caste)

2. அன்னியர்களுக்கு அடி பணிந்த திராவிடர்களை இடை சாதியினர் அல்லது பிற்பட்ட சாதியினர் ஆக்கினார்கள். (Backward caste)

3. ஆதிக்கம் செலுத்திய அன்னியரை எதிர்த்த திராவிடர்களைக் கீழ்சாதியினர் அல்லது தீண்டத்தகாதவர்கள் ஆக்கினார்கள். (Untouchable or scheduled caste)

4. அன்னியர்களின் கொடுமைகளுக்குத் தப்பிக் காடுகளுக்கு ஓடினவர் களை மலைச் சாதியினர் ஆக்கினார்கள். (Scheduled tribes)

(இன்று காடுகளில் வசிக்கும் 'ஆதிவாசிகள்', 'காணிக்காரர்கள்' எனப்படுவோர் ஆதிநாட்களில் நாட்டின் சொந்தக்காரர்களாய் வசித்திருந்தவர்கள் ஆவர்.)

வலியுறுத்துவது யார்?

ஜாதிக் கொள்கை என்ற வாழ்க்கை முறையை இந்தியாவில் வலியுறுத்துகிறவர்கள் அன்னியர்களான ஆரியர்களே ஆகும். அவர் களுக்கு மதம் கிடையாது. அவர்கள் தீ வழிபாட்டையுடையவர்கள், அவர்கள் எந்த மத நூலையும் எழுதாதவர்கள். திராவிட அறிஞர்கள் எழுதிய வேதங்களைப் பறித்துக் கொண்டவர்கள். திராவிடர்களின் கோவில்களையும் அவர்களுடைய தெய்வங்களையும் பறித்துக் கொண்

டார்கள். திராவிட மக்களுடைய நிலங்களையும், உரிமைகளையும் பறித்துக் கொண்டவர்கள். திராவிடர்களுடைய அனைத்துச் செல்வங்களையும், செல்வாக்குகளையும் பறித்துக் கொண்டு அவர்களைத் தங்கள் கால்களின் அடியில் அடக்கி ஆளுகை செய்யும் பத்து சதத்துக்குக் கீழான சிறுபான்மையினர்.

அடக்கப்பட்டவர்கள் யார்?

Hindu law என்ற பெயரில் ஆங்கிலேயரால் திணிக்கப்பட்ட மனுச் சட்டத்தினால் இந்திய மக்களில் 90 சதவீதத்தவர்களான திராவிடர்கள் பத்துசதவீத ஆரியர்களின் கால்களின் கீழ் அழுத்தப் பட்டார்கள். நசுக்கப்பட்டுக் கிடக்கும் இந்தத் திராவிட மக்களுக்கு மதம் உண்டு.. அவர்கள் சிந்தனையாளர்கள்; தெய்வ பயம் உடையவர்கள். ஒரு கூட்டத்தார் சைவ மதத்தினர். மற்றொரு கூட்டத்தார் வைணவ மதத்தினர். இவர்கள் பலி செலுத்தாதவர்கள். மேலும் ஒரு கூட்டம் திராவிட மக்கள் பழந்திராவிடத் தொழுகை உடையவர்கள். இவர்கள் பலி செலுத்துபவர்கள். மண்ணின் மைந்தர்களாகிய இந்த நசுக்கப்பட்ட திராவிடர்கள் ராஜாக்களாகவும், தத்துவ மேதைகளாகவும், கணித நிபுணர்களாகவும், மத ஆசாரியர்களாகவும், முனிவர்களாகவும் இருந்தவர்கள். தங்களுடைய எல்லா உரிமைகளையும் பறி கொடுத்தவர்கள்.

அடக்கி ஆளும் வாழ்க்கை முறை

உயர் நிலைகளிலிருந்த 90 சதவீதத்திற்கு அதிகமான திராவிட மக்களை அரசாங்க உதவியோடு தங்கள் கால்களின் கீழே அடக்கி வைத்துக் கொள்ளச் சிறுபான்மையினரான ஆரியர்கள் கையாண்டு வரும் “வாழ்க்கை முறையே” இந்துத்துவா என்பது.

அதிகாரம் 17

'இந்துமதம்' என்ற போலிப் போர்வை

இந்துத்துவா ஒரு மதமல்ல

இந்தியாவுக்கு வந்தேறிய அன்னியர்கள் ஆரிய வர்த்தத்தை பிடித்துக் கொண்டு அங்கே தங்கள் ஆட்சியை ஸ்தாபித்தார்கள் என்றும் அவர்கள் தங்களை ஆரியர்கள் என்று அழைத்துக் கொண்டு திராவிட மக்களை இழிவுபடுத்தியும் ஆரியர்களை மேன்மைப்படுத்தியும் வருணத்தின் (நிறத்தின்) அடிப்படையில் ஒரு வாழ்க்கை முறையை ஏற்படுத்திக் கொண்டார்கள் என்றும் பார்த்தோம். ஆரியர்களின் இந்த வாழ்க்கை முறை வருணாசிரம தர்மம், மனுச்சட்டம், மனுதர்ம்மம், மனு தர்ம்ம சாஸ்திரம், சதுர் வர்ணம், ஜாதிக்கொள்கை, பிராமணீயம், இந்துத்துவா, வாழ்க்கை முறை என்றெல்லாம் அழைக்கப்படுகிறது.

இந்துத்துவா என்பது ஒரு மதமல்ல. அது 90 சதம் திராவிட மக்களை அடக்கி ஆளுகை செய்வதற்காக 10 சதத்தவராகிய ஆரியர்கள் தங்களுக்கு சாதகமாக ஏற்படுத்திக்கொண்ட ஒரு வாழ்க்கை முறையே ஆகும். இந் துத்துவாவுக்கும் கடவுள் கொள்கைக்கும் எந்த சம்மந்தமும் கிடையாது. ஆனால் சைவ வைணவ மதங்களையும் பழந்திராவிட வழிபாடுகளை யும் உடைய திராவிட மக்களை இந்துத்துவாவின் பிடிக்குள் சிக்க வைத்து, அதற்கு 'இந்துமதம்' என்ற போலிப்பெயர் வழங்கப்பட லாயிற்று.

இந்து மதம் - பொதுக்கருத்து -

பொதுவாக இந்துமதம் ஒரு சமயமென்றும் அது இந்திய மக்களில் பெரும்பாலானோர் பின் பற்றும் ஒரு மதம் என்றும் கருதப்படுகிறது. மட்டுமல்ல, இந்து மதம் என்பது தொன்று தொட்டே இருந்து வரும் ஒரு பழங்கால மதம் என்றும் அது காலங்களைக் கடந்த நிலையில் உருவானதால் எந்தக் காலத்தில் எவர் உருவாக்கினார் என்பது குறிப்பிடப்படவில்லை என்றும் அது "சனாதன தர்ம்மம்" அதவாது காலங்களுக்கு அப்பாற்பட்ட தர்மம் என்றும் அது தானாகவே வளர்ச்சியடைந்த ஒரு மதம் என்றும் பல நாகரிகங்களை உட்கொண்ட அதற்கு, ஒரு குறிப்பிட்ட மத நம்பிக்கை இல்லை என்றும் ஒரு நாத்திகனோ, ஒரு ஆத்திகனோ ஒரு ஏக தெய்வக் கொள்கை உடையவனோ, பல தெய்வக் கொள்கை உடைய வனோ, இந்துவாக இருக்க முடியும் என்றும் இது பல மதங்களின் கூட்டுச் சங்கமம் என்றும் எண்ணிறந்த ஆசார முறைகள் இதற்கு உண்டென்றும், முப்பத்து முக்கோடி தேவர்கள் உண்டென்றோ, எந்த ஒரு தெய்வமும் இல்லை என்றோ இயற்கை தான் தெய்வமென்றோ, நானே தான் கடவுள் என்றோ கூறிக் கொள்பவனும் இந்துவாக இருக்க முடியும் என்றும் இப்படி எதையும் ஏற்றுக் கொண்டு முற்போக்கில் செல்லும் ஒரு மதம் தான் இந்து மதம் என்று இந்து மதத்தைக் குறித்து அனேகர் பாராட்டி எழுதிய அனேக நூல்களை நாம் பார்க்கலாம். ஆனால், இதைக் குறித்து நாம் ஆழ்ந்து கவனிக்கும் போது 'இந்து மதம்' ஒரு மதம் அல்ல அது நாம் கற்பனை செய்து கொள்ளும் மாயையான ஒன்று என்று பார்க்க முடிகிறது.

போலிப்போர்வை

90 சதவீதம் திராவிட மக்களைத் தங்களுக்குக் கீழ்ப்படுத்தி ஆளுகை செய்யும்படி அரசாங்க உதவியோடு 10 சதவீத ஆரியர்களால் உண்டாக்கப் பட்ட இந்துத்துவா என்ற ஜாதிக் கொள்கையாகிய அரக்கனின் நச்சுத் தன்மைகள் வெளியே தெரியாமல் மறைத்து மூடுவதற்காக இந்துத்துவ வாதிகளால் உருவாக்கப்பட்ட மாய்கைப் போர்வையே 'இந்து மதம்' என்று அழைக்கப்படுவது. ஆரிய வர்த்தத்தில் ஆரியர்களால் ஏற்படுத்தப் பட்ட ஜாதிக் கொள்கையின் அடிப்படையில் உருவாக்கப்பட்டதே Hindu Law. அதிலிருந்து உருவாக்கப்பட்டதே Hinduism அல்லது இந்துத்துவா.

இந்துத்துவாவை மூடி வைத்திருக்கும் போர்வையே இந்து மதம் என்பதாகும்.

இந்துத்துவாவுக்கு 'இந்துமதம்' என்ற பெயர்

Hinduism என்ற இந்துத்துவாவின் கீழ்த் திராவிட மக்களைக் கொண்டு வருவதற்காக இந்துத்துவவாதிகளான ஆரியர்கள் திட்டம் வகுத்தார்கள். அதற்காக இந்துத்துவா என்பதை ஒரு மதமாகத் திரித்து அதனுள் திராவிட மதங்களைத் திணித்து அதற்கு 'இந்துமதம்' என்ற போலிப் பெயர் கொடுத்து அதைப் பிரஸ்தாபப்படுத்தினார்கள். மட்டுமல்ல அவ்வாறு இந்து மதமென்ற போலிப் போர்வைக்குள் வலுக்கட்டாயமாய்த் திணிக்கப் பட்ட சைவ வைணவ மதங்களுக்கு மதமில்லாத பிராமணர்களே மதத் தலைவர்களாக அமர்ந்து கொண்டார்கள்.

ஜாதிக் கொள்கை என்ற அரக்கன்

ஜாதிக் கொள்கை என்பது ஒரு அரக்கன். அது மதமல்ல அது பிராமணீயம். அது சிறுபான்மையினரான ஆரியர்களின் வாழ்க்கை முறை. அந்த அரக்கன் 90 சதவீதத்தவரான திராவிட மக்களைக் கட்டாயப் படுத்தித் தன் கால்களின் கீழ் அடக்கிக் கொண்டான். மட்டுமல்ல அவர்களை நிரந்தரமாக ஆட்சி செய்யச் சூட்சி செய்தான். அதற்காக உண்டாக்கப்பட்டதே அந்த மாயைப் போர்வை. அந்த அரக்கன் 'இந்து மதம்' என்ற போர்வையை எடுத்துத் தன்னையும் தன் காலடிகளில் வாடிக்கிடக்கும் 90 சதவீதத்தவரான திராவிடர்களையும் சேர்த்து மூடிக் கொண்டான். மட்டுமல்ல நாங்கள் எல்லாரும் 'இந்துக்கள்' நாங்கள் தான் பெரும்பான்மையினர் என்று கூறிக் கொண்டுத் திராவிடர்களை ஆளத் தொடங்கிவிட்டான்.

கட்டாயப் போர்வைக்குள்ளே

ஆனால் அந்த 'இந்து மதம்' என்ற கட்டாயப் போர்வைக்குள் அடங்கித் தவித்துக் கிடப்பது திராவிட மக்களின் சைவ வைணவ மதங்களும் பழங்காலத் திராவிடத் தொழுகையும் ஆகும். வேறு வழியில்லாமல் 90 சதவீதத்தினர் ஆன திராவிட மக்கள் 10 சதவீதத்தவரான ஆரியர்களுடன் இந்துக்கள் என முத்திரை குத்தப்பட்டார்கள். இதினி

மித்தம் ஒரு கட்டாயக் கலவை ஏற்படலாயிற்று. பழங்காலத் திராவிடத் தொழுகை, அன்னியர்களின் தீ வழிபாடு, வைதீக வழிபாடுகள், சைவ வைணவ சமயங்கள் ஆகிய எல்லாமே ஒன்று கலக்கப்பட்டன. ஏக தெய்வத் தொழுகையுடையவர்களும், பலதெய்வக் கொள்கை உடையவர்களும், முப்பத்து முக்கோடி தேவர்கள் உண்டு என்பவர்களும், நானே கடவுள் என்பவர்களும், சூரியன், சந்திரன், நட்சத்திரங்கள், பூமி, காற்று, மரம், காளை, யானை போன்ற எதையும் வணங்குகிறவர்களும், பலி கொடுப்பவர்களும் கொடாதிருப்பவர்களும், சடங்காச்சாரங்கள் உள்ளவர்களும் இல்லாதவர்களும் எல்லாருமே "இந்துக்கள்" என்ற வரிசையில் சேர்க்கப்பட்டார்கள். இதுவே பல்வேறு மதங்கள், கொள்கைகள், கோட்பாடுகள், எல்லாம் ஒன்று கலந்துவிடக் காரணமாயிற்று.

வெளியேறத் தடை

"இந்துமதம் "என்ற போலிப் போர்வைக்குள்ளிருக்கும் திராவிட மக்களில் எவரும் வெளியே சென்றுவிடாதபடி தடைசெய்யச் சங்கர மடங்கள் எப்போதும் விழிப்போடு உள்ளன. சங்கர மடங்களோடு இணைந்து இந்துத்துவாவைப் பாதுகாக்க BJP, R.S.S., விஸ்வகிந்து பரிசத், பஜ்ரங்தள், இந்துமுன்னணி போன்ற பிற அமைப்புகளும் கண்ணும் கருத்துமாய்ச் செயல்பட்டு வருகின்றன.

மதமென்றே நம்பும் பரிதாபம்

மேற்கூறப்பட்ட சங்கரமடங்களும் பிற அமைப்புகள் எல்லாம் மத அமைப்புகள் என்றே பெருவாரியான மக்களும் தவறாய்ப் புரிந்திருக்கிறார்கள். ஆனால் உண்மையில் அவைகள் இந்துத்துவா கொள்கையின் அமைப்புகளாகும். இந்துத்துவா என்பது ஒரு மதமே அல்ல என்றும் அது ஒரு வாழ்கை முறை மட்டுமே என்றும் இந்நாட்களில் எல்லோருமே கூறுகிறார்கள். ஆனால் சாதாரணமக்கள் 'இந்து மதம்' என்பது ஒரு மதமென்றும் சங்கர மடங்களும் மற்று அமைப்புகளும் மத அமைப்புகளே என்றும் இன்னமும் நம்பிக் கொண்டிருக்கிறார்கள். இல்லாதமதமாகிய இந்து மதத்தை இருப்பதாக மனப்பூர்வமாய் நம்ப வைக்கும் காரணத்தால் அப்பாவிமக்கள், இல்லாத அந்த மதத்துக்காக எதுவும் செய்யத் தயாராக உள்ளார்கள். இதைப் பயன்படுத்தி இந்துத்துவவாதிகள் மதவெறிச் செயல்களைத் தூண்டிவிடுகிறார்கள். இதினிமித்தம் திரா

விடர்கள் நிரந்தரமாக மதக்கலவரங்களில் தீவிரப்படுத்தப்படுகிறார்கள். இந்துத்துவவாதிகளோ அரசியல் செல்வாக்கு அடைகிறார்கள்.

மதமற்ற பூசாரிகள்

திராவிடப் புரோகிதர்கள் துரத்தப்பட்டுவிட்டார்கள். கோவில்களுக்கு எந்த சம்மந்தமும் இல்லாத பிராமணர்கள் எல்லாக் கோயில்களிலும் புரோகிதர்கள் ஆக்கப்பட்டு விட்டார்கள். கழுதைக்கும் கழுதைக்கும் அல்லது மரத்துக்கும் மரத்துக்கும் திருமணங்கள் நடத்தி வைக்கவும் எந்த பூஜைகள் செய்யவும் பிராமணப் புரோகிதர்கள் தயாராகி விட்டார்கள். இந்தச் செய்திகளை பத்திரிகைகளில் இன்று ஏராளம் பார்க்கிறோம்.

போர்வைக்குள் ஓலம்

இந்து மதம் என்ற கட்டாயப் போர்வைக்குள் அழுகையும் ஓலமும் அபயக் குரல்களும் எழும்புவதுண்டு. ஆனாலும் அவைகளை எல்லாம் அந்த அரக்கனே சமாளித்து விடுவான். தேவைப்படும் போது அரசாங்க உதவி எப்போதுமே உண்டு. போதாததற்குச் சங்கரமடங்களும் உண்டு. போர்வைக்குள் எதிர்ப்புக் குரல் எழுப்பிய எத்தனையோ தத்துவ மேதைகள், சிந்தனையாளர்கள், கவிஞர்கள், சித்தர்கள், முனிவர்கள் ஆகிய திராவிடர்கள் கொலை செய்யப் பட்டிருக்கிறார்கள்.

ஓடிப் போன சிலர்

ஈ.வே.ரா. பெரியார்

ஈ.வே.ரா. பெரியார் போன்றவர்கள் இந்து மதம் என்ற போர்வைக்குள் இருந்து கிளர்ச்சி செய்தவர்களில் சிலர். பெரியார் அகில இந்தியக் காங்கிரஸ் பொதுச் செயலாளர் பதவியிலிருந்தே விலகி, திராவிட இயக்கம் ஆரம்பிக்க வேண்டிய கட்டாயம் இதனால் ஏற்பட்டது.

அகில இந்தியக் காங்கிரஸ் மாநாடு ஒன்றில் பார்ப்பனக் காங்கிரஸ் உறுப்பினர்களுக்கு ஒரு பந்தியிலும், பிராமணர் அல்லாத உறுப்பினர்களுக்கு வேறு பந்தியிலும் உணவு பரிமாறப்பட்டது. இந்தப் பாரம் பரியத்தை எதிர்த்துக் காங்கிரஸ் கட்சியில் சமத்துவம் வேண்டும் என்று

பெரியார் ஆலோசனை கூறினார். அதைப் பிராமண உறுப்பினர்கள் ஏற்கவில்லை. எனவே தாம் அக்கட்சியில் இருக்க விரும்பவில்லை என கூறிய பெரியார் காங்கிரஸ் கட்சியிலிருந்து வெளியேறி திராவிட இயக்கத்தை ஆரம்பித்தார்.

Dr. அம்பேத்கார்

டாக்டர் அம்பேத்கார் போன்ற பலர் இந்து மதம் என்ற கட்டாயப் போர்வைக்குள்ளிருந்து தப்பி ஓடியிருக்கிறார்கள். டாக்டர். அம்பேத்கார் தம்மைச் சேர்ந்த பலரோடு இந்துமதம் என்னும் போர்வையிலிருந்து தப்பிச் சென்று புத்தமதத்தைத் தழுவிக் கொண்டார்.

மகாத்மா ஜோதிராவ் பூலே

மகாத்மா ஜோதிராவ் பூலே பிராமணனான தன் பள்ளிக்கூட நண்பனின் குடும்பத் திருமணத்திற்கு அழைக்கப்பட்டிருந்தார். ஆனால் அவர் அங்குச் சென்றபோது, தாம் ஒரு தலித் என்பதால் அடித்து உதைத்துத் துரத்தப்பட்டார். மனமுடைந்த அவரும் அவருடைய மனைவியுமாகப் பிராமணீயத்திலிருந்து விடுதலைபெற, பிராமணர்கள் அல்லாதோரின் அமைப்பாகிய ‘சத்திய சோதக் சமாஜ்’ என்ற அமைப்பை உருவாக்கி, அனேகப் பள்ளிக் கூடங்களை, முக்கியமாக பெண்களுக்காக ஆரம்பித் தார்கள்.

ஜெகஜீவன் ராமுக்கு ஏற்பட்ட அவலம்

ஜெகஜீவன் ராம் பல்லாண்டு மத்திய அமைச்சராகவும் பாதுகாப்பு மந்திரியாகவும் துணைப் பிரதமராகவும் இருந்தவர். அவர் வாரனாசியில் முன்னாள் சபாநாயகராயிருந்த பிராமணராகிய திரு. சம்பூர்ணானந்த் என்பவரின் உருவச் சிலையைத் திறந்து வைத்தார். இவர் தலித் இனத்தவரைச் சேர்ந்தவராகையால் அந்தச் சிலை தீட்டுப்பட்டு விட்டது என்று கூறி அந்தச் சிலை கங்கை நீரைக் கொண்டு சுத்தம் செய்யப் பட்டது.

இதுபோன்று எண்ணற்ற திராவிடர்கள் இந்து மதம் என்ற போலிப் போர்வைக்குள் தவித்துக் கிடக்கிறார்கள்.

அதிகாரம் 18

'இந்து', 'இந்துக்கள்' தலைவர்கள் விளக்கம்

20 ஆம் நூற்றாண்டு முதல் திருப்பம்

ஆரியர்களால் இழிவுபடுத்தப்பட்ட திராவிட மக்கள் உலகிலேயே மிகச் சிறந்த நாகரிகத்தை உடையவர்கள் என்ற உண்மை கி.பி 20 ஆம் நூற்றாண்டில் ஆதாரப்பூர்வமாய் நிலைநாட்டப்பட்டது. கி.பி. 1920-ல் ஹரப்பா, மொஹஞ்சதாரோ ஆகிய இடங்களில் மேற் கொள்ளப்பட்ட அகழ்வாராய்ச்சிகள் புகழ்பெற்ற சிந்துவெளி நாகரிகத்தை வெளிக் கொண்டு வந்துள்ளன. சிந்துவெளி நாகரிகம் திராவிடர்களின் நாகரிக மாகும். தங்கள் மகிமையான முன் நிலைமைகளைக் குறித்து அறிந்து கொண்ட திராவிட மக்கள் புத்துயிர் அடையத் தொடங்கி விட்டார்கள். புதைக்கப்பட்டுக் கிடந்த பல இலக்கியங்களையும் அரிய பொக்கிஷங்க ளையும் வெளிக்கொண்டு வரவும் தொடங்கி விட்டார்கள். அதே வேளையில் அவர்கள் இந்துத்துவாவின் தன்மைகளைக் குறித்தும் ஆராயத் தொடங்கி விட்டார்கள்.

ஆரியமயமாக்கும் முயற்சி

மேற்கூறப்பட்ட சிந்துவெளி நாகரிகத்தையும் திராவிடர்களிலிருந்து பறித்துக் கொண்டு அதைத் தங்களுடையதாக்கிக்கொள்ள ஆரியர்கள் அரும்பெரும் பாடுகள் பட்டுக்கொண்டிருக்கிறார்கள் என்பது குறிப் பிடத்தக்கதாகும்.

இந்தியா சுதந்திரத்துக்குப் பின்

இருபதாம் நூற்றாண்டில் (கி.பி. 1947) இந்தியா வெள்ளையர்கள் ஆட்சியிலிருந்து சுதந்திரம் அடைந்தது. அந்நாட்களிலும் முக்கியமான பொறுப்புகள் அனைத்தும் பிராமணர்களிடமே இருந்தது. இந்தியாவுக்கு ஓர் அரசியல் சட்டம் எழுதப்பட்ட போதிலும் அது முழு அளவில் மண்ணின் மைந்தர்களாகிய திராவிடர்களுடையதாக அமையவில்லை. இந்திய அரசியல் சட்டம் அமைப்பதற்கு Dr. அம்பேத்காருக்கு முக்கிய பொறுப்புகள் அளிக்கப்பட்டிருந்த போதிலும் அமைப்புகள் எல்லாமே ஜாதிக்கொள்கையின் பிடியில் இருந்தபடியால் சுதந்திரமாகச் செயல்பட அன்னாருக்கு இயலவில்லை. வெள்ளையர்கள் நாட்டைவிட்டு வெளியேறும் போது இந்தியத் தேசம் ஆரியர்கள் கைகளில் விட்டுச் செல்லப் பட்டது என்றே கூற வேண்டும்.

தேர்தல்கள்

இந்தியா சுதந்திரமடைந்த பின் நாட்டில் சட்டசபைகளுக்கும் மக்களவைக்கும் தேர்தல்கள் நடத்தப்பட வேண்டியதிருந்ததால் ஆட்சி அமைப்பவர்களுக்கு மக்களைச் சந்திக்க வேண்டிய சூழல் ஏற்பட்டது. எனவே திராவிட மக்கள் படிப்படியாகத் தங்கள் உரிமைகளைக் குறித்து சிந்திக்கலாயினர்.

மதத்தால் குழப்பங்கள்

திராவிட மக்கள் தங்கள் தேசிய உரிமைகளையும் அரசியல் உரிமைகளையும் குறித்து விழிப்புணர்வடைவது ஆரிய பிராமணர்களுக்குப் பெரும் எரிச்சலை ஏற்படுத்தியது. எனவே திராவிட மக்களில் பெரும் பகுதியினரை 'இந்துமதம்' என்ற பெயரில் மேலும் மேலும் தங்களிடம் ஒன்று சேர்த்தார்கள். ஆனால் பிராமணீயத்தின் அடிஸ்தானம் ஜாதிக்கொள்கை ஆகையால் இந்து மதம் என்ற போர்வைக்குள் அமைதி காக்க இயலவில்லை. இந்நிலையில் அனேக மதக்கலவரங்களும் குழப்பங்களும் ஏற்படத் தொடங்கின. திராவிடர்கள் தங்களுக்காக அனேக இயக்கங்கள் ஆரம்பிக்கத் தொடங்கினார்கள். எனவே பிராமணர்களுக்கும் அவர்களைச் சார்ந்த இயக்கங்களுக்கும் திராவிட இயக்கங்களோடு எதிர்கொள்ள வேண்டியதாயிற்று.

மாறுபட்ட அறிக்கைகள்

இந்துமதம் என்பது ஒரு மதமல்ல அது ஒரு வாழ்க்கை முறை என்று சிலர் கூறும் அதே வேளையில் இந்துமதம் இந்தியாவின் மதம் என்றும், இந்துக்கள் அல்லாதவர்கள் இந்தியாவை விட்டு வெளியேற வேண்டும் என்றும், இந்தியாவை இந்து ராஸ்ட்ரம் ஆக்க வேண்டும் என்றும், இந்துக்கள் அல்லாதவர்களுக்கு இந்தியாவில் குடியுரிமை வழங்கக்கூடாது என்றும், இந்துத்துவா என்பது இந்திய மக்களின் ஆணிவேர் என்றும் பலதரப்பட்ட விவாதங்கள் இன்று நடந்து வருகிறது. இது பல குழப்பங்களையும் மதக் கலவரங்களையும் தூண்டி விடக் காரணமாகவும் அமைந்து வருகிறது. இந்நிலையில் இன்று உபயோகப் படுத்தப்படும் 'இந்து', 'இந்துமதம்', 'இந்துக்கள்' போன்ற வார்த்தைகளைத் தலைவர்கள் பலரும் தெளிவுபடுத்தியுள்ளார்கள்.

'இந்து' நேருவின் விளக்கம்

'இந்து' என்ற வார்த்தையைப் பண்டிட் ஜவஹர்லால் நேரு தன் Discovery of India என்ற நூலில் கீழ்க்கண்டவாறு விளக்கியிருக்கிறார்கள்.

'இந்து' - ஒரு மதத்தைக் குறிப்பதல்ல

' 'இந்து' என்ற வார்த்தை நம் முற்கால இலக்கியங்களில் காணப் படுவதில்லை. ஒரு இந்திய நூலில் முதல் முதலாய் இவ்வார்த்தை காணப்படுவது கி.பி 8-ம் நூற்றாண்டில் எழுதப்பட்ட ஓர் நூலில் என்று அறிகிறேன். அங்கே 'இந்து' என்பது ஒரு ஜனம் என்ற கருத்தில் மட்டுமே உபயோகிக்கப்பட்டுள்ளது. ஒரு மதத்தை சுட்டிக் காட்டும் கருத்தே அங்கு எழவில்லை.'

சௌராஷ்டிர மத நூலில்

' 'இந்து' என்ற வார்த்தை செண்ட்அவஸ்தி (சௌராஷ்டிரமத நூல்) யிலும் முற்கால பாரசீக மொழியிலும் பயன்படுத்தப்பட்டிருப்பதால் அது அங்கே மிகப் பழமையான வார்த்தை எனக் காணலாம். பாரசீகத்தி லும், மேற்கு ஆசியா, மத்திய ஆசியா, ஆகிய நாடுகளிலும் ஆயிரத்துக்கு

மேற்பட்ட ஆண்டுகளுக்கு முன்பே இந்த வார்த்தை பயன்படுத்தப் பட்டிருந்தது.'

சிந்து தேச மக்கள்

'அதாவது, முற்கால நூல்களில் இந்தியாவின் ஜனங்ளைச் சிந்து நதி தேசத்தின் மக்கள் என்று குறிப்பிடும் வகையில் அந்த வார்த்தை உபயோகிக்கப்பட்டுள்ளது. இன்டஸ் (Indus) என்று ஆங்கிலத்தில் சொல்லப்படும் நதிக்கு முற்காலத்திலும் இன்றும் காணப்படும் பெயர் 'சிந்து' என்பதாகும். சிந்து என்னும் வார்த்தையிலிருந்தே 'ஹிந்து', 'ஹிந்துஸ்தானி', 'இந்தோஸ்', இந்தியா ஆகிய வார்த்தைகள் தோன்றியது என்பதற்குச் சந்தேகமே இல்லை.'

சீன யாத்திரிகன் குறிப்பிடும் - 'ஹிந்து தேசம்'

'கி.பி 7-ம் நூற்றாண்டில் இந்தியாவுக்கு வந்த சீன யாத்திரிகன் ஈட்சிங் தன் நூல்களில் மத்திய ஆசியாவில் உள்ள ஜனங்கள் இந்தியாவை "ஹிந்து தேசம்" என்று அழைப்பதாகக் குறிப்பிட்டுள்ளார். வேறுபொருளுடன் (ஒரு மதம் என்ற பொருளில்) இவ்வார்த்தையை இணைத்து உபயோகிப்பது சமீப காலங்களில் ஆகும்." இவ்வாறு நேரு தம் நூலில் விளக்கியுள்ளார்.

'இந்து தேசம்' விவிலியத்தில்

பெர்சிய நாட்டின் மந்திரியாய் இருந்த மொர்தெகாய் என்பவன் எழுதிய எஸ்தர் என்னும் நூலில் இந்தியாவை அந்நாட்களில் (கி.மு464) இந்து தேசம் என குறிப்பிட்டுள்ளான். அதாவது சிந்து நதியின் தேசம் என்று பொருள்.

'சிந்து' விலிருந்து 'இந்து'

மேலே கூறப்பட்ட கருத்துக்களின் படி ஹிந்து என்ற வார்த்தை சிந்து என்ற நதியின் பெயரிலிருந்து உண்டாயிற்று என்று பார்க்கிறோம். சிந்து என்று உச்சரிக்கத் தெரியாத பெர்சியர்கள் 'ஹிந்து' என்று உச்சரித்

ததால் 'ஹிந்து' என்ற வார்த்தை உண்டாயிற்று. அது ஒரு மதத்தின் பெயர் அல்ல. ஹிந்து தேசம் என்பதற்கு சிந்து நதியின் தேசம் என்பது பொருள். மட்டுமல்ல, ஹிந்து என்ற வார்த்தைக்கு ஒரு மதத்தின் பெயர் கொடுக்கப்பட்டது சமீப காலத்தில் அதாவது *1794*-க்குப் பின் என்று பார்த்தோம்.

'ஹிந்துக்கள்'

ஹிந்துக்கள் என்ற வார்த்தைக்கு ஹிந்து தேசத்தில் அதாவது, சிந்து நதியின் தேசத்தில் வசிக்கும் மக்கள் என்பதே பொருள். எனவே இன்று நம் தேசத்தில் வாழும் வைணவர், சைவர், பௌத்தர், ஜெயினர், சீக்கியர், கிறிஸ்தவர்கள் இஸ்லாமியர்கள் அனைவருமே இந்துக்கள் என்று கூறுவதே பொருத்தமாகும்.

'இந்து மதம்'

'இந்து மதம்' என்று ஒரு மதம் இல்லாதிருந்தும் அது எப்படி ஒரு மதம் என்று இந்துத்துவ வாதிகளால் உருவாக்கப்பட்டது என்பதைக் குறித்து முன்னால் பார்த்தோம். அது இன்றும் ஒரு மதமாகவே கருதப்பட்டு வருகிறது என்பதே உண்மை.

பத்திரிகைகளில் செய்திகள்

இன்று நம் பத்திரிகைகளில், இந்துக்களுக்கும் இஸ்லாமியருக்கும் சண்டை, சீக்கியருக்கும் இந்துக்களுக்கும் இடையே மதக்கலவரம், இந்துக்களுக்கும் கிறிஸ்தவர்களுக்கும் சண்டை, இது போன்ற தலைப்புகளில் செய்திகள் வெளிவருகின்றன. இதிலிருந்து 'இந்து மதம்' ஒரு மதம் என்றே எடுத்துக் கொள்ளவேண்டியிருக்கிறது.

மேலும் 'இந்தியாவில் பெரும்பான்மையான இந்துக்களின் நல்லெண்ணத்தைப் பெற்று வாழ்வது தான் சிறுபான்மையினருக்கு உண்மையான பாதுகாப்பு என்று R.S.S. மாநாட்டில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது' என்று செய்தித் தாள்களில் வெளிவந்த செய்தி நாடு முழுவதும் மிகுந்த சர்ச்சையை உருவாக்கியது.

இந்து மதம் ஒரு மதமல்ல

இல்லாத இந்து மதத்தை இருப்பதாக உருவேற்றிய இந்துத்துவ வாதிகளே இந்நாட்களில் இந்துமதம் என்பது ஒரு மதம் அல்ல என்று பேசத் தொடங்கி விட்டார்கள். R.S.S. தலைவர் சுதர்சன் என்பவர் வெளியிட்டுள்ள ஓர் அறிக்கை *17-12-03* அன்று தினமலர் நாளிதழில் 'இந்து' மதத்தைக் குறிப்பது அல்ல'' என்ற தலைப்பில் வெளிவந்துள்ளது.

செய்தி

"இந்து என்ற வார்த்தை எந்த ஒரு மதத்தையும் குறிப்பிடுவது அல்ல. இந்தியாவைத் தாயகமாகக் கருதும் அனைவரும் இந்துக்கள் தான்... இந்து என்ற வார்த்தை எந்த மதத்துடனும் சம்மந்தப்பட்ட வார்த்தை அல்ல. எனவே, இந்தியாவில் வாழும் முஸ்லீம்கள் மற்றும் கிறிஸ்தவர்களைக் கூட இந்துக்களாகக் கருத முடியும். இந்து என்பது ஒரு வாழ்க்கை முறையைக் குறிப்பது என்று சுப்ரீம் கோர்ட் கூட ஒரு தீர்ப்பில் கூறியிருக்கிறது. அந்த விளக்கத்தில் R.S.S க்கு உடன்பாடு உண்டு" இவ்வாறு செய்தி வெளிவந்துள்ளது.

இந்தியாவின் முன்னால் பிரதமரின் கூற்று

நமது தேசத்தில் முன்னால் பிரதமராய் இருந்த வாஜ்பாய் அவர்களும் இதே கருத்தைப் பல பத்திரிக்கைகள் வழியாக தெளிவுபடுத்தி இருக்கிறார்கள். மேலும் அவர் இந்துத்துவா அல்லது இந்து மதம் என்பதில் கடவுள் கொள்கைக்கு இடமில்லை என்று தெளிவாகக் கூறியுள்ளார்.

உச்ச நீதி மன்றத் தீர்ப்பு

இந்நிலையில் சமீபகாலத்தில் நமது உச்சநீதி மன்றம் 'இந்து மதம்' ஒரு மதமல்ல அது ஒரு வாழ்க்கை முறை மட்டுமே (Hinduism is not a religion. It is only a way of life) என்று சில வழக்குகளில் தீர்ப்பு கூறி இருப்பதையும் பார்க்கிறோம்.

வியப்பூட்டும் நிலை

இந்த நிலை ஓர் விந்தையான நிலையாகக் காணப்படுகிறது. நம் நாட்டில் பல்லாயிரக்கணக்கான மக்கள் தங்களை இந்து மதத்தவர்கள் என்று கூறி செயல்பட்டுக் கொண்டு இருக்கிறார்கள். பற்பல முறைகளில் வித்தியாசமான வழிபாடுகளைச் செய்கிறார்கள். அரசு அலுவலகங்களுக்கு விண்ணப்பப் படிவங்களில் தங்கள் மதம் இந்து மதம் என்று எழுதப்பட்டு அவை அரசால் அங்கிகரிக்கப்படுகிறது. எல்லா வேலை வாய்ப்புத் துறைகளிலும் அரசு ஊழியங்களிலும் தங்கள் மதம் எது என்று எழுப்பப்படும் கேள்விகளில் அதற்கு விடை இந்துக்கள் என குறிப்பிட வேண்டிய சூழ்நிலை ஏற்படுகிறது.

வேறுபட்ட நிலைகள்

நமது உச்ச நீதிமன்றம் இந்து மதம் ஒரு மதமல்ல என்று கூறும் அதே வேளையில் அரசு அலுவலகங்கள் அனைத்தும் இந்து மதம் ஒரு மதம் என்று ஏற்றுக்கொள்கின்றன. இது சிந்திக்கும் எவரையும் வியப் பூட்டும் ஒரு நிலை ஆகும். எனவே இந்தக் குழப்படிகள் அனைத்திற்கும் காரணம் என்ன என்பதைக் குறித்து ஆராய வேண்டியது மிகவும் அவசியம் ஆகும். அதுமட்டுமல்ல, இந்தக் குழப்ப நிலை நீடிக்காமல் தகுந்த நடவடிக்கைகள் மேற்கொள்ள வேண்டியது இந்திய அரசாங் கத்தின் கட்டாயமாகும்.

அதிகாரம் 19

இந்துத்துவ வாதிகளுக்குக் கேள்விகள்

இந்துத்துவா - ஒரு கண்ணோட்டம்

1. திராவிட நாகரிகம்

சைவ வைணவ மதங்கள் திராவிடர்களின் மதம் என்றும் திராவிடர்கள் உலகின் முதல் மனிதச் சமுாயத்தைச் சேர்ந்தவர்கள் என்றும் அவர்கள் சிறந்த நாகரிகம் படைத்திருந்தார்கள் என்றும் பார்த்தோம். வெளிநாட்டாரான அன்னியர்கள் இந்தியாவில் புகுந்து தங்களை ஆரியர்கள் என்று கூறிக்கொண்டு கூட்டணி ஆட்சி அமைத்தார்கள் என்றும் அவர்கள் மூலம் திராவிடர்களின் சிறந்த நாகரிகம் நலிவுற்றது என்றும் பார்த்தோம். மட்டுமல்ல AD முதலாம் நூற்றாண்டில் அப்போஸ்தலனாகிய தோமா இந்தியாவுக்கு வந்தார். அவர் கொண்டு வந்த நற்செய்தியைத் திராவிட மக்கள் ஏற்றுக்கொண்டார்கள். தோமாவின் கடவுள் கொள்கையில் முக்கியமான திரித்துவக் கொள்கையையும் திராவிட மக்கள் ஏற்றுக்கொண்டார்கள் .

2. மாற்றங்கள்

தோமாவின் கொள்கையினால் முதலாம் நூற்றாண்டில் இந்தியாவில் இருந்து வந்த எல்லா மதங்களிலும், வழிபாடுகளிலும் மாற்றங்கள் ஏற்பட்டன. தோமாவின் திரித்துவக் கொள்கையினால் பழந்திராவிட வழிபாடுகளிலும் மாற்றங்கள் ஏற்பட்டன. தோமாவால் இந்தியாவுக்குக்

கொண்டு வரப்பட்ட ஆதிக் கிறிஸ்தவக் கொள்கைகளால் திராவிடர்களின் சைவ வைணவ மதங்கள் உருவாயின. அதைத்தொடர்ந்து திராவிடர்கள் தாங்கள் அறிந்த கடவுள் கொள்கைகளைப் பரப்புவதற்காகச் சமிஸ்கிருத மொழியைத் தோற்றுவித்தார்கள். கோயில்களைக் கட்டி தொழுகை ஆரம்பித்தார்கள். இதிகாசங்கள், புராணங்கள், சைவ வைணவ இலக்கியங்கள் ஆகியவற்றை வளர்த்தார்கள். எல்லாத்துறைகளிலும் திராவிடர்களின் சைவ வைணவ மதங்கள் வளர்ச்சி அடைந்தன.

3. ஆரியர்களின் ஆதிக்கம்

அதே வேளையில் அன்னியர்களான ஆரியர்கள் இந்தியாவில் சில பகுதிகளைப் பிடித்து ஆட்சி அமைக்கத் தொடங்கி விட்டார்கள். அவர்கள் திராவிட மக்களையும் அவர்களுடைய மதங்களையும் அடிமைப்படுத்தத் தொடங்கினார்கள். அதற்காக ஜாதி ஏற்றத்தாழ்வை உண்டுபண்ணி அதின் அடிப்படையில் ஒரு வாழ்க்கை முறையை ஏற்படுத்திக் கொண்டார்கள். அந்த வாழ்க்கை முறை அவர்கள் ஆட்சிக்குச் சட்டமாக்கப்பட்டது. அது மனுச்சட்டம் என்றும் வருணாசிரம தர்மம் என்றும் அழைக்கப்பட்டது. சைவ வைணவர்களான திராவிடர்கள் வலுக்கட்டாயமாக இக்கொள் கைக்கு அடிமைப்படுத்தப்பட்டார்கள்.

4. இந்துத்துவா

ஆங்கிலேயரின் ஆட்சிக் காலத்தில் பிராமணர்களுடைய சூழ்ச்சியால் ஆரியர்களுடைய மனுச்சட்டத்தின் அடிப்படையில் இந்தியச் சட்டம் தயாரிக்கப்பட்டது. இந்திய மக்களான திராவிடர்களுக்காக உருவாக்கப் பட வேண்டிய இந்தியச் சட்டம் திராவிட மக்களை ஆரியர்கள் அடிமைப் படுத்தும் முறையில் வருணாசிரம தர்மத்தின் அடிப்படையில் உண்டாக்கப் பட்டது. அது திராவிடமக்களை ஆரியர்களுக்குக் கீழ்ப்படுத்தும் ஆரியர் களின் வாழ்க்கை முறை ஆகும். அந்த வாழ்க்கை முறையில் உன்னத நிலைகளிலிருந்த சைவ வைணவர்களான திராவிட மக்கள் ஜாதி ஜாதிகளாகப் பிரிக்கப்பட்டு ஆரியர்களுக்கு அடிமைபடுத்தப்பட்டார்கள். இது பிராமணர்களாலும் ஆங்கிலேயே ஆட்சியாலும் ஏற்பட்ட சூழ்ச்சியே ஆகும். இதுவே இந்துத்துவா என்ற பிராமணியம்.

5. திராவிடரைக் கீழ்ப்படுத்தும் வாழ்க்கை முறை

இந்துத்துவா என்பது ஒரு வாழ்க்கை முறை என்று பேசப்படுகிறது. ஆனால் அது திராவிட மக்களை இழிவுபடுத்தி ஆரியர்களை உயர்த்தும் வாழ்க்கை முறை ஆகும். இந்துத்துவா என்பது ஒரு மதமல்ல அது மனித நேயமற்றதும் காட்டுமிராண்டித்தனமானதும் ஆன ஒரு வாழ்க்கை முறை. திராவிட மக்களைக் கீழ் ஜாதி என்று கூறி அவர்களை ஒழித்து கட்டும் வாழ்க்கை முறை. அதன் தன்மைகளைக் குறித்து முன்னால் கொடுக்கப் பட்ட மனுச்சட்டத்தின் பகுதிகளிலிருந்தும் பின்னால் இணைக்கப்பட்ட பிராமண சமாஜ் சுற்றறிக்கைகளிலிருந்தும் அறிந்து கொள்ளலாம். இதைக்குறித்து பல எதிர்ப்புகளும் போராட்டங்களும் நடந்த போதிலும் இதுவரை எவ்வித நடவடிக்கைகளும் எடுக்கப்படவில்லை என்பது வியக்கத்தக்க ஒன்றாகும்.

6. ஜாதிப் பிரிவுகள்

இந்துத்துவாவுக்கும் அன்புக்கடவுளின் கொள்கைகளைக் கொண்ட சைவ வைணவ மதங்களுக்கும் எவ்விதத்திலும் ஒற்றுமை இல்லை. ஆனால் பிராமணர்களின் ஆதிக்கத்தால் சைவ வைணவ மதங்கள் இந்துத்துவாவுக்குள் வலுக்கட்டாயமாய் அடக்கப்பட்டன. மட்டுமல்ல, அது இந்து மதம் என்று அழைக்கப்பட்டது. சைவவைணவர்களான திராவிடமக்கள் ப ல ஜாதிகளாகப் பிரிக்கப்பட்டு இந்துத்துவாவுக்குள் திணிக்கப்பட்டார்கள். இவ்வாறு திணிக்கப்பட்ட சைவ வைணவர்களான திராவிடர்கள் ஆரிய பிராமணர்களின் சூழ்ச்சிகளால் பல முறைகளில் நிரந்தரமாக அமுக்கப்பட்டார்கள். காலா காலங்களாக அவர்கள் மூளை சலவை செய்யப்பட்டவர்களானார்கள். சைவ வைணவர்களான திராவிட மக்களில் சில பிரிவினரை அவர்கள் கையில் வைத்துக் கொண்டு மனிதாபி மானத்திற்கு முரண்பாடான பல்வேறு அக்கிரமங்களுக்கும், பயங்கரங்க ளுக்கும் பயிற்சி அளித்து அவர்களையே தங்கள் சகோதரரான திராவிட மக்களுக்கு எதிராய்க் கிளப்பி விடுகிறார்கள். இந்துத்துவா கொள்கையைக் கட்டிக்காக்க ஸ்தாபிக்கப்பட்டுள்ள சங்கரமடங்கள் இத்தகைய காரியங் களைக் கண்ணும் கருத்துமாய் நடப்பிக்கின்றன.

போராட்டங்கள்

இந்நாட்களில் திராவிட அறிஞர்கள் இந்துத்துவாவின் நச்சுத் தன்மையைக் குறித்தும் திராவிடர்களுடைய புனிதமான சைவ வைணவ மதங்களைக் குறித்தும் அவைகள் பிராமணர்களால் எவ்வாறு கறை படுத்தப்பட்டன என்பதைக் குறித்தும் வரலாற்று ரீதியாகவும், விஞ்ஞான ரீதியாகவும் ஆராய்ச்சிகளின் அடிப்படையில் அறிவு பெற்றிருக்கிறார்கள். இவைகளின் அடிப்படையில் அனேக கருத்துக்கள் வெளியிடப்பட்டிருக் கின்றன. சைவ வைணவர்களான திராவிடமக்கள் விழிப்புணர்வு அடைந்திருக்கிறார்கள். இந்துத்துவாவைக் கட்டிக்காக்கும் சங்கரமடங் களோடு அமைதியான முறையில் போராட்டங்கள் செய்து வருகி றார்கள். அதி விரைவில் சைவ வைணவ மதங்கள் இந்துத்துவாவின் பிடியிலிருந்தும் இந்துமதம் என்ற போலிப்போர்வையிலிருந்தும் விடுவிக்கப்பட்டு அதன் ஆதி நாட்களின் புனிதத் தன்மையை மறுபடியும் பெற்றுக்கொள்ளும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

சங்கர மடத்துக்கு 108 கேள்விகள்

இந்தியாவில் இந்துத்துவா கொள்கையை நிலைநாட்டுவதற்காக ஸ்தாபிக்கப்பட்டிருக்கும் சங்கரமடத்துக்குத் திராவிட சமயம் ஆசிரியரான Dr. M. தெய்வனாயகம் அவர்கள் 1994-ஆம் ஆண்டு இது சம்மந்தமான 108 கேள்விகளைக் கேட்டு எழுதி அனுப்பியுள்ளார். ஆனால் அக்கேள்வி களுக்குச் சங்கரமடத்திலிருந்து பதில் அனுப்பப்படவில்லை. எனவே அந்தக் கேள்விகளைப் பொது மக்களின் கவனத்திற்காக 'சங்கர மடத்துக்கு 108 கேள்விகள்' என்ற தலைப்பில் ஒரு நூலாகவும் வெளியிட்டுள்ளார்கள். அதோடு சங்கரமடத்தோடு போராட வேண்டியது ஏன்? என்ற மற்றொரு நூலும் வெளியிட்டிருக்கிறார். அந்நூல்கள் இந்துத்துவாவின் பல தன்மை களை விளக்குகின்றன.

பிரசுரிக்கப்பட்ட ரகசிய சுற்றறிக்கைகள்

அந்நூல்களில், வேறு பல பத்திரிக்கைகளில் (அதாவது விடுதலை ஞாயிறு மலர் 26-3-1995, தமிழக பறையர் குரல் ஏப்ரல் 1995,நமது உரிமை முரசு 1995, திராவிட சமயம் July 1995) வெளிவந்த R.S.S. மற்றும்

பிராமண சங்கம் ஆகிய இயக்கங்களின் இரகசிய சுற்றறிக்கைகள் கொடுக்கப்பட்டுள்ளன. அவைகள் வாசகர்களுக்காக இந்நூலின் பின்னிணைப்பில் (இணைப்பு - I) கொடுக்கப்பட்டுள்ளன.

இந்துத்துவா என்பது மதமல்ல

பின்னால் இணைக்கப்பட்டுள்ள இரகசிய சுற்றறிக்களையும் அவற்றிற்கு அடிப் படையான மனுச்சட்டத்தையும் பார்க்கும் போது இந்துத்துவா என்ற ஜாதிக் கொள்கை ஒரு மதம் அல்ல என்பது தெளி வாகப் புலன்படுகிறது. கடவுள் கொள்கைக்கும் இந்துத்துவா என்ற பிராமணீயத்துக்கும் எந்தத் தொடர்பும் இல்லை என்பது தெளிவாய் காண முடிகிறது. எனவே தான் இந்துத்துவ வாதிகள் இந்துமதம் ஒரு மதம் அல்ல என்று இப்போது கூறி வருகிறார்கள்.

சமூக விரோதச் செயல்கள்

இந்துத்துவா என்பது ஒரு மதம் அல்ல என்று இருந்த போதிலும் அதன் கொள்கைகளும், செயல்பாடுகளும் மனித நேயத்திற்கு மாறானது என்பது வருந்தத்தக்கதாகும். சுற்றறிக்கைகளில் தாழ்த்தப் பட்டோர், பழங்குடியினர், அம்பேத்கார் இயக்கத்தினர், முஸ்லீம்கள், கிறிஸ்தவர்கள், சமணர்கள், புத்தர்கள் போன்ற மண்ணின் மைந்தர்களான திராவிடர்களைப் படிப்படியாக ஒழித்துக் கட்ட இந்துத்துவா என்ற பிராமணீயக் கொள்கை எடுத்துக் கொள்ளும் செயல்பாடுகள் வியக்கத் தக்கவையாகும். எடுத்துக்காட்டாக அந்த இரகசிய சுற்றறிக்கைகளில் தொண்டர்களுக்குக் கொடுக்கப்பட்டுள்ள கட்டளைகளின் சில அம்சங் களாவன :-

- ★ சுடுகருவிகள், வெடிமருந்துகள் ஆகியவை திரட்டுவது.
- ★ தாழ்த்தப்பட்டவர்களுக்குப் போலி மருந்துகளைத் தரும்படி செய்வது.
- ★ கள், சாராயம், சூதாட்டம், லாட்டறி முதலியவற்றைத் தூண்டுவது.
- ★ இந்து அல்லாதோர் கோவில்களைச் சூறையாடுவது.
- ★ கீழ்ச்சாதி பெண்களைப் பரத்தமைத் தொழிலில் (விபச்சாரம்) ஈடுபடுத்துவது.

- ★ பிள்ளைகளுக்கு நஞ்சு கலந்த தின் பண்டங்கள் கொடுப்பது.
- ★ பள்ளிகளில் இந்து நெறிமுறைகளுக்கேற்ப வரலாற்றைக் கற்பிப்பது.
- ★ வேறு வழிபாட்டுத் தலங்களின் அருகில் படிமங்களை புதைத்து வைப்பது.
- ★ கீழ்ச் சாதி பெண்களுக்குத் தங்கள் ஆண் உறுப்பைக் காட்டவும் அவர்களை முத்தமிடவும் செய்வது.
- ★ மூட நம்பிக்கையைப் பரப்புவது.
- ★ பெண்களைக் கூட்டமாகச் சூரத் மாதிரியைப் பின்பற்றிக் கற்பழிப்பது. சாதிச் சண்டையைத் தூண்டுவது.
- ★ இந்து எதிர்ப்பாளர்களையும், பிராமண எதிர்ப்பாளர்களையும் கொலை செய்வது.
- ★ கொலை செய்த பிணத்தைத் துப்புக்கிடைக்காத வகையில் அப்புறப்படுத்துவது.
- ★ சமண, பௌத்த, சீக்கியருக்கெதிராக தாக்குதல்கள் நடத்துவ்து.
- ★ உட்சண்டையை மூட்டி விடுவது. கீழ்ச்சாதியினரை ஒருவருக் கொருவர் சண்டையிட்டு மாண்டு அழியச் செய்வது.
- ★ பொய்ப் பிரச்சாரம் செய்து மத உணர்ச்சியைத் தூண்டி சண்டை உருவாக்குவது.

இக்கட்டளைகள் அனைத்தும் மனுச்சட்டத்தின் தன்மைகளுக்கு ஒத்திருப்பவைகளாககக் காணப்படுகின்றன..

பிராமணீயத்தைப் பாதுகாக்க

இணைக்கப்பட்டுள்ள பிராமண சமாஜத்தின் இரகசிய கடிதத்தின் 12, 13 ஆவது குறிப்புகள் செடியூல்டு வகுப்பினரோடு விரோதத்தையும் சண்டையையும் உருவாக்க வேண்டும். அப்போது தான் பிராமணரின் பிள்ளைகள் தங்கள் ஆதிக்கத்தை அரசாங்க ஆட்சியமைப்பிலும் அரசியலிலும் கட்டிக்காக்க முடியும். பிராமணீயத்தை பாதுகாக்கப் பிராமணப்பெண்கள் தங்களை அர்ப்பணித்து பிராமணீயத்தைப் பாது காப்பது மிகவும் இன்றியமையாதது." இவைகள் சமூக விரோதச் செயல்களைத் தூண்டி விடுவதாகும்.

சுற்றறிக்கை கடைபிடித்தல்

கடந்த இந்துத்துவா ஆட்சி காலத்தில் மேலே கூறப்பட்ட R.S.S. மற்றும் பிராமண சமாஜ் அமைப்புகளின் இரகசிய சுற்றறிக்கைகளில் கட்டளை இடப்பட்டவை அனைத்தும் தேசத்தின் நாலா பாகங்களிலும் நிறைவேற்றப்பட்டுக் கொண்டே இருந்தன எனக் காணப்படுகிறது.

ஆஸ்ட்ரேலியா மிஷனறியான கிரகாம் ஸ்டெயின்ஸ் குடும்பத்தினரை உயிருடன் எரித்தது, கிறிஸ்தவக் கன்னியாஸ்திரிகளைக் கற்பழித்தது, கிறிஸ்தவப் பாதிரிமாரைச் சித்திரவதை செய்தது, கிறிஸ்தவ ஆலயங்களைச் சுட்டெரித்தது, ஆலயங்களில் புகுந்து வெறிச் செயல்கள் நடத்தியது, தலித்துகள் அம்பேத்கார் இயக்கத்தினருக்கெதிராய் தாக்குதல்கள் நடத்தியது, முகமதியருக்கெதிராக கலவரங்கள் நடத்தியது, குஜராத்தில் முஸ்லீம்களைக் கொலை செய்து முஸ்லீம் பெண்களைக் கதறக்கதற கற்பழித்தது இவை அனைத்தும் இரகசிய சுற்றறிக்கையின் கட்டளைகளுக்கு உட்பட்டவைகளே ஆகும்.

அதிகாரம் 20

இந்துத்துவாவுக்குச் சமீபகால எதிர்ப்புகள்

இந்நாட்களில் திராவிட மக்களில் பெரும்பாலானோர் தங்களின் மேன்மை நிறைந்த ஆதி நிலைகளையும் அன்னியர்களான ஆரியர் களால் தங்களுக்கு ஏற்பட்ட சூழ்ச்சிகளையும் வருணாசிரம தர்மம் என்ற ஜாதிக் கொள்கை தங்கள் மேல் திணிக்கப்பட்ட விதங்களையும் தங்கள் மத கொள்கைகளுக்கு ஆரியர்களால் ஏற்படுத்தப்பட்ட சீர்கேடுகளையும் குறித்து உணரத் தொடங்கி விட்டார்கள். Dr. மு. தெய்வநாயகம் அவர்களைப் போன்ற திராவிட ஆராய்ச்சியாளர் கள் தங்கள் ஆராய்ச்சிகளின் அடிப்படையில் இந்தியாவில் முதலாம் நூற்றாண்டுக்குப் பின் தோன்றிய சைவ, வைணவ மதங்கள் தோமாவால் கொண்டு வரப்பட்ட ஆதி இந்தியக் கிறிஸ்தவம் என்று நிரூபித்திருக் கிறார்கள். ஜனங்கள் வருணாசிரம தர்மம் என்ற இந்துத்துவாவின் ஜாதிக் கோட்பாட்டை எதிர்த்து நிற்கத் தொடங்கி இருக்கிறார்கள்.

சங்கர மடத்துக்குச் சைவர்களின் எதிர்ப்பு

வருணாசிரம கொள்கையை நிலை நாட்டி ஆரியர்களின் ஆதிக் கத்தை நிரந்தரமாக இந்தியாவில் ஸ்தாபிக்க வேண்டும் என்பதற்காக இந்தியாவில் U.P. ஜோஷி மடம் 2. குஜராத்தில் துவாரகை 3. ஒரிசா வில் பூரி 4. கன்னடத்தில் சிறிங்கேரி 5. தமிழ்நாட்டில் காஞ்சி ஆகிய ஐந்து இடங்களில் ஸ்தாபிக்கப்பட்டிருக்கும் சங்கர மடங்களுக்கு சைவ, வைணவ மதங்களைச் சேர்ந்த திராவிடர்கள் தங்கள் எதிர்ப்புகளைத் தெரிவிக்கத் தொடங்கி இருக்கிறார்கள். ஆதி சங்கரனுடைய அத்வைதக்

கொள்கையையும் மற்றும் நாத்திகக் கொள்கைகளையும் எதிர்த்துத் தங்கள் மும்மூர்த்திக் கோட்பாட்டையும் தங்கள் வழிபாடுகளையும் நிலை நாட்டுவதற்காகப் போராடத் தொடங்கி உள்ளார்கள். சமீபகாலச் செய்தித்தாள்கள் இதைத் தெளிவாக காண்பிக்கின்றன.

ஒரு சில எடுத்துக்காட்டுகள்

நெல்லையப்பர் கோயில் கும்பாபிஷேகம்

காஞ்சிச் சங்கராச்சாரியர் திருநெல்வேலி நெல்லையப்பர் கோயில் திருப்பணி செய்வதை ஆதீன சுவாமிகள் புறக்கணித்தனர்.

இந்தச் செய்தி 07-06-02 தினகரன் நாளிதழில் கீழ்க்கண்டவாறு வெளி வந்தது.

செய்தி

“நெல்லையப்பர் கோயிலில் திருப்பணி செய்வதற்குக் காஞ்சி சங்கராச்சாரியருக்கு உரிமை கிடையாது. அவர் தொடங்கி வைத்ததால் தான் ஆதீன சுவாமிகள் எவரும் விழாவில் கலந்து கொள்ளாமல் புறக்கணித்து விட்டனர்”.

சந்நியாசி

“சந்நியாசிகள் இந்தக் காரியத்தை செய்யக் கூடாது. சங்கராச்சாரியார் ஒரு சந்நியாசி. அவர் தாலியை எடுத்துக் கொடுக்கலாம். ஆனால், தாலி கட்டக்கூடாது. சங்கராச்சாரியார் சிவன் கோயில்களில் தமது ஆதிக்கத் தைச் செலுத்தி வருகிறார். அவர் வெளியேற வேண்டும்.”

புறக்கணிப்பு

“அவர் திருப்பணியைத் தொடங்கி வைப்பார் என்று அழைப் பிதழில் போட்டிருந்ததால் தான் தருமை ஆதினம் சண்முக தேசிகர், மதுரை ஆதீனம், திருவாடுத்துறை ஆதீனம், சிவப்பிரகாச தேசிகர், குன்னகுடி பொன்னம்பல தேசிகர், திருப்பனந்தாள் தம்பிரான்

சுவாமிகள் ஆகியோர் கலந்து கொள்ளாமல் புறக்கணித்தனர். சுலோகம் தெரிந்தவர் எல்லாம் பூஜை செய்து விட முடியாது....."

குமுதம் ரிப்போட்டர் செய்தி

"கிறிஸ்தவர் முஸ்லீம் போல சங்கராச்சாரியரும் அன்னியரே" என்ற தலைப்பில் வெளிவந்த செய்தியாவது:-

'இது ஒரு சிவாலயம். சைவ சமயக் கோயில்கள் 28 சைவ ஆகமங் களில் ஒன்றான "காமிகா" ஆகமப்படியே கோயிலின் வடிவம், வழிபாடு எல்லாமே உள்ளன. ஆனால் ஆகமமே இல்லை என்பது ஆதி சங்கரரின் வாக்கு. ஆகமங்கள் நிராகரித்தவர் அவர். சைவ சமயத்தின் உயிரான ஆகமத்தையே இல்லை என்று சொல்லும் ஆதிசங்கரரின் வழித் தோன்றல் தான் காஞ்சி சங்கராச்சாரியார். இப்படி ஆகமத்தை நிராகரிப்பவர்கள் அறியாதவர்கள். ஆகம முறைப்படி நடத்தப்பட வேண்டிய நெல்லை யப்பர் கோயில் திருப்பணிக்குத் தலைமை தாங்குவது எந்த வகையில் நியாயம் ? ஆகம விரோதம் அல்லவா ?'

பசு, பதி, பாசம்

'இன்னொன்று பசு, பதி, பாசம் ஆகிய முப்பொருள்கள் உண் டென்பது சைவம். ஆனால் காஞ்சி சங்கராச்சாரியாரோ ஒரே பொருள் தான் என்று சொல்லும் ஏகான்மாவாதி. இப்படி தத்துவ ரீதியாய் மாறுபட்டவர்களைப் பிற சமயத்தைச் சேர்ந்தவர் என்றே சிவஞான போதம் கூறுகிறது. எனவே கிறிஸ்தவர்கள் முஸ்லீம்கள் போல் அவரும் அன்னியரே ......'.

நீதிமன்றங்களில் வழக்கு

மேற்கண்ட கருத்துகளின் அடிப்படையில் திருநெல்வேலி கோடைகால விடுமுறை நீதி மன்றத்தில் 343 ஆப் 2002 நம்பர் ஆக வழக்கு ஒன்று பதிவு செய்யப்பட்டது. இது போன்ற வேறு சம்பவங்க ளும் வழக்குகளும் நாட்டில் பல பகுதிகளில் நடந்து வருகின்றன.

இந்துத்துவா ஆட்சி - மக்கள் புறக்கணிப்பு

2004-ல் நடந்து முடிந்த 14 -ஆவது மக்களவைத் தேர்தல் முந்தைய தேர்தல்களை விட சற்று வித்தியாசமாய்க் காணப்பட்டது.

B.J.P.-யின் இந்துத்துவா அணுகுமுறையை மக்கள் விரும்பவில்லை. இதற்குக் காரணம் இந்துத்துவாக் கொள்கைகளுக்கு எதிரான திராவிட மக்களின் விழிப்புணர்வே ஆகும். எனவே மக்கள் இந்துத்துவா ஆட்சியைப் புறக்கணித்து விட்டார்கள். அதோடு தேவனே இந்துத்துவ ஆட்சியைக் கவிழ்த்துப் போட்டார் என்று மக்கள் நம்புகிறார்கள்.

தோல்விக்கான காரணம் இந்துத்துவா

நடந்து முடிந்த 2004 மக்களவைத் தேர்தலில் பா.ஜ தோல்விக்கு மோடி (குஜராத் முதலமைச்சர்) கடைபிடித்த இந்துத்துவா கொள்கையே காரணம் என்று வெளிவந்த செய்தியாவது :-

"கோத்ரா சம்பவத்திற்குப் பின்னர் குஜராத் முழுவதும் முஸ்லீம்களுக்கு எதிராக முதல்வர் நரேந்திர மோடி வன்முறையைக் கட்டவிழ்த்து விட்டார். முஸ்லீம் பெண்கள் நடுரோட்டில் கதறக் கதற கற்பழிக்கப் பட்டனர். கூட்டம் கூட்டமாக உயிரோடு கொளுத்தப்பட்டனர். இதற்கு உலகம் முழுவதும் கண்டனம் தெரிவிக்கப்பட்டது."

எதிர்பாராத வெற்றி

"ஆனால் யாருமே எதிர்பாராத வகையில் முதல்வர் மோடி இரண்டாவது முறையாக ஆட்சியைப் பிடித்தார். இதை அடுத்து பா.ஜ தலைவர்கள் நரேந்திர மோடியைத் தலையில் தூக்கி வைத்துக் கொண்டாடினர். நாடு முழுவதும் மோடியின் "இந்துத்துவா" கொள்கையைக் கடைப்பிடிக்க முடிவு செய்தனர்."

'அந்த முடிவு பா. ஜ.வுக்கு எதிர் மறையாக அமைந்து விட்டது. மக்களவைத் தேர்தல் பிரச்சாரத்தின் போது குஜராத்க் கலவரக் காட்சிகளைக் காங்கிரஸ் உள்ளிட்ட மதசார்பற்ற கட்சிகள் நாடு முழுவதும் ஒளி பரப்பினர். அந்தக் கொடூரக் காட்சிகளைப் பார்த்த முஸ்லீம்களும், பொது மக்களும் பா.ஜ வுக்கு எதிராக வாக்கு எந்திரத்தை அழுத்தி விட்டனர். இதன் காரணமாகத்தான் குஜராத் மட்டுமின்றி நாடு முழுவதும் பா.ஜ

தோல்வியடைந்திருக்கிறது". இந்தச் செய்தியானது பெருவாரியான மக்களின் எண்ணத்தையே எடுத்துக்காட்டியுள்ளது.

திரிணாமுல் காங்கிரஸ் எதிர்ப்பு

"இந்தியாவின் உண்மையான வரலாற்றை எழுதுகிறோம் என்று சொல்லித் திராவிட இனமக்களின் நாகரிகத்தை ஆரிய இன நாகரிகம் போல் காட்டும் மோசடியைப் பாரதீய ஜனதா அரசு செய்ததாலும், மோகஞ்சதாரோ, ஹரப்பா போன்ற திராவிட நாகரிகங்களையும் ஆரிய நாகரிகம் தான் என்று வரலாற்றுப் பாடங்களில் விஷத்தைத் திணிக்கத் தொடங்கியதாலும், ஜோதிடம், நாள் பார்த்தல், குறி சொல்லுதல் போன்ற மூட நம்பிக்கைகளை அறிவியல் பூர்வமானது என்று போலித் தனமாக நிருபிக்க முயன்றதோடு அதைப் பாடத்திட்டங்களிலும் புகுத்தி மொத்தத்தில் கல்வியின் தரத்தைக் குறைக்க முயற்சி செய்ததாலும், காவிமயமாக்கும் முயற்சிகளில் தீவிரமாக இறங்கியதாலும்... பாரதீய ஜனதாவின் இந்துத்துவா கொள்கைக்கு மம்தா பானர்ஜியின் தலைமை யிலான திரிணாமுல் காங்கிரஸ் பலத்த எதிர்ப்பு தெரிவித்துள்ளது" என்றும் செய்தி வெளிவந்துள்ளது. திராவிடர்கள் உண்மைகளை உணரத்தொடங்கிவிட்டார்கள் என்று இங்கே காண்கிறோம்.

இந்துத்துவாவுக்கு எதிராகத் தி.மு.க. மாநாட்டில் தீர்மானம்

22-08-2004 அன்று சேலத்தில் கூடிய தி.மு.க. மாநாட்டில் பா.ஜ.க. அரசின் இந்துத்துவா கொள்கையை எதிர்ப்பது என்று தீர்மானம் நிறைவேற்றப்பட்ட செய்திகளும் பத்திரிகைகளில் வெளிவந்துள்ளன.

இந்துத்துவா எதிர்ப்பு மாநாடு

கரூரில் இந்துத்துவா எதிர்ப்பு மாநாடு நடத்தப்பட்ட செய்தி திராவிட சமயம் பத்திரிகையில் வெளிவந்துள்ளது. அதன் விபரமாவது.

தமிழ்மொழியில் குடமுழுக்கு

2002 ஆம் ஆண்டு கரூரில் உள்ள மணி முத்தீசுரர் கோயிலில் வழக்கறிஞர் ராசேந்திரன் முதலியோரின் முயற்சியால் தமிழ் வழியில் குடமுழுக்கு நடைபெற்றது.

பிராமணர்களின் வழக்கு

அதையடுத்து கோயம்புத்தூரைச் சேர்ந்த இரண்டு பிராமணர்கள் கரூர் உரிமையியல் நீதி மன்றத்தில் தமிழ் வழியில் குடமுழுக்குகள் நடத்தத் தமிழ்நாட்டில் தடைகோரி ஒரு வழக்குப் பதிவு செய்தனர்.

வழக்கு வாபஸ்

அவ்வழக்கை எதிர்த்து வழக்கறிஞர் ராசேந்திரன் எதிர்மனுதாரராகி வழக்காடினார். அவர் நீதிமன்றத்தில் தாக்கல் செய்த எதிர்மனுவில் கூறப்பட்ட ஆழமான தமிழ்வழிபாட்டின் உரிமைக்குரலைக் கண்டு பிராமணர்கள் அவ்வழக்கை வாபஸ் பெற்றுக்கொண்டார்கள்.

தேசதுரோகிகள் என்ற குற்றச்சாட்டு

இந்நிலையில் கரூர் வந்த பி.ஜே.பி. மாநில செயலாளர் H. ராஜா அவர்கள் தமிழ் ஆர்வலர்கள் தேசத்துரோகிகள் என்று பேட்டி அளித்தார். அதைத் தொடர்ந்து கரூரில் இந்துத்துவா எதிர்ப்பு மாநாடு நடத்தப் பட்டது.

எதிர்ப்பு மாநாடு

மாநாட்டில் கலந்து கொண்ட திராவிட ஆன்மீய இயக்கத்தின் தலைவர் டாக்டர். மு. தெய்வனாயகம் இந்துத்துவாவின் பிடியிலிருந்து இந்து மதத்தை விடுவிப்பது எவ்வாறு என்பதைப்பற்றித் தெளிவாய் விளக்கினார்.

மாவட்டங்கள்தோறும் இந்துத்துவா எதிர்ப்பு

எல்லா மாவட்டத் தலைநகரங்களிலும் இதுபோன்ற இந்துத்துவா எதிர்பபு மாநாடுகளை நடத்த வேண்டுமென்று கூட்டத்தில் கலந்துகொண்ட எல்லோரும் ஒரே குரலில் அறிவித்திருப்பதாகவும் அச்செய்தியில் கூறப்பட்டுள்ளது.

பிரிவு : III

அண்மைகால ஆராய்ச்சிகளும்
அதன் விளைவுகளும்

அதிகாரம் 21

திருத்துவக் கொள்கை
சைவ வைணவ மதங்களில்

அண்மை கால ஆராய்ச்சிகளைக் குறித்து முன் அதிகாரங்களில் பல அமசங்கள் விளக்கப்பட்டன. அவ்வாராய்ச்சிகளின் அடிப்படையில் நடைபெற்று வரும் பல்வேறு விடுதலை முயற்சிகளைக் குறித்தும் பார்த்தோம். மேலும் சில குறிப்புகளைக் குறித்தும் இவ்வாராய்ச்சிகள் எவ்வாறு நிரூபிக்கப்பட்டன என்பன குறித்து மேல்வரும் அதிகாரங் களில் பார்ப்போம்.

திருத்துவக் கொள்கை

முதலாம் நூற்றாண்டில் தோமாவால் கொண்டுவரப்பட்ட கிறிஸ்தவக் கொள்கைகளில் முக்கியமான ஒன்று கடவுளின் திருத்துவத்தைக் குறித்த கொள்கை ஆகும். கிறிஸ்தவத்தின் திருத்துவக் கொள்கைப்படி கடவுள், பிதா, பரிசுத்த ஆவி, குமாரன் ஆகிய திரியேக தேவனாகும் (திருத்துவ கடவுள்). இந்தத் திருத்துவத்தில் பிதா, குமாரன் என்பன ஆண் தன்மை யைச் சுட்டிக் காட்டுவதாகக் காணப்படுகிறது. ஆனால் பரிசுத்த ஆவி என்பதற்கு ஆண், பெண் தன்மைகள் எதுவும் சுட்டிக்காட்டப்பட வில்லை. எனவே திராவிட மக்கள் கடவுளின் திருத்துவத்தைத் தங்கள் நிலைகளிலேயே எடுத்துக் கொண்டார்கள்.

திருக்குறளில் திருத்துவம்

தோமாவால் கொண்டு வரப்பட்ட ஆதி இந்தியக் கிறிஸ்தவத்தின் திருத்துவக் கொள்கைகளையும் பிற கொள்கைகளையும் முதன் முதலாய்த் திராவிடரான திருவள்ளுவர் தம் படைப்பான திருக்குறளில் விளக்கியுள்ளார். அவர் பிதாவாகிய கடவுளை தம் நூலின் கடவுள் வாழ்த்து பகுதியில் வாழ்த்துகிறார். பரிசுத்த ஆவியாகிய கடவுளை ஆண், பெண் ஆகிய தன்மைகளை சுட்டிக் காட்டாமல் 'வான்' என்று அழைத்து வான்சிறப்பு என்ற பகுதியில் சிறப்பிக்கிறார். குமாரனாகிய கடவுளை 'நீத்தார்' (தம்மையே நீத்தவர் அல்லது பலியாக்கியவர்) என்று அழைத்து அவர் பெருமையை நீத்தார் பெருமை என்ற பகுதியில் வாழ்த்துகிறார். இவ்வாறு முதலாம் நூற்றாண்டுக்கு முன் காணப்படாத கடவுளின் திருத்துவக் கொள்கையைத் திருவள்ளுவர் தம் நூலில் விளக்கியிருக்கிறார்.

திருக்குறளை தொடர்ந்து பக்தி இயக்கங்கள்

தோமாவின் ஆதி இந்தியக் கிறிஸ்தவத்தின் அடிப்படையில் உருவானதே திருவள்ளுவரின் திருக்குறள் என்பதைப் பார்த்தோம். திருக்குறளைத் தொடர்ந்து ஆதி இந்தியக் கிறிஸ்தவத்தின் அடிப்படையில் தமிழகத்தில் பக்தி இயக்கங்கள் தோன்றின. அதைத் தொடர்ந்து சைவ வைணவ மதங்கள் உருவாயின.

பரிசுத்த ஆவியைக் குறித்த திராவிடர்கள் கருத்து

கருத்து - 1

பரிசுத்த ஆவி பெண் தன்மை உடையவராக இருக்க வேண்டும்.

கிறிஸ்தவத்தில் கூறப்படும் திருத்துவமாகிய பிதா, பரிசுத்த ஆவி, குமாரன் என்பதில் பிதாவும் குமாரனும் (அப்பனும் மகனும்) இருப்பதால் பரிசுத்த ஆவி பெண் தன்மை உடையவராகத்தான், அதாவது அம்மாவாக இருக்கவேண்டும் என்று கருதினார்கள். இக்கருத்தை உடையவர்கள் சைவர்கள் என்று அழைக்கப்பட்டார்கள். அவர்கள்

பரிசுத்த ஆவியை அம்மை அல்லது வல்லமை அல்லது சக்தி (Power) என்று அழைத்தார்கள்.

கருத்து - 2

பரிசுத்த ஆவி ஆண் தன்மை உடையவராகத் தான் இருக்க வேண்டும்.

மேலே கூறப்பட்ட கருத்தை ஒரு சாரார் ஏற்றுக்கொள்ளவில்லை. பரிசுத்த ஆவியினால் கன்னி மரியாள் கர்ப்பவதியானாள் என்று காணப்படுவதால் அவர் பெண்ணாக இருக்க முடியாது. அவர் ஆண் தன்மை உடையவராகத்தான் இருக்க வேண்டும் என்பதே இவர்கள் கருத்து. இந்தக் கருத்தை உடையவர்கள் வைணவர்கள் என்று அழைக்கப் பட்டார்கள். அவர்கள் பரிசுத்த ஆவி விண்ணிலிருந்து வந்தவர் என்ற கருத்தில் விட்டுணு (விஷ்ணு) என்று அழைத்தார்கள்.

சைவ வைணவங்களில் திரித்துவத்தின் விளக்கம்

சைவத்தில் திருத்துவம்

பிதா	-	சிவன் (அப்பன்)
பரிசுத்த ஆவி	-	சக்தி (அம்மை - பெண்)
குமாரன்	-	குமரன் (மகன் அல்லது பிள்ளையார்).

சைவர்கள் திருத்துவத்தை மூவொரு கடவுள் என்றும் திரியேக மூர்த்தி என்றும் அழைக்கிறார்கள்.

வைணவத்தில் திரித்துவம்

பிதா	-	சிவன்
பரிசுத்த ஆவி	-	விஷ்ணு (ஆண்)
குமாரன்	-	பிரம்மா

வைணவர்கள் திருத்துவத்தை மும்மூர்த்திகள் என்று அழைக் கிறார்கள்.

சிற்பங்களில் திரித்துவ விளக்கம்

பின் நாட்களில் சைவ வைணவர்களின் திருத்துவக் கொள்கைகள் சிற்பங்களில் விளக்கப்பட்டன.

சைவ நிலை சிற்பங்களில்

சோமாஸ்கந்தர்

சைவ நிலையில் திருத்துவத்தை விளக்குவதற்காக ஒரே சிற்பத்தில் சிவன், உமா, கந்தன் ஆகிய மூன்றும் காட்டப்பட்டுள்ளன. (அப்பன், அம்மை, மகன்) சோமாஸ்கந்தர் என்றால் (ச + உமா + ஸ்கந்தர்) உமாவோடும் (பெண்) மகனாகிய கந்தனோடும் கூடிய சிவன் என்று விளக்கப்படுகிறது. மூன்றும் ஒன்று என்பதற்காக ஒரே சிற்பத்தில் காட்டப்படுகின்றன.

அர்த்த நாரீஸ்வரர்

உடலில் பாதியைப் பெண்ணாகக் கொண்ட கடவுள். சிவனின் இடப்பக்கம் சக்தியைக் காட்டும் சிற்பம். அர்த்தம் = பாதி, நாரி = பெண். இதுவும் சைவ நிலையை விளக்குகிறது.

வைணவநிலை சிற்பங்களில்

மேலே கூறப்பட்டவை வைணவ நிலைகளிலும் சிற்பங்களில் விளக்கப்படுகின்றன.

மும்மூர்த்திக் கடவுள்

வைணவச் சிற்பங்களில் சிவன், விஷ்ணு, பிரமா ஆகிய மூன்றும் ஒரே சிற்பத்தில் காட்டப்படுகின்றன. இவை மூன்றும் ஆண் தன்மையைக் கொண்டவை.

ஹரிஹரன்

ஹரன் என்பது சிவன். ஹரி என்பது விஷ்ணு. அர்த்த நாரீஸ்வரனுக்கு மாறாக இங்கே ஒரே சிற்பத்தில் பாதி சிவனும், பாதி விஷ்ணுவுமாகக் காட்டப்பட்டுள்ளது. இவை இரண்டுமே ஆண் தன்மை

உடையவை. சிவனின் இடப்பக்கம் விஷ்ணுவாக (ஆண்) காட்டப் பட்டால் வைணவமும் சக்தியாக (பெண்) காட்டப்பட்டால் சைவமு மாகும்.

பரிசுத்த ஆவி ஆண் பெண் தன்மையைக் கடந்தவர்

சைவத்தில் பரிசுத்த ஆவியைப் பெண் பாலாகவும், வைணவத்தில் பரிசுத்த ஆவியானவரை ஆண் பாலாகவும் குறிப்பிடுவதைக் குறித்துப் பார்த்தோம். ஆனால், பரிசுத்த ஆவியானவர் ஆண், பெண் தன்மை களைக் கடந்தவர் என்ற உண்மையைத் திராவிட மக்கள் அறிந்து உணர்ந் திருந்தார்கள். இதற்கு எடுத்துக்காட்டாக பரிசுத்த ஆவியானவருக்கென்று ஒரு கோவில் அமைக்கப்பட்டிருப்பதைக் குறித்து Dr. தேவகலா அவர்கள் இந்தியா ஒரு தோமா வழி கிறிஸ்தவ நாடே என்ற நூலில் குறிப்பிட்டிருக்கிறார்கள். அங்கே அவர் குறிப்பிட்டுள்ள கோவில் தூத்துக்குடி மாவட்டத்தில் நட்டாத்தி என்னும் ஊரில் காணப்படுகிறது. இது இரண்டு கோவில்கள் இணைத்துக் கட்டப்பட்டிருக்கும் இரட்டைக் கோவிலாகும். இக்கோவிலின் பெயர் 'அருள் திரு ஆதி அடைக்கலம் காத்த **அம்மையார் அம்மன் திருக்கோவில்**' என்பதாகும்.

ஆண், பெண் உருவங்கள் இல்லாத கோயில்

இக்கோவிலில் ஆண் தெய்வ உருவமோ, பெண் தெய்வ உருவமோ இல்லை. கடவுளின் பெயர் பெண் பாலைக் குறிக்கும் விதம் அம்மாள் என்றோ அம்மை என்றோ இல்லாமல் அம்மன் என்று காணப்படுகிறது. எனவே அம்மை என்ற பெண் தன்மையைக் கடந்து கடவுளைக் குறிக்கும் விதத்தில் அம்மன் என்று அழைக்கப்படுகிறது.

பெருமாள்

'அம்மை' சிவனின் இடப்பாகத்தில் இருப்பதாகக் கூறப்படுவது சைவம். அதே இடப்பகுதியை ஆணாகக் கூறினால் அது 'விஷ்ணு' அல்லது 'நாராயணன்' அல்லது 'பெருமாள்' என்பது வைணவம். நாராயணன் என்பது நரனாயினன் அதாவது கடவுள் மனிதனானார் என்பதைக் குறிக்கிறது.

பெருமாள் என்ற பெயர் பெருமான் என்ற ஆண் தன்மையைக் காட்டாமல் பெருமாள் என்று பெண்மையையே காட்டுகிறது.

அம்மன், பெருமாள் ஆகிய பெயர்களில் ஒலிப்பது

'அம்மன்' 'பெருமாள்' எனும் இப்பெயர்கள் பரிசுத்த ஆவியின் உருவகமாக இருப்பதால் பரிசுத்த ஆவி ஆண் பெண் தன்மைகளைக் கடந்தவர் என்பதைக் காட்டும் வகையில் பரிசுத்த ஆவியைப் பெண்ணாக உருவகப்படுத்தி 'அம்மை' என்றும் கூறினாலும் ஆண் தன்மையும் இணைத்து அம்மன் என்று கூறுகின்றனர். இவ்வாறே பரிசுத்த ஆவியை ஆணாகப் பெருமான் என்று கூறினாலும் பெண் தன்மையை இணைத்து 'பெருமாள்' என்றும் கூறுகின்றனர். எனவே இப்பெயர்களில் ஒலிப்பது தூய ஆவி ஆணுமல்ல; பெண்ணுமல்ல. ஆண் பெண் தன்மையைக் கடந்தவர் என்பதே ஆகும். இந்நிலையை நட்டாத்தியிலுள்ள கோவில் விளக்குவதால் இங்குள்ள கருவறையில் ஆணுருவமோ, பெண்ணுரு வமோ வைக்கப்படவில்லை என்பதும் குறிப்பிடத்தக்கதாகும்.

அதிகாரம் 22

திருத்துவத்தின் குமாரன் சைவ வைணவங்களில்

ஆதி இந்தியக் கிறிஸ்தவத்தில் கூறப்படும் திருத்துவத்தில் மனிதனாய் அவதரித்த குமாரன் நான்கு தன்மைகளை வெளிப்படுத்துகிறார்.

அவையாவன :-

1. சாத்தானை வென்றவர்
2. மரித்து உயிர்த்தவர்
3. உலகத்தைப் படைத்தவர்
4. ஒளிமயமானவர்

இந்த நான்கு தன்மைகளின் அடிப்படையில் குமாரனாகிய கடவுளுக்குச் சைவ வைணவத்தில் நான்கு பெயர்கள் காணப்படுகின்றன.

1. சாத்தானை வென்றவர் - குமரன் (அழகர் அல்லது முருகன்)
2. மரித்து உயிர்த்தவர் - பிள்ளையார்
3. உலகைப் படைத்தவர் - பிரம்மா
4. ஒளிமயமானவர் - ஐயப்பன்

குமாரனாகிய கடவுள் புராணக் கதைகளில்

மனிதனாக அவதரித்தக் குமாரனாகிய கடவுளின் மேலே கூறப்பட்ட நான்கு தன்மைகள் புராணத்தில் பற்பல கற்பனைக் கதைகளால் விளக்கப்படுகின்றன. அவைகளில் சில :-

1. குமரக் கடவுள் (அழகர் - முருகன்)

கிறிஸ்தவத்தில் கூறப்படும் திரித்துவத்தில் மூன்றாவது காணப்படும் குமாரன் தேவக் குமாரனாகவும் மனுஷ குமாரனாகவும் கூறப்படுகிறார்.

மனுஷ குமாரன் என்ற இரட்சகராகிய இயேசு தமது வாலிபப் பருவத்திலேயே (33 ½ வயது) சிலுவையில் அறையப்பட்டார். அவர் மரிக்கும் மட்டும் அழகு நிறைந்த ஒரு வாலிபனாகக் (குமரனாக) காணப் பட்டார். இந்த குமரக் கடவுள் அழகு நிறைந்தவர் என்பதை காட்டுவ தற்காக சைவர்கள் அவரை அழகர் என்று அழைத்தார்கள்.

அழகு என்ற தமிழ்ச் சொல்லுக்கு மற்றுமோர் வார்த்தை தான் முருகு என்பது. முருகு என்றால் அழகு என்பது தான் பொருள். எனவே குமாரனாகிய அழகர் முருகன் என்றும் அழைக்கப்பட்டார். இவ்வாறு குமரக் கடவுளுக்கு அழகர், முருகர் என்ற பெயர்களும் காணப்படுகின்றன.

சாத்தானை வென்றவர்

குமாரனாகிய கடவுள் சாத்தானின் தலையை நசுக்கியவர் ஆகும். அதாவது தீயவனாகிய சாத்தானை ஜெயித்து வெற்றி பெற்றார். இக்கருத்து புராணங்களின் வழியாக விளக்கப்படுகிறது. புராணக் கதையில் முருகன் சூரபத்மனை (தீமைக்கு காரணன்) வென்றார் என்பது ஒரு கதை மூலம் விளக்கப்படுகிறது.

முருகனின் வெற்றி

தீமைக்குக் காரணனான சூரபத்மன் ஒரு மாமரமாக மாறி விட்டான். அவ்வாறு மாமரமாகக் காட்சியளித்த சூரபத்மனை முருகன் வேல் என்ற ஆயுதத்தால் பிளந்தான். மரத்தின் ஒரு பாதி சேவலாகவும், ஒரு பாதி மயிலாகவும் மாறி விட்டது. முருகன் தன் வெற்றியைப் பறைசாற்றும் வகையில் சேவலைக் கொடியாக எடுத்துக் கொண்டு ஆணவத்துக்கு அடையாளமான மயிலைக் கீழடக்கி அதன் மேல் அமர்ந்து அதைத் தன் வாகனமாக மாற்றிக் கொண்டான். பாம்பாகிய சாத்தான் தோற்கடிக்கப் பட்டு மயிலின் காலின் கீழ் ஆக்கப்பட்டது. இந்தப் புராணக்கதை முருகன் தீமையாகிய சாத்தானை வென்றவர் என்று காட்டுகிறது.

முருகனுக்குக் காவடி

முருகனுக்குக் காவடி எடுப்பது தமிழகத்தில் ஒரு முக்கியமான ஆசாரமாகக் காணப்படுகிறது. ஆனால் அதன் கருத்துக்களைப் பற்றி எவரும் சிந்திப்பதில்லை. காவடி = காவு + தடி: காவுதடி / காவடி. காவு என்பதற்குப் பலி என்பது பொருள். காவுதடி என்றால் பலிக்குரிய தடி என்பதே பொருள்.

குமாரனாகிய கடவுள் (இயேசுக் கிறிஸ்து) மரச்சிலுவையில் பலியானார். அவர் சிலுவை மரத்தைச் சுமந்து சென்றார். மரத்தில் கொல்லப்பட்டார்.

மரச்சிலுவையை நினைவு கூருவது

இதை நினைவு கூரும் விதத்தில் கிறிஸ்தவர்களில் சில வகுப்பினர் இன்றும் குறிப்பிட்ட காலங்களில் மரச்சிலுவை சுமந்து சென்று இயேசு வின் பலியை நினைவு படுத்துகின்றார்கள். உலகத்தில் மனிதனாக வந்த தேவ குமாரன் மரத்தில் பலியானதை நினைவு படுத்தும் வகையில் பலிக்குரிய தடியை அதாவது காவுதடியை (காவு + தடி) காவடியை உபயோகப்படுத்துவதை இன்றும் நாம் பார்க்க முடிகிறது. மட்டுமல்ல குமாரன் சிலுவையில் குத்தப்பட்டு சரீரத்தில் காயப்பட்டதை நினைவு கூர்ந்து காவடி எடுக்கிறவர்கள் தங்கள் சரீரங்களில் குத்திக் காயங்களோடு காணப்படுவதையும் பார்க்கிறோம்.

முருகனுக்கு வள்ளி தெய்வயானை என்ற இரு மனைவிகள்

குமாரனாகிய கடவுள் (கிறிஸ்து) மணவாளன் என்றும் சபை மண வாட்டி என்றும் அழைக்கப்படுகிறது. சபை இயேசுவின் சொந்த ஜனமா கிய யூதர்களையும் அன்னியராகிய புறஜாதியாரையும் கொண்டதாகும். சொந்த ஜனமாகிய யூதர்கள் அவரை ஏற்றுக் கொள்ளாததால் அவர் அன் னியராகிய புறஜாதியாரைத் தேடி வந்து தம்மிடமாய்ச் சேர்த்துக் கொண்டார்.

இக்கருத்து புராண நிலையிலும் விளக்கப்படுகிறது. முருகனுக்கு இரு மனைவிகள். முருகன் தனக்குச் சொந்தமான தெய்வயானை இருக்க தாழ்விடத்தில் தோன்றிய வள்ளியைத் தேடிச்சென்று மணந்தார் என்பது,

தெய்வயானையை யூதத்திருச்சபைக்கு அடையாளமாகவும், வள்ளியைப் புறஜாதி திருச்சபைக்கு அடையாளமாகவும் புராண நோக்கில் கண்டு கொள்ளலாம்.

பிள்ளையார்

சைவத்தில் குமாரனாகிய கடவுளுக்குக் கொடுக்கப்பட்டுள்ள மற்றுமோர் பெயர் பிள்ளையார் ஆகும். பிள்ளை என்பது மகன் என்பதற்குப் பதிலாகக் கூறப்படும் மற்று ஒரு சொல்லாகும். இங்குக் கூறப்படும் பிள்ளை கடவுளுடைய பிள்ளை என்று மதிப்போடு குறிப்பதே பிள்ளையார் என்று அழைப்பது.

புராணக்கதையில் பிள்ளையார்

புராணத்தில் பிள்ளையார் தாயின் அழுக்கிலிருந்து உருவாக்கப் பட்டதாகக் கூறப்படுகிறது. குமாரனாகிய கடவுள் மனிதனை மீட்ப தற்காக மனுக்குலத்தின் பாவம் அனைத்தையும் தாமே ஏற்றுக் கொண்டு அவர் தம்மையே பாவமாக்கினார் என்று காணப்படுகிறது.

புராணக் கதையில் அழுக்குருண்டைப் பிள்ளையாரின் தலையைத் தமது தந்தையே வெட்டி விடுவதால் அவர் தன் ஜீவனை விடுகிறார். இது குமாரனாகிய கடவுள் உலக மக்களின் பாவத்தைச் சுமந்து கொண்டு ஒரு பாவி என்ற நிலையில் கல்வாரி சிலுவையில் தொங்கிக் கொண்டு ஒரு நிமிடம் தன் பிதாவினால் கைவிடப்பட்டு என் தேவனே ! என் தேவனே! ஏன் என்னைக் கைவிட்டீர் ! என்று கூறுவது தமது உயிரைப் பிதாவிடம் ஒப்புவிக்கிறதை உருவகமாக விளக்குகிறது.

மரித்து உயிர்ப்பது

குமாரனாகிய கடவுள் (கிறிஸ்து) மறுபடியும் உயிரடைந்ததை உருவகப்படுத்தும் வகையில் புராணக் கதையில் பிள்ளையாரின் தந்தையே யானையின் தலையை வெட்டிச் சரீரத்தில் ஒட்டுவதாகக் கூறப்படுகிறது.

மரிப்பதற்கு முன் இருந்தச் சரீரத்தை விட உயிர்ப்பிக்கப்பட்ட சரீரம் வேறு ரூபம் பெற்றது என்பதையும் அது மகிமையான மாற்றம்

அடைந்தது என்பதை காண்பிக்கும் வகையில் மரித்துப்போன பிள்ளை யாரின் உடலில் விலங்குகளில் மிக உயர்ந்ததாகக் காணப்படும் யானையின் தலை ஒட்டிச் சேர்க்கப்படுகிறது.

உண்மை நிலை

மேலே கூறப்பட்டபடி பல முறைகளில் விளக்கப்படும் புராணக் கதைகள் அனைத்தும் கிறிஸ்தவத்தில் காணப்படும் உண்மைக் கருத்துக் களை மனதிற்கொண்டு விதவிதமான கதைகளால் அக்கருத்துக்களை விளக்கும் முயற்சிகள் ஆக எடுத்துக் கொள்வதே உகந்ததாகும்.

வினை தீர்க்கும் விநாயகர்

பிள்ளையார் வினை தீர்க்கும் விநாயகர் என்றும் அழைக்கப் படுகிறார். குமாரனாகிய கடவுள் (இயேசு) மனுமக்களின் பாவத்தை (வினை) தாமே சுமந்து தீர்த்தவர் ஆகும். மனிதனின் பாவ வினைகளைத் தீர்ப்பவர் அவரே. இதை விளக்கும் வகையில் பிள்ளையார் வினைதீர்க் கும் விநாயகர் என்று அழைக்கப்படுகிறார். இதைக்குறித்து Dr. தேவகலா என்பவர் தமது இந்தியா தோமாவழி திராவிடக் கிறிஸ்தவ நாடே என்னும் நூலில் கீழ்கண்டவாறு குறிப்பிடுகிறார்.

'விநாயகர் அகவலில்' கடவுள் மனிதனாகி குருவாக இவ்வுலகில் வந்து மனிதரின் கொடிய பாவ வினையைத் தீர்த்தார் என்று ஔவையார் கூறுகிறார். இதைப் பின்வருமாறு பாடுகின்றார்.

'குருவடிவாகிக் குவலயம் தன்னில்
திருவடி வைத்துத் திறம் இது பொருள் என
வாடாவகைதான் மகிழ்ந்து எனக்கு அருளிக்
கோடு ஆயுதத்தால் கொடுவினை களைந்தே'

(ஔவையார், விநாயகர் அகவல்)

கொடுவினை தீர்த்தவர்

இப்பாடலில் மனிதரின் கொடியவினை அல்லது கொடுவினை என்பது, பிறக்கும்போதே வருகின்ற வினையாகிய ஜென்ம பாவத்தையும் (Original sin, சைவத்தில் சகசமலம்) அவரவர் செய்கின்ற வினையாகிய

கர்ம பாவத்தையும் (Individualsin) குறிக்கின்றது. இவை இரண்டும் மனிதனைக் கொடிய நிலைக்குத் தள்ளுவதால் இந்தக் கொடுவினையி லிருந்து மனிதரை மீட்கக் கடவுள் குருவாக அவதரித்தார்.

குருவாக அவதரித்தவர்

குருவாக அவதரித்த கடவுள், கோடு ஆயுதத்தின் மூலம் (கோடு என்றால் மரக்கொம்பு என்று பொருள்) அதாவது மரக்கொம்பாலான ஆயுதத்தின் மூலம் கொடிய வினையைத் தீர்த்தார் என்று கூறப்படுகிறது.

குருவாக அவதரித்து, மரக்கொம்பாலான ஆயுதத்தின் மூலம் பாவ வினைகளைத் தீர்த்த கடவுள் யார் ? என்பதை வரலாற்று வழியில் நோக்கினால் அது மனிதராக வந்து, மரக்கொம்பாலான சிலுவையில் பலியாகிய இயேசு கிறிஸ்துவையே குறிக்கிறது.

சிலுவையில் கொலைசெய்யும் வழக்கம் இந்தியாவில் இல்லாததால் மரக்கொம்பாலான அக்கருவி 'கோடு ஆயுதம்' எனும் சொற்றொடரால் குறிக்கப்படுகிறது.

திருக்குறளில் (பொறி)

திருக்குறளில் இவ்வாயுதம் 'பொறி' எனும் சொல்லால் குறிக்கப் படுவதும் இங்குக் கவனிக்கத்தக்கது.

பொதுவாக, நாம் பயன்படுத்தும் கருவியைப் பொறி எனும் சொல்லால் குறிப்பிடுவது வழக்கம். அவர் சிலுவையில் பலியானார் என்பதைத் திருவள்ளுவர்

'பொறிவாயில் ஐந்தவித்தான் பொய்தீர் ஒழுக்க
நெறி நின்றார் நீடுவாழ்வார்'

(திருக்குறள் - 6)

எனும் குறளில் விளக்குகிறார். மனிதனாக வந்த கடவுள், பொறி யாகிய 'சிலுவை' யில் ஐம்புலனாகிய முழு உடலையும் அவித்தார். அதாவது பலியாக்கினார் என்பதையே இக்குறள் காட்டுகிறது. இவ்வாறு மனிதனாக வந்த கடவுள் தம்மையே பலியாக்கி, நமக்குக் காட்டிய வழியில் நிற்பவரே நீடு வாழ்வை அடைவர் என்று கூறுகிறார்.

அவர் பலியாகி, மனிதரைப் பாவத்திலிருந்து விடுவித்ததால், அவருடைய பலியை

'கண்டத்தைக் கொண்டு கருமம் முடித்தவர்'

(திருவுந்தியார் 3)

அதாவது, கண்டமாகிய சாவைக் கொண்டு, (தம்மையே பலியாக்கி) கருமமாகிய நம் வினையை முடித்தவர் என்று சைவ சித்தாந்தம் கூறுகிறது.

கடவுளுடைய பிள்ளை, இவ்வாறு மக்களுக்காகப் பலியானதையே திராவிடச் சிந்தனையில் புராண நோக்கில் பிள்ளையாராகக் குறிப்பிடுகின்றனர்.

பிள்ளையாரின் உடலில் ஒட்ட வைத்தது யானையின் தலை என்று பார்த்தோம். எனவே பிள்ளையாருக்குக் கணபதி என்ற பெயரும் உண்டு. கணபதி என்பதற்கு விலங்குகளின் தலைவன் என்பது பொருள்.

3. பிரமன்

பிரம்மத்தை உருவாக்கியவர் பிரம்மன். அதாவது உலகத்தைப் படைத்தவர். குமாரனாகிய கடவுள் சகலவற்றையும் படைத்தார் என்று யோவான் 1 : 3 ல் காண்கிறோம். பிரமன் புராணங்களில் படைப்புக் கடவுள் என்று விளக்குகிறது. ஆனால் பிற்காலங்களில் இந்தக் கருத்து ஆதிசங்கரரால் திரிக்கப்பட்டு ஆரியர்களின் ஜாதிக்கொள்கைக்குப் பிரமன் பயன்படுத்தப்பட்டு விட்டது.

4. ஐயப்பர்

குமாரனாகிய கடவுள் உலகத்திற்கு ஒளியாய் இருப்பவர் என்ற அடிப்படையைக் கொண்டது ஐயப்பர்.

அதிகாரம் 23

இந்தியாவில் இருவகைக் கிறிஸ்தவங்கள்

இன்று இந்தியாவில் இருவகையான கிறிஸ்தவங்கள் உண்டு. அவையானவன :-

1. ஆதி இந்தியக் கிறிஸ்தவம் (சைவ வைணவம்)

தோமாவால் A.D. முதலாம் நூற்றாண்டிலேயே இந்தியாவுக்குக் கொண்டு வரப்பட்ட கிறிஸ்தவம் ஆதி இந்தியக் கிறிஸ்தவமென்று அழைக்கப்படுகிறது. அது திருத்துவக் கொள்கையின் அடிப்படையில் சைவம் என்றும் வைணவம் என்றும் அழைக்கப்படலாயிற்று. பின் நாட்களில் சைவ வைணவங்கள் இந்துத்துவா என்ற பிராமணீயக் கொள்கைக்கு அடிமைப்படுத்தபட்டு வேறு பல வழிபாடுகளோடு ஒன்றுசேர்க்கப்பட்டு இந்து மதம் என்று அழைக்கப்படலாயின. எனவே இன்று நம் நாட்டில் இந்து மதம் என்று அழைக்கப்படுவது சைவ வைணவ மதங்கள் என்ற ஆதி இந்தியக் கிறிஸ்தவமாகும். இதுவே நம் நாட்டில் ஆரம்பிக்கப்பட்ட ஆதி இந்தியத் திருச்சபையாகும்.

2. ஐரோப்பிய வழி கிறிஸ்தவம்

இன்று இந்தியாவில் காணப்படும் மற்றொரு வகைக் கிறிஸ்தவம் ஐரோப்பிய வழிக் கிறிஸ்தவம் ஆகும். அது 15 - ஆம் நூற்றாண்டுக்குப் பின் ஐரோப்பா வழி இந்தியாவுக்குக் கொண்டு வரப்பட்ட கிறிஸ்தவ

மாகும். அது முதலில் பலஸ்தீனாவிலிருந்து ஐரோப்பாவுக்குக் கொண்டு செல்லப்பட்டு அங்கே பாபிலோனிய மதத்தால் சீர்குலைக்கப்பட்டுப் பின்நாட்களில் மறுபடியும் சீர்திருத்தப்பட்டபின் ஐரோப்பாவிலிருந்து இந்தியாவுக்குக் கொண்டு வரப்பட்ட கிறிஸ்தவமாகும்.

ஒற்றுமை வேற்றுமைகள்

ஆதி இந்திய கிறிஸ்தவம் மற்றும் ஐரோப்பிய வழி கிறிஸ்தவம் ஆகியவற்றில் காணப்படும் ஒற்றுமை - வேற்றுமைகளைக் குறித்து கவனிப்போம்.

அ) ஒற்றுமை

1. அடிப்படைக் கொள்கைகளில் ஒற்றுமை

இந்து மதத்தால் அடிமைப்படுத்தப்பட்டிருக்கும் சைவ வைணவ மதங்களாகிய ஆதி இந்தியக் கிறிஸ்தவத்துக்கும், 15 - ஆம் நூற்றாண்டுக்குப் பின் ஐரோப்பாவிலிருந்து கொண்டு வரப்பட்ட ஐரோப்பிய வழி கிறிஸ்தவத்துக்கும் அடிப்படைக் கொள்கைகளில் ஒற்றுமை உண்டு.

இருவகைக் கிறிஸ்தவங்களும், கடவுள் ஒருவரே, அவர் மூவொரு கடவுள் என்றும், அவர் உலகத்தில் மனிதனாய் அவதரித்தாரென்றும், மனிதனுக்காகத் தம்மையே பலியாக்கி இரட்சிப்பை ஏற்படுத்தினாரென்றும், இதை விசுவாசிப்பவனுக்கு இரட்சிப்பு உண்டென்றும், அப்படிப்பட்டவர்கள் கடவுளிடம் சென்றடைவார்களென்றும் கூறுகின்றன.

2. கோவில்களில் ஒற்றுமை

கிறிஸ்தவர்களின் அடிப்படை நூல் விவிலியம். விவிலியத்தின் பழைய ஏற்பாட்டு புத்தகத்தில் ஆலயம் கட்டுவது குறித்து விளக்கப்படுகிறது. பழைய ஏற்பாட்டு ஆகமங்கள் அடிப்படையில் எருசலேம் தேவாலயம் அமைக்கப்பட்டது. அதே அடிப்படையில் ஆதி இந்திய கிறிஸ்தவர்களான சைவ வைணவர்கள் ஆகம முறைப்படி பிரகாரம், பரிசுத்த ஸ்தலம், மகா பரிசுத்த ஸ்தலம் என எருசலேம் தேவாலயத்தின்

முறைமையில் கோயில்களை அமைத்தார்கள். கட்டுமானப் பணிகள், சுற்றுக்கெட்டுகள், வெண்கலப் பணிமுட்டுகள், குத்து விளக்குகள், கண்விழிக்கும் ராத்திரி ஆசரித்தல், ஆசாரியனின் மணியோசை, தைல அபிஷேகம், சாம்பிராணி, தூபம் காட்டுதல், சுழற்படிகள், கொத்து வேலைகள், கும்பங்கள், ஜலதாரைகள், ஆசாரியன் நெற்றிப்பட்டம் அணிதல், கம்பங்கள் ஆகிய யாவும் ஆகமங்களின்படி செய்யப்பட்டுள்ளன.

உடன்படிக்கை பெட்டி சுமந்து செல்லுதல், யெரோபெயாமின் காலத்தில் ஏற்படுத்தப்பட்ட கன்றுக்குட்டி அமைத்தல், கோவில்களில் பாடகர்கள், கீதவாத்தியங்கள், வாத்தியக் கருவிகள் ஆகியவை அமைத்தல் அனைத்தும் பழைய ஏற்பாட்டு முறைப்படி செய்யப்பட்டவை ஆகும். தவிரவும் பண்டிகைகள், கொண்டாட்டங்கள் (திருவிழாக்கள்) ஆகியவையும் பழைய ஏற்பாட்டில் காணப்படுவனவாகும். இன்று கிறிஸ்தவர்கள் இவைகளைக் கடைபிடிக்காவிட்டாலும் சைவ வைணவர்கள் இவை களைக் கடைபிடித்து வருகிறார்கள்.

3. கடவுளைக் குறிப்பிடும் பெயர்களில் ஒற்றுமை

கடவுளுக்கு ஐரோப்பிய வழிக் கிறிஸ்தவர்களும், ஆதி இந்தியக் கிறிஸ்தவர்களாகிய சைவ வைணவர்களும் குறிப்படும் பெயர்கள் காரணப்பெயர்களாகவே காணப்படுகின்றன. கடவுளுக்கு இடுகுறிப்பெயர் சூட்டத்தக்கவர் எவரும் இல்லை. மோசே கடவுளிடம் உம் பெயர் என்ன என்று கேட்ட ஒரு சந்தர்ப்பத்தைக் குறித்து விவிலியத்தில் வாசிக்கிறோம். மோசேக்குக் கிடைக்கப்பட்ட பதில் காரணப்பெயராகவே இருந்தது. அது “இருக்கிறவராகவே இருக்கிறேன்” என்பது. அனாதியானவர் என்பது தான் அதின் பொருள். காரணப் பெயர்கள் மொழிபெயர்க்கப் படுகின்றன. அப்போது அவை மொழிக்கு மொழி மாற்றம் அடைகின்றன. ஆனால் கருத்தில் ஒன்றாய் இருக்கின்றன. வார்த்தைகள் ஒலிமாற்றத்தாலும் மொழிக்கு மொழி சற்று மாற்றம் அடைவதையும் பார்க்கிறோம். இவை களைக் கருத்தில் கொண்டு கடவுளுக்குக் கூறப்படும் பெயர்களின் கருத்துக் களைக் கவனித்தால் பெயர்களின் ஒற்றுமையைக் கண்டு கொள்ளலாம்.

சில எடுத்துக்காட்டுகள்

கடவுளைக் குறிப்பிடுவதற்கு கிறிஸ்தவர்களும் சைவ வைணவர்களும் வழங்கும் சில பெயர்களாவன:-

a) கிறிஸ்தவர்கள் வழங்கும் பெயர்கள்

இயேசு, இம்மானுவேல், கர்த்தர், மீட்பர், இரட்சகர், கிறிஸ்து, இயேசுராஜா, ராஜா, ராஜாதிராஜா, வரப்போகிற ராஜா, பிதாவாகிய கடவுள், அன்பாகிய கடவுள், குமாரனாகிய கடவுள், மனுஷகுமாரன், தேவகுமாரன், அழகுடையவர், வெண்மையும் சிவப்புமானவர், சாரோனின் ரோஜா, பரிசுத்த ஆவியாகிய கடவுள் முதலானவை.

b) சைவ வைணவர்கள் வழங்கும் பெயர்கள்

ஈசன், விநாயகர், இந்திரன், அப்பன், சிவன், குமரக்கடவுள், குமரன், பிள்ளை, பிள்ளையார், அழகர், முருகன், சக்தி, விட்டுணு, விஸ்வநாதன், விஸ்வம்பரன், விக்னேஷ்வரர், பரமேஸ்வரர் முதலியன.

இன்று சைவ வைணவர்கள் வழங்கும் மேலே தரப்பட்ட கடவுள் நாமங்களை ஒரு கிறிஸ்தவன் வழங்குவது அவனுக்குப் பாவம் என்று கிறிஸ்தவர்களில் பலர் நம்புகிறார்கள். ஆனால் இவ்வார்த்தைகளைக் கூர்ந்து கவனித்தால் அவ்வார்த்தைகள் யாவும் காரணப்பெயர்களே என்றும் அவ்வார்த்தைகளின் பொருளில் கிறிஸ்தவத்துக்கு எவ்வித முரண்பாடும் இல்லை என்றும் கண்டு கொள்ளலாம். இப்பெயர்களில் அடங்கியுள்ள சரியான பொருளை விளங்கிக் கொண்டார்களானால் கிறிஸ்தவர்களும், சைவ வைணவர்களும் ஒருவருக்கொருவர் சண்டை போடுவதையும் கோபித்துக் கொள்வதையும் களைந்து விட்டு அவர்கள் இருதரத்தாரும் அன்பாய் வாழ முடியும்.

கருத்தில் ஒற்றுமை கொண்ட சில வார்த்தைகள்.

இயேசு என்ற வார்த்தை

கிறிஸ்தவர்கள் பயன்படுத்தும் இயேசு என்னும் வார்த்தை ஒரு இடு குறிப்பெயரென்று சிலர் கருதுகிறார்கள். எனவே இயேசு என்ற வார்த்

தையைத் தவிர மற்றெந்த வார்த்தைகளையும் உச்சரிக்கக் கூடாதென்று அவர்கள் கருதுகிறார்கள். ஆனால் இயேசு என்ற வார்த்தை ஒரு காரணப்பெயர் என்பதே உண்மை. இயேசு என்ற வார்த்தைக்குப் பதிலாக இம்மானுவேல், கர்த்தர், மீட்பர், இரட்சகர், கிறிஸ்து போன்ற வேறு அனேக வார்த்தைகளைக் கிறிஸ்தவர்கள் உபயோகிக்கிறர்கள். குமாரனாகிய கடவுள் மனிதரை இரட்சிக்கிறவர் என்ற காரணத்தால் அவருக்குக் கொடுக்கப்பட்ட காரணப்பெயரே இயேசு என்பது (மத். 1 : 21). இரட்சகர் என்ற பொருளுக்கு எபிரெயச்சொல் யோசுவா என்பதாகும். யோசுவா என்ற வார்த்தை ஒலி மாற்றத்தால் கிரேக்க மொழியில் - ஈசுஸ் என்றும், ஆங்கில மொழியில் ஜீசஸ் என்றும், அராபிய மொழியில் - ஈசா என்றும், தமிழ் மொழியில் - ஈசன் அல்லது இயேசு என்றும் சொல்லப் படுகிறது. எனவே இயேசு என்ற வார்த்தைக்கு இரட்சிக்கிறவர் என்பதே பொருள் என்று காண்கிறோம்.

பாரதியார் கீழ்க்கண்ட பாடலில் ஈசன் என்ற பெயரைப் பயன் படுத்தியிருப்பதைக் காணலாம்.

“ஈசன் வந்து சிலுவையில் மாண்டான்
எழுந்து உயிர்த்தனன் நாள் ஒரு மூன்றில்
நேசமா மரியா மகதலேனா
நேரிலே இந்தச் செய்தியைக் கண்டாள்”

ஆதி இந்தியக் கிறிஸ்தவர்கள் இயேசுவுக்கு ஈசன் என்ற பெயரைப் பயன்படுத்தினார்கள் என்றும் காணப்படுகிறது.

விநாயகர் என்ற வார்த்தை

வினை தீர்க்கும் விநாயகர் என்னும் வார்த்தை சைவ வைணவர்கள் குமாரனாகிய கடவுளுக்குப் பயன்படுத்தும் சொல்லாகும். குமாரனாகிய கடவுள் மனிதனின் பாவ வினைகளைக் களைந்து அவனை இரட்சிக் கிறவர் என்பதால் ஆதி இந்தியக் கிறிஸ்தவர்கள் அவரைப் பாவ வினை களைத் தீர்ப்பவர் அதாவது வினைதீர்க்கும் விநாயகர் என்று அழைத் தார்கள். இதுவும் ஒரு காரணப் பெயராகவே காணப்படுகிறது. விநாயகர் என்பது சிலர் நினைக்கிறபடி ஒரு தனிப்பட்ட உருவத்தின் பெயரல்ல.

மாறாக மனிதனின் பாவவினைகளைத் தீர்த்து இரட்சிக்கிற குமாரனாகிய கடவுள் என்றே ஆதி இந்தியக் கிறிஸ்தவர்கள் அப்பெயரை எடுத்துக் கொண்டார்கள். ஆனால் பிற்காலங்களில் பல சூழ்ச்சிகளின் காரணத்தால் தவறான விளக்கம் கொடுக்கப்பட்டது.

கிறிஸ்து என்ற வார்தை

கிறிஸ்தவர்கள் பயன்படுத்தும் கிறிஸ்து என்ற வார்த்தையும் ஒரு காரணப் பெயராகும். எண்ணெய் வார்க்கப்பட்டவர் அல்லது அபிஷேகம் பண்ணப்பட்ட ராஜா என்பது அதின் பொருள். இதற்குக் கூறப்படும் எபிரெய வார்த்தை மேசியா என்பதாகும். மேசியா என்பதற்குக் கிரேக்கச்சொல் 'கிறிஸ்டாஸ்' என்பதாகும். கிறிஸ்டாஸ் என்ற கிரேக்க வார்த்தை ஒலி மாற்றமடைந்து ஆங்கிலத்தில் 'கிறைஸ்ட்' என்றும், தமிழில்- கிறிஸ்து என்றும் கூறப்படுகிறது.

இராஜா, இந்திரன்

ஆதி இந்தியக் கிறிஸ்தவர்கள் குமாரனாகிய கடவுளுக்கு அபிஷேகம் பண்ணப்பட்ட ராஜா என்ற பொருளில் இந்திரன் என்ற வேறொரு வார்த்தையையும் பயன்படுத்தினார்கள். இந்திரன் என்பதற்குத் தலைவன் அல்லது ராஜா என்பதே பொருள். எனவே ஆதி இந்தியக் கிறிஸ்தவர்கள் ராஜா என்ற வார்த்தைக்குப் பதிலாக இந்திரன் என்ற சொல்லைப் பயன்படுத்தினார்கள். அது ஒரு இடுகுறிப்பெயர் அல்ல. மாறாக ராஜா அல்லது தலைவன் எனப் பொருள்படும் காரணப்பெயர் ஆகும். ஐரோப்பிய வழிக் கிறிஸ்தவர்களும் இயேசுவை ராஜா, இயேசு ராஜா, வரப்போகிற ராஜா என்னும் பொருள்படும் சொற்களால் அழைப்பதுமுண்டு.

திரித்துவத்தில் பிதாவைக் குறிப்பிடும் பெயர்கள்

a) பிதா / அப்பன்

கிறிஸ்தவர்கள் கடவுளைப் பிதாவாகிய கடவுள் என்று அழைக்கும் போது சைவர்கள் அப்பனாகிய கடவுள் என்கிறார்கள். பிதா என்பதும் அப்பன் என்பதும் ஒரே பொருளைக் கொண்ட வார்த்தைகளாகும்.

b) அன்புக் கடவுள் / சிவன்

கிறிஸ்தவத்தில் பிதாவாகிய கடவுள் அன்பே உருவான கடவுளாகப் போற்றப்படுகிறார். தேவன் அன்பாகவே இருக்கிறார் என்பது கிறிஸ்தவம். கிறிஸ்தவர்கள் அன்பாகிய கடவுளைப் பிதாவாகிய தேவன் என்று அழைக்கிறார்கள். ஆதி இந்தியக் கிறிஸ்தவர்கள். அன்பு என்ற வார்த்தைக்கு மற்றுமோர் தமிழ்ச் சொல்லைப் பயன்படுத்தினார்கள் அதுதான் 'சிவம்' என்பது. சிவம் என்பதின் பொருள் 'அன்பு' என்பதேயாகும்.

"அன்பும் சிவனும் இரண்டென்பர் அறிவிலார்
அன்பே சிவமாவ தாரும் அறிகிலார்
அன்பே சிவமாவ தாரும் அறிந்தபின்
அன்பே சிவமாய் அமர்ந்திருந்தாரே"

(திருமூலர் திருமந்திரம் 257)

'சிவன்' என்றால் அன்பே உருவான கடவுள் என்பதே பொருள். ஆதி இந்தியக் கிறிஸ்தவர்கள் அன்பாகிய கடவுளைப் பிதாவின் ஸ்தானத்தில் கொண்டு பிதாவைச் சிவன் என்று அழைக்கிறார்கள். சிவன் என்ற சொல்லின்க் கருத்தை சிலர் சரியாய்ப் புரிந்து கொள்வதில்லை. அவர்கள் சிவன் என்றால் ஒரு தனிக் கடவுளின் இடுகுறிப்பெயரென்று நினைக்கிறார்கள். இந்த வார்த்தையைச் சைவர்கள் உபயோகிப்பதால் கிறிஸ்தவர்கள் அதை அன்னிய கடவுள் என்று சொல்லி வெறுத்துவிடுகிறார்கள். மட்டுமல்ல அதைத் தங்கள் நாவினால் உச்சரிக்கவும் கூடாது என்கிறார்கள். இது சொற்களில் காணப்படும் வேற்றுமை; அல்லாமல் பொருளில் அல்ல.

குமாரனைக் குறிக்கும் பெயர்கள்

a) குமாரனாகிய கடவுள் / குமரக்கடவுள்

கிறிஸ்தவத்தில் குமாரனாகிய கடவுள் மனுஷகுமாரன் என்றும் தேவ குமாரன் என்றும் அழைக்கப்படுகிறார். ஆதி இந்தியக் கிறிஸ்தவர்கள் இவரைக் குமரக் கடவுள் என்று அழைத்தார்ககள். குமாரன் என்பதும் குமரன் என்பதும் ஒருவரையே குறிக்கும் . ஆதி இந்தியக் கிறிஸ்தவர்கள் குறிப்பிடும் குமரேசன் என்ற வார்த்தைக்குக் குமாரனாகிய ஈசன் என்பதே பொருள் (குமாரனாகிய இயேசு).

b) குமாரன் / பிள்ளையார்

'குமாரனை' 'மகன்' என்றும் 'பிள்ளை' என்றும் அழைப்பதுமுண்டு. ஆதி இந்தியக் கிறிஸ்தவர்கள் குமாரனை மகன் என்றும் பிள்ளை என்றும் அழைத்தார்கள். கடவுளுடைய பிள்ளை என்பதால் அவரைக் கனத்திற்குரியவராக 'பிள்ளையார்' என்று அழைத்தார்கள். இவ்வார்த்தைகளைச் சைவ வைணவர்கள் பயன்படுத்துவதால் அவைகளையும் சிலர் அன்னிய தேவர்களின் நாமங்கள் என்கிறார்கள்.

c) அழகு நிறைந்தவர் / அழகர்

கிறிஸ்தவத்தில் குமாரனாகிய இயேசுவை அழகுடையவராய்க் கருதுகிறார்கள். அவரை வெண்மையும் சிவப்புமானவர் என்றும், சாரோனின் ரோஜா என்றும் அழகு நிறைந்தவர் என்றும் அன்போடு அழைக்கிறார்கள். இதே கருத்தோடு ஆதி இந்தியக் கிறிஸ்தவர்களும் குமரனாகிய கடவுளை 'அழகர்' என்றும் அழைத்தார்கள். அவர்களால் கூறப்படும் அழகேசன் என்ற சொல்லுக்கு அழகராகிய ஈசன் அல்லது இயேசு என்பதே பொருள்.

d) முருகன் / அழகர்

மேலும் ஆதி இந்தியக் கிறிஸ்தவர்கள் அழகு என்பதற்கு மற்றுமோர் தமிழ் சொல்லையும் பயன்படுத்தினார்கள் அதுவே 'முருகு' என்பது. முருகன் என்றால் முருகு உடையவன் அல்லது அழகு உடையவன் அதாவது அழகுடைய கடவுள் என்பதே பொருள். அவர்களால் கூறப்படும் முருகேசன் என்ற சொல்லுக்கு முருகனாகிய ஈசன் அல்லது அழகுடையவராகிய ஈசன் (இயேசு) என்பது பொருள்.

பரிசுத்த ஆவியைக் குறிப்பிடும் பெயர்கள்

a) சக்தி / Power

கிறிஸ்தவத்தில் பரிசுத்த ஆவியாகிய கடவுள் என்பதற்குச் சைவத்தில் சக்தி (power) என அழைக்கப்பட்டது. அப். 1 : 8-ல் "பரிசுத்த ஆவி உங்களிடத்தில் வரும்போது நீங்கள் பெலன் அடைந்து...." என்று பார்க்கிறோம். எனவே பரிசுத்த ஆவியை 'பெலன்' அல்லது 'சக்தி' என்று எடுத்துக் கொண்டு அதை பெண்பாலாக கருதினார்கள்.

b) விஷ்ணு

ஆனால் வைணவத்தில் பரிசுத்த ஆவி விண்ணிலிருந்து வந்தவர் என்ற கருத்தில் விட்டுணு (விஷ்ணு) என்ற பெயர் கொடுக்கப்பட்டது.

சக்தி, விஷ்ணு ஆகிய பெயர்கள் இடுகுறிப் பெயர்கள் அல்ல. அவைகள் காரணப் பெயர்களே ஆகும்.

பிற பெயர்கள்

கடவுளுக்கு ஆதி இந்தியக் கிறிஸ்தவர்கள் பயன்படுத்திய மேலும் அனேகச் சொற்களைக் கிறிஸ்தவர்கள் பயன்படுத்துவதே இல்லை. சைவ வைணவர்கள் அந்தப் பெயர்களைப் பயன்படுத்திய காரணத்தால் கிறிஸ்த வர்கள் அவைகளை அன்னிய தேவர்களின் பெயர்கள் என்று சொல்லி அவைகளை வெறுத்து விடுகின்றார்கள். அவர்கள் அச்சொற்களின் பொருளை அறிந்து கொள்ளாததே இந்நிலைக்குக் காரணமாகும். உதாகரணமாக :-

விஸ்வநாதன்

விஸ்வநாதன் என்ற சொல்லின் பொருள் உலகனைத்திற்கும் நாதனாய் இருக்கும் கடவுள் என்பதே ஆகும். கடவுள் உலகனைத்திற்கும் நாதனாய் இருப்பவர் என்று கிறிஸ்தவர்களும் விசுவாசிக்கிறார்கள். ஆனாலும் இந்தக் காரணப்பெயரை அவர்கள் கூறுவதில்லை.

விஸ்வம்பரன்

விஸ்வம்பரன் என்ற வார்த்தையின் பொருள் உலகனைத்தையும் ஆளுகை செய்யும் கடவுள் என்பதே ஆகும்.

விக்னேஷ்வரர்

விக்னேஷ்வரர் என்ற சொல்லுக்குத் தடைகள் யாவையும் நீக்கிப் போடுகிற கடவுள் என்பதே பொருள்.

பரமேஷ்வரர்

பரமேஷ்வரர் என்ற சொல்லுக்கு எல்லாவற்றிற்கும் மேலான கடவுள் என்பதே பொருள். மேலே கூறப்பட்ட இச்சொற்களுக்கு ஆதாரமாய்க் காணப்படும் காரணத்தை கிறிஸ்தவர்கள் ஏற்றுக் கொள்கிறார்கள் என்றாலும் இவ்வார்த்தைகளை ஏற்றுக்கொள்வதில்லை.

ஆம், ஆமேன் / ஓம்

ஆம், ஆமேன், ஓம் ஆகிய வார்த்தைகளைக் குறித்து முன்னால் பார்த்தோம். இவை கிறிஸ்தவத்துக்குச் சொந்தமான வார்த்தைகள் என்பதே உண்மை. இவை கிறிஸ்துவை குறிக்கும் வார்த்தைகளாகும். ஆம், ஆமேன் ஆகிய வார்த்தைகளை ஆதி இந்திய கிறிஸ்தவர்கள் 'ஓம்' என்று உச்சரித்தார்கள். இந்நாட்களிலும் தமிழ் மொழி பேசும் மக்களில் சில பிரிவினர் (இலங்கைத் தமிழர்கள்) 'ஆம்' என்பதை 'ஓம்' என்றே உச்சரிக்கிறார்கள் என்பது குறிப்பிடத்தக்கதாகும்.

இந்த வார்த்தைகள் ஆதியிலே வார்த்தையாயிருந்த தேவனை (கிறிஸ்துவை) குறிக்கின்றன. அவர் ஆதியில் ஜலத்தின்மேல் அசைவாடிக் கொண்டிருந்தவர் (ஆதி. *1 : 1, 2*). அவர் தேவனுடைய சிருஷ்டிக்கு ஆதியாயிருக்கிற ஆமேன் என்பவர் (வெளி. *3 : 14*). பரலோகத்தில் இருபத்தி நான்கு மூப்பர்களும் நான்கு ஜீவன்களும் வணக்கமாய் விழுந்து தொழுது கொள்ளும் தேவனின் 'ஆமேன்' என்கிற நாமமாயிருக் கிறது (வெளி. *19 : 4*). அது இயேசு கிறிஸ்துவுக்குள் ஆம் என்றும் ஆமேன் என்றும் இருக்கிறது (II கொரி. *1 : 20*).

யோவான் காட்டும் மாதிரி

பரிசுத்த யோவான் இந்த வார்த்தையை வெளி. 22 : 20-ல் முன் மாதிரியாக பயன்படுத்துகிறார்.

'ஆமேன்... கர்த்தராகிய இயேசுவே வாரும்' அல்லது
'ஆம்... கர்த்தராகிய இயேசுவே வாரும்' அல்லது
'ஓம்... கர்த்தராகிய இயேசுவே வாரும்'

இவை யாவும் ஒரே கருத்தையே குறிக்கிறது.

யோவான் காட்டிய முன்மாதிரி, நமக்கு தேவனை வருந்தி அழைக்கவும், போற்றவும், துதிக்கவும், நமஸ்கரிக்கவும், மிகவும் பயன் உள்ளதாக விளங்குகிறது

சில எடுத்துக்காட்டுகள்

வாரும்

ஆம்... கர்த்தராகிய இயேசுவே வாரும்
ஆம்... ராஜாதி ராஜாவே வாரும்
ஆம்... பிதாவாகிய தேவனே வாரும்
ஆம்... கருணைக்கடலே வாரும்
etc.

ஆம்... தேவாதி தேவனே வாரும்
ஆம்... சர்வ வல்லவரே வாரும்
ஆம்... கர்த்தாதி கர்த்தாவே வாரும்
ஆம்... கருணாநிதியே வாரும்
etc.

போற்றி

ஆம்... கருணாகரனே போற்றி
ஆம்... விண்ணவனே போற்றி
ஆம்... வானாதி வானவனே போற்றி
ஆம்... ஐங்காயத்தானே போற்றி
etc.

ஆம்... சர்வ வியாபியே போற்றி
ஆம்... மண்ணில் வந்தவனே போற்றி
ஆம்... மனுவுருவானவனே போற்றி
ஆம்... ஐந்தவித்தானே போற்றி
etc.

சரணம் சரணம்

ஆம்... பராபரனே சரணம் சரணம்
ஆம்... தயாபரனே சரணம் சரணம்
ஆம்... ஈசனே சரணம் சரணம்
ஆம்... சாத்தானை வென்றவனே சரணம் சரணம்
etc.

ஆம்... அப்பனே சரணம் சரணம்
ஆம்... தயாநிதியே சரணம் சரணம்
ஆம்... நேசரே சரணம் சரணம்
ஆம்... அல்பா ஒமேகா சரணம் சரணம்
etc.

நமோ நம

ஆம்... தேவகுமாரா நமோ நம
ஆம்... இரட்சிப்பவனே நமோ நம
ஆம்... மரித்துயிர்த்தவனே நமோ நம
ஆம்... அரூபியே நமோ நம
etc.

ஆம்... மனிதகுமாரா நமோ நம
ஆம்... வினைதீர்ப்பவனே நமோ நம
ஆம்... விண் சேர்ப்பவனே நமோ நம
ஆம்... அரூப சொரூபியே நமோ நம
etc.

நமஹ

ஆம்... பரம்பொருளே நமஹ
ஆம்... சர்வ ஞானியே நமஹ
ஆம்... கிறிஸ்து ராஜா நமஹ
ஆம்... பரிசுத்தரே நமஹ
etc.

ஆம்... பரஞ்ஜோதியே நமஹ
ஆம்... நியாயாதிபதியே நமஹ
ஆம்... இயேசு தேவா நமஹ
ஆம்... பரிசுத்த ஆவியே நமஹ
etc.

ஆதி இந்திய கிறிஸ்தவர்கள்

ஆதி இந்திய கிறிஸ்தவர்களும் இதே முறையைப் பின்பற்றி ஓம் என்ற வார்த்தையை எடுத்துக் கொள்வதை பார்க்கிறோம்.

அவர்கள் 'ஓம் சிவாய நமஹ' என்பதற்கு ஆம் அன்பாகிய கடவுளே உம்மை நமஸ்க ரிக்கிறேன் என்பதே பொருள். சைவர்கள் கூறும் மற்றுமோர் வார்த்தை 'ஓம் நமச்சிவாயா' என்பதாகும். 'நமச்சிவாயா' என்பதை பஞ்சாச்சரம் (ஐந்து எழுத்துக்கள்) என்கிறார்கள். கடவுளை தொழுது கொள்ளும் ஓர் முக்கிய வார்த்தையாக அவர்கள் அதை பயன்படுத்துகிறார்கள். 'ஓம் நமச்சிவாயா' என்பதற்கு ஆம், அன்பே உருவான கடவுளே உம்மை நமஸ்கரிக்கிறேன் என்பதே பொருள். (சிவம் என்றால் அன்பு என்பதாகும்). நமக்காக தம்முடைய ஒரே பேறான குமாரனை சிலுவை மரணத்துக்கு ஒப்புக்கொடுத்த பிதாவாகிய தேவனே அல்லாமல் அன்பே உருவான கடவுள் வேறொருவரும் இல்லை (யோவான் *3 : 16*).

ஆதி இந்திய கிறிஸ்தவர்கள் மேற்கூறிய முறைகளை பின்பற்றி ஓம் என்று ஆரம்பிக்கிறார்கள்.

ஓம்... சிவாய நமஹ
ஓம்... விஸ்வநாதா நமஹ
ஓம்... சர்வ வியாபீ நமஹ
ஓம்... நமச்சிவாயா
ஓம்... பரமாத்மா நமஹ
etc.

ஓம்... விக்னேஷ்வராய நமஹ
ஓம்... விஸ்வம்பராய நமஹ
ஓம்... சர்வஞானி நமஹ
ஓம்... சிவாய நமஹ
ஓம்... பரமேஸ்வரா நமஹ
etc.

பரிசுத்த ஆவியை அழைப்பது

ஆதி இந்திய கிறிஸ்தவர்கள் பரிசுத்த ஆவியை ஆவி, வல்லமை, பெலன் அல்லது 'சக்தி' (Power) என்று அழைத்தார்கள். "பரிசுத்த ஆவி

உங்களிடத்தில் வரும்போது நீங்கள் 'பெலன்' அடைந்து.... பூமியின் கடைசிபரியந்தம் எனக்கு சாட்சிகளாயிருப்பீர்கள்" அப். 1 : 8. இங்கு கூறப்படும் 'பெலத்தின்' அடிப்படையில் கூறுவது தான் :-

ஓம்... சக்தி ஓம்...	ஓம்... சக்தி ஓம்...
ஓம்... சக்தி ஓம்...	ஓம்... சக்தி ஓம்...
etc.	etc.
(ஆமேன்... ஆவியானவரே...ஆம்...	ஆமேன்... ஆவியானவரே, ஆம்...)

b) வேற்றுமைகள்

தோமாவின் கிறிஸ்தவக் கொள்கைகளின் அடிப்படையில் உருவாக் கப்பட்ட சைவ வைணவம் பின் நாட்களில் ஆரியர்களின் சூழ்ச்சிகளால் திணிக்கப்பட்ட இந்துத்துவா என்ற ஜாதிக்கொள்கைகளால் பல மாற்றங்கள் அடைந்து காணப்படலாயிற்று.

இந்துத்துவா

இந்துத்துவாவால் ஜாதி ஏற்றத்தாழ்வு திராவிடர்களுக்கிடையே புகுத்தப்பட்டது. சைவ வைணவ மதங்களோடு பழந்திராவிட வழிபாடு களும் ஆரியர்களின் தீ வழிபாடும் கலக்கப்பட்டு எல்லாமே இந்து மதம் என்ற போர்வைக்குள் திணிக்கப்பட்டது. எனவே கடவுள் கொள்கைக ளிலும் ஆராதனை முறைகளிலும் மற்றெல்லா முறைகளிலும் பெரும் மாற்றங்கள் ஏற்படலாயிற்று

தவறான உரைகள்

கிறிஸ்தவக் கொள்கைகளை வெளிப்படுத்தும் சைவ வைணவ இலக்கியங்களுக்குத் தவறான உரைகள் எழுதப்பட்டு உண்மைக் கருத் துக்கள் மக்களுக்கு மறைக்கப்பட்டன.

இடைச்செருகல்

வேத வேதாந்தங்களில் அநேக இடைச்செருகல்கள் செய்து இழிவான கொள்கைகளும், கருத்துக்களும் புகுத்திவிடப்பட்டன.

கருத்துக்களைத் திரித்தல்

சைவ வைணவத்தின் அடிப்படை கொள்கைகளைத் திரித்து மதத்தால் திராவிட மக்கள் அடிமைப்படுத்தப்பட்டார்கள். அஹம்பிரம்மாஸ்மி (கடவுள் எனக்குள் இருக்கிறார்) என்ற உண்மைக்கு நானே கடவுள் என்று விளக்கம் கொடுத்து ஒரு பிரிவினர் தங்களைப் பிரமனுக்குச் சம மாக்கித் தங்களைப் பிராமணர்கள் என்ற மேல்சாதியாக்கிக் கொண்டார்கள்.

கோவில்களில் இழிவான சொரூபங்கள்

கடவுள் கொள்கைகளை விளக்குவதற்காக உருவாக்கப்பட்ட சிற்பங் களில் இழிவான உணர்ச்சிகளை ஊட்டும் விதத்தில் மாற்றங்கள் செய்து அவற்றைக் கோவில்களில் வைத்தார்கள்.

புராணங்களில் ஆபாசக் கருத்துக்கள்

எளிய முறையில் உண்மைகளை விளக்குவதற்காக உருவாக்கப் பட்ட புராணக் கதைகளில் ஆபாசக் கருத்துக்கள் புகுத்தி அத்தகைய ஆபாச கதைகளை விளக்கும் சிற்பங்களையும் கோயில்களில் வைத் தார்கள்.

கடவுள் பெயர்களை இழிவு படுத்தல்

திராவிடர்களின் சிவனைச் சூத்திரக் கடவுள் என்றும், விஷ்ணுவை சத்திரியக் கடவுள் என்றும் இழிவு படுத்தி இன வேற்றுமையை அங்கும் புகுத்தினார்கள். திராவிடர்களின் கடவுளை இழிவுபடுத்திக் கொண்டு அக்கினியை வழிபட்ட பிராமணர்களே சைவ வைணவக் கோவில்களில் பூசாரிகளாக்கப்பட்டார்கள்.

திசை திருப்பப்படுதல்

ஆதி இந்தியக் கிறிஸ்தவம் இந்துத்துவாவால் திசை திருப்பப்பட்டு இந்துமதம் என்ற பெயரில் விதவிதமான ஆசாரமுறைகளையும் சடங்காசாரங்களையும் ஏற்றுக் கொண்டு முன் நிலையை விட்டு தூரம் சென்றுவிட்டது.

அதிகாரம் 24

சைவ வைணவம்

இந்துத்துவாவிலிருந்து விடுதலை ஆனால்...

இந்துத்துவாவின் பிடியிலிருந்தும் இந்து மதம் என்ற போலிப் போர்வையிலிருந்தும் சைவ வைணவ மதங்கள் விடுதலை அடையும் போது ஒரு புத்துணர்ச்சி ஏற்படும். அப்போது சைவ வைணவங்களில் இன்று காணப்படும் நிலைகளில் பல மாற்றங்கள் ஏற்படக் கூடும் என்று எதிர்பார்க்கலாம். அவையாவன:-

ஜாதிக் கொள்கை அகற்றப்படும்

சைவ வைணவ மதங்களைக் கறைப்படுத்திய ஆரியர்களின் ஜாதிக் கொள்கை அகற்றப்படும். அன்பே உருவான கடவுளின் அன்பு எல்லா ஜனங்களிலும் ஜாதி ஏற்றத்தாழ்வில்லாமல் பகரப்படும்.

வழிபாடுகளில் மாற்றம் உண்டாகும்

ஆரியர்களின் தீ வழிபாடுகளும் யாகங்களும் அகற்றப்படும். அதே வேளையில் சைவ வைணவர்களல்லாத திராவிட மக்களின் பழந் திராவிட வழிபாடுகளும் பலிகளும் சைவ வைணவ மதங்களிலிருந்து அகற்றப்படும்.

சைவ சித்தாந்தக் கொள்கைகள் உறுதிப்படுத்தப்படும்

சைவ சித்தாந்தக் கொள்கைகள் முற்றிலும் மீண்டுமாய்ப் பலப் படுத்தப்படும். அதாவது கடவுள் ஒருவரே, அவர் திருத்துவக் கடவுள்,

அவர் உலகத்தில் மனிதனாய் அவதரித்தார், தம்மையே பலியாக்கி மனிதனுக்கு இரட்சிப்பை ஏற்படுத்தினார். இதை விசுவாசித்து ஏற்றுக் கொண்டவர்கள் கடவுளிடம்சென்றடைவார்கள் ஆகிய அடிஸ்தான கொள்கைகள் உறுதிபடுத்தப்படும்.

தகாத கொள்கைகள் அகற்றப்படும்

ஆதி சங்கரரின் அத்வைதக் கொள்கையும் அதோடு சைவ வைணவங்களில் புகுத்தப்பட்ட சாத்தானின் கொள்கைகள் அனைத்தும் அகற்றப் படும். 'அகம்பிரம்மாஸ்மி' என்பதற்கு அளிக்கப்பட்ட தகாத விளக்கங்கள், பிறவிச்சுழற்சிக் கொள்கைகள், கர்ம மார்க்கங்கள் போன்ற கடவுள் கொள்கைக்கு மாறான அனைத்துப் போதனைகளும் அகற்றப்படும்.

இலக்கியங்களிலுள்ள தகாத உரைகள் அகற்றப்படும்.

சைவ வைணவ இலக்கியங்களுக்கும் வேத வேதாந்தங்களுக்கும் எழுதப்பட்ட தவறான உரைகள் அத்தனையும் அகற்றப்படும். அவைகளில் புகுத்தப்பட்ட இடைச்செருகல்களும் அகற்றப்படும்.

சைவ வைணவ இலக்கியங்கள் வெளிக்கொணரப்படும்

சைவ வைணவ அறிஞர்கள், சித்தர்கள், முனிவர்கள் ஆகியோர் எழுதிய இலக்கியங்கள், பக்திப்பாடல்கள் யாவும் வெளிக்கொண்டு வரப்பட்டுச் சரியான உரைகள் எழுதப்பட்டுப் பயன்படுத்தப்படும்.

விவிலியம் பயன்படுத்தப்படும்

சைவ வைணவ இலக்கிய விளக்கங்களுக்கு விவிலியம் பயன்படுத்தப்படும். திருக்குறள், சிவஞானபோதம், திருஉந்தியார் போன்ற நூல்களில் கூறப்பட்டுள்ள கருத்துக்களின் வரலாற்று விளக்கங்களுக்கு விவிலியம் பயன்படுத்தப்படும்.

எடுத்துக்காட்டு *1.*

சிவஞான போதம் முதலாம் சூத்திரத்தில் 'அவன், அவள், அது' என்பது ஆதாம், ஏவாள், உலகம் எனவும் 'மூவினைமையின்

தோற்றிய' என்பது இவை மூன்றும் மூன்று விதமான முறைகளில் தோற்று விக்கப்பட்டன என்று கூறும் போது ஆதாம் மண்ணினாலும், ஏவாள் எலும்பிலிருந்தும், உலகம் வார்த்தையினாலும் உருவாக்கப்பட்டன எனவும் விவிலியத்திலிருந்து விளக்க வேண்டியுள்ளது. 'என்மனார் புலவர்' என்று கூறும் போது அப்புலவர்கள் பரிசுத்த வேதாகமத்தை எழுதியவர்கள் என்றும் விளக்கப்படுகிறது.

எடுத்துக்காட்டு 2.

திருவுந்தியாரின் 'முக்தி முதற் கொடிக்கே மோகக் கொடி படர்ந்து' என்ற பாடலில் வரும் முதல் மனிதனில் பாவம் பிரவேசித்த விதத்தை விளக்கும் போது அதை விவிலியத்திலிருந்து தான் விளக்க வேண்டியுள்ளது. 'அப் பழம் உண்ணாதே உந்தி பற' என்ற வரியில் ஏதேன் தோட்டத்தில் நன்மை தீமை அறியத்தக்க விருட்சத்தின் கனியைப் புசிக்கக் கூடாது என்ற தேவக் கட்டளையைக் குறித்த அந்த வரலாறும் விவிலியத்திலிருந்து தான் கண்டுபிடிக்க வேண்டியுள்ளது.

எடுத்துக்காட்டு 3.

திருக்குறளில் 'பொறிவாயில் ஐந்தவித்தான்' என்ற குறட்பாவில் பொறியாகிய கருவியில் (சிலுவை) தம் ஐம்புலன்களையும் அவித்த வராகிய (பலியாக்கிய) கடவுளின் பாதங்களை அடைவோர்க்கு நித்திய ஜீவன் உண்டு என்று சொல்லும் போது இதை வரலாற்றோடு சேர்ப்ப தற்கு விவிலியத்தைத் தான் அணுக வேண்டும்.

இவ்வாறு சைவ சித்தாந்தப் பாடல்களை ஒவ்வொன்றாக விளக் குவதற்குச் சைவசித்தாந்த நூல்களோடு விவிலியத்தையும் ஆதாரமாகக் கொள்ள வேண்டிய கட்டாயம் ஏற்படும்.

ஆலயங்களில் ஆராதனை முறை ஒழுங்குப்படுத்தப்படும்

ஆலயங்கள் ஆதி இந்திய திருச்சபை என்று அழைக்கப்படலாம். ஆலயங்களில் ஒழுங்கான ஆராதனை முறைகள் ஏற்படுத்தப்படும். பலிகளும், விக்கிரகப் பூஜைகளும் அறவே அகற்றப்படும். இந் நாட்க ளிலும் உண்மையான சைவச் சித்தாந்திகள் விக்கிரகங்களைப் பூஜிப்ப தில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

ஆலயங்களிலிருந்து விக்கிரகங்கள் அகற்றப்படும்.

புராணக்கதைகளில் கூறப்படும் பல நிகழ்சிகளைச் சித்திரிக்கும் விதத்தில் உணர்ச்சிகளைத் தூண்டும் விதத்தில் செய்யப்பட்ட ஆபாசமான விக்கிரகங்கள் யாவும் ஆலயங்களிலிருந்து அகற்றப்படும்.

எழுப்புதல் உண்டாகும்

ஜாதி வேற்றமையின்றி மக்கள் எல்லோரும் சேர்ந்து ஒருவருக் கொருவர் அன்பு கூர்ந்து கடவுளைப் புகழ்ந்து பாடி பரப்பிய பக்தி இயக்கங் களைப்போல, சைவ வைணவ மக்கள் பல்வேறு பக்தி இயக்கங்களில் ஈடுபடுவார்கள். ஒரு மாபெரும் எழுப்புதலை மக்கள் கண்டடைவார்கள்.

கடவுள் பெயர்களை ஒருவருக்கொருவர் ஏற்றுக் கொள்வர்

ஆதி இந்தியக் கிறிஸ்தவர்களால் பயன்படுத்தப்படும் சிவன், விஷ்ணு, குமரன், அழகர், முருகன், ஈசன், பிள்ளை, பிள்ளையார், விநாயகர், அப்பன் போன்ற கரணப் பெயர்களைக் கிறிஸ்தவர்கள் அன்னிய தேவர்களின் பெயராக எண்ணி அவைகளைப் புறக்கணிக்க மாட்டார்கள். அவ்வாறே, கிறிஸ்தவர்கள் பயன்படுத்தும் கிறிஸ்து, இயேசு, பிதா, இம்மானுவேல், தேவன், இயேசு ராஜா போன்ற பெயர்களைச் சைவ வைணவர்களும் புறக்கணித்துவிட மாட்டார்கள். மாறாக இருபாலரும் மேலே கூறப்பட்ட காரணப் பெயர்களின் பொருளை நன்கு அறிந்து கொண்டு ஒன்றுபடுவார்கள்.

ஒற்றுமை உண்டாகும்

மேலே கூறப்பட்ட நிலைகளைச் சைவ வைணவம் அடையும் போது கிறிஸ்தவர்கள் சைவ வைணவர்களைக் கடவுளின் திருச்சபையின் அங்கத்தினராகக் கண்டு கொள்வார்கள். அவ்வாறு சைவ வைணவர்கள் விவிலியத்தைத் தங்கள் சைவ சித்தாந்த நூல்களுக்கு ஆதாரமாகக் கண்டு கொண்டு கிறிஸ்தவர்களைத் தங்களில் ஒரு கூட்டத்தினராக ஏற்றுக் கொள்வார்கள். அப்போது இன்று நம் நாட்டில் காணப்படும் இருவகைக் கிறிஸ்தவர்களும் (ஆதி இந்தியக் கிறிஸ்தவர்களும், ஐரோப்பிய வழி கிறிஸ்தவர்களும்) தங்கள் விரோதங்களைக் களைந்து ஒற்றுமையோடு வாழ முடியும்.

அதிகாரம் 25

ஆராய்ச்சிகள் நிரூபிக்கப்பட்ட விதம்

இந்நிலையில் அண்மைக் காலங்களில் சைவ வைணவச் சித்தாந் தங்களை நன்கு கற்றறிந்த அறிஞர்கள் ஆன்மீக அடிப்படையிலும், தத் துவ அடிப்படையிலும், வரலாற்று அடிப்படையிலும் பல்வேறு நிலைக ளில் ஆராய்ந்து உண்மை நிலைகளை வெளிக்கொண்டு வந்திருக்கிறார்கள். இவ்வாராய்ச்சிகளில் முன்நிலையில் இருப்பவர் டாக்டர். மு. தெய்வ னாயகம் அவர்களாகும். பல்லாண்டு காலங்களாக நடத்தப்பட்ட ஆராய்ச் சிகளின் அடிப்படையில் நிலைநாட்டப்பட்ட முக்கியமான உண்மைக ளாவன :-

1. திருக்குறள் விவிலியத்தின் அடிப்படையிலான ஒரு நூல்.
2. திராவிடர்களின் சைவ வைணவ மதங்கள் தோமாவின் கிறிஸ்தவத்தால் உருவானவையே.

இவ்விரு உண்மைகளை டாக்டர். தெய்வனாயகம் அவர்கள் எப்படி நிலைநாட்டினார் என்பதைக் குறித்து டாக்டர். தேவகலா எழுதிய 'இந்தியா ஒரு தோமா வழி கிறிஸ்தவ நாடே' என்ற நூலில் வாசிக்கிறோம். சில கருத்துக்கள் கீழ் தரப்படுகின்றன.

1. திருக்குறள் ஒரு கிறிஸ்தவ நூல் :

டாக்டர். தெய்வனாயகம் அவர்களால் நிலைநாட்டப்பட்ட உண்மை கருத்துக்களில் ஒன்று திருக்குறள் ஒரு கிறிஸ்தவ நூல் என்பதாகும்.

ஆறு நூல்கள்

டாக்டர். தெய்வநாயகம் அவர்கள் திருக்குறள் பற்றி ஆறு நூல்களை வெளியிட்டார். அவையாவன :-

1. திருவள்ளுவர் கிறிஸ்தவரா ?
2. ஐந்தவித்தான் யார் ?
3. வான் எது ?
4. நீத்தார் யார் ?
5. சான்றோர் யார் ?
6. எழு பிறப்பு.

அறிஞர் குழு அமைப்பு

மேலே கூறப்பட்ட நூல்கள் அறிஞர்கள் மத்தியிலும், இந்துத்துவ வாதிகள் மத்தியிலும், சைவ சித்தாந்திகள் மத்தியிலும், இலக்கிய மேதைகள் மத்தியிலும் பெரும் சலசலப்பை உருவாக்கியுள்ளன. நூல்களுக்குப் பெரும் எதிர்ப்புகள் எழுந்தன. எனவே இந்த ஆறு நூல்களையும் ஆராய்வதற்கென (1) சென்னை, (2) மதுரை, (3) அண்ணாமலை (4) திருப்பதி வெங்கடேஸ்வரர் ஆகிய நான்குப் பல்கலைக் கழகங்களைச் சார்ந்த 37 அறிஞர்களைக் கொண்ட ஒரு குழு அமைக்கப்பட்டது.

கருத்தரங்கு மாநாடு 1972

அதோடு 1972 மே மாதம் 3, 4 ஆகிய நாட்களில் இதைக் குறித்து விவாதிக்க ஒரு கருத்தரங்கு மாநாடு சென்னைக் கிறிஸ்தவக் கலைத் தொடர்பு நிலையத்தில் நடத்தப்பட்டது.

சிறப்புத் தலைவர்

மாநாட்டுக்கு மொழி நூல் மூதறிஞர் பண்டிதர் ஞா.. தேவநேயப் பாவாணர் M.A. அவர்கள் சிறப்புத் தலைவராய் இருந்தார்கள்.

அரங்கத் தலைவர்

அருள்திரு. ச. சுவிசேஷ முத்து B.T., B.D., M.Th. அவர்கள் அரங்கத் தலைவராய்ச் செயல்பட்டார்கள்.

ஆய்வுக்குழு அணித்தலைவர்கள்

1. திருக்குறள் பீடம் அழகர் அடிகள் அவர்கள்.
2. பன்மொழிப் புலவர் கா. அப்பாத்துரையார் M.A.L.T. அவர்கள்.
3. Dr. வ.சுப மாணிக்கம் அவர்கள் M.A.,MOL.,Ph.D.
4. தவத்திரு. குன்றக்குடி அடிகளார் அவர்கள் MLC.
5. புலவர் குழந்தை அவர்கள் (இராவண காவியம் ஆசிரியர்).
6. Dr. M. சுந்தரம் அவர்கள் M.A.,M.Lit.,Ph.D.

அணி உறுப்பினர்கள்

30 பட்டதாரிகள் (பெயர் பட்டியல் இணைப்பு II-ல் தரப்பட்டுள்ளது) மாநாட்டில் 6 அணிகளாகப் பிரிந்து கருத்துக்கள் ஆய்வு செய்யப்பட்டன.

பாராட்டுகள்

மாநாட்டின் முடிவில் அணித்தலைவர்கள் சிறந்த முறையில் டாக்டர் தெய்வநாயகம் அவர்களின் ஆய்வுகளைப் பாராட்டினார்கள்.

முடிவில் Dr. மு. கோவிந்தசாமி M.A.,Ph.D. அவர்கள் "ஐந்தவித்தான், நிறைமொழி மாந்தர், நீத்தார் .... இவை அனைத்தும் இயேசு பெருமான் ஒருவருக்கே பொருந்தும் என்பதே இந்நூலின் நோக்கமாகும். அது நன்கு நிறைவேறியுள்ளது. கிறித்துவர்க்கும் மற்று சமயத்தார்க்கும் இது ஒரு அறிவுக்கண் திறப்பாகும்" என்று கூறி முடித்தார். டாக்டர் இஸ்ரவேல் M.A.,Ph.D. அவர்கள் "மறைக்கவோ மறுக்கவோ இயலாத கருத்துக்கள்" என்று பாராட்டினார்.

மேலும் ஒரு முயற்சி

உண்மைகளை மாநாட்டில் மறுக்க முடியாதவர்கள் மறுபடியும் ஒரு முயற்சியை மேற்கொண்டார்கள். தமிழ்த்துறைத் தலைவர் டாக்டர். சஞ்சீவி அவர்கள் சென்னைப் பல்கலைக் கழகத்தில் தி.சு. சத்தியம் அவர்களுக்குத் 'திருக்குறள் ஆராய்ச்சியின் வளர்ச்சி' என்ற ஆய்வுத் தலைப்பை Ph.D. ஆய்வுக்காகக் கொடுத்தார்.

தி.சு. சத்தியம் அவர்களின் முடிவு

தி.சு. சத்தியம் அவர்கள் தன் Ph.D. ஆய்வேட்டின் முடிவில் கூறியிருப்பதாவது "இந்த நூற்றாண்டின் தொடக்கத்தில் திருக்குறளின் உட்கிடக்கை சைவ சித்தாந்தமே என்று எழுந்த ஆய்வுப்போக்கு, இன்றைய காலத்தில் கிறிஸ்தவமே குறளின் உட்கிடக்கை என்ற கருத்துப்போக்கைப் பெற்று முடிந்துள்ளது" என்பதாகும்.

இன்று அறிஞர்கள் மத்தியில் திருக்குறள் ஓர் கிறிஸ்தவ நூல் என்ற கருத்து சந்தேகமின்றி ஏற்றுக்கொள்ளப்பட்டிருக்கிறது. மாற்றுக் கருத்துக்கள் இருப்பவர்களும் திருக்குறளைக் கூர்ந்து படிக்கும் கால் இக்கருத்தையே அடைவார்கள்.

2. சைவ வைணவ மதங்கள்ஆதி இந்தியக் கிறிஸ்தவத்தால் உருவானவை

டாக்டர். தெய்வனாயகம் அவர்களால் நிரூபிக்கப்பட்ட மற்றுமோர் உண்மை சைவ வைணவ மதங்கள் தோமாவால் கொண்டுவரப்பட்ட ஆதி இந்தியக் கிறிஸ்தவத்தால் உருவானவை என்பதாகும்.

ஒப்பாய்வு நூல்

தமது நீண்டகால ஆராய்ச்சிக்குப்பின் தெய்வனாயகம் அவர்கள் "விவிலியம், திருக்குறள் சைவ சித்தாந்தம் ஒப்பாய்வு" என்ற தலைப்பில் சென்னைப் பல்கலைக் கழகத்தில் டாக்டர் பட்டம் பெற்றார். இவ்வாய் வேடு 1985 - ல் உலகத் தமிழ் ஆராய்ச்சி நிறுவனம் வழியாய் வெளியிடப் பட்டது.

ஒப்பாய்வு நூலை எதிர்த்த கூட்டத்தார் அதைத் தடை செய்ய முயற்சித்தும் அது கூடாததால் Dr. தெய்வநாயகம் அவர்களைத் தருமை ஆதீன மடத்தில் அழைத்துச் சைவ சித்தாந்த அறிஞர்கள் மடாதிபதிகள் ஆகியோர் முன்னிலையில் விவாதங்கள் நடத்தினார்கள்.

கருத்தரங்கம்

இதற்கான கருத்தரங்கம் அனைத்துலகச் சைவ சித்தாந்த ஆராய்ச்சி நிறுவனம் (தருமைபுர ஆதீனம்) 1986 டிசம்பர் 6, 7 ஆகிய தேதிகளில் நடத்தியது.

தொடக்க உரை

தருமை ஆதீனம் இருபத்தாறாவது திருமஹா சன்னிதானம் ஸ்ரீலஸ்ரீஷண்முக தேசிக ஞானசம்மந்தப் பரமாச்சாரிய சுவாமிகள் அவர்கள் கருத்தரங்கில் தொடக்க உரை ஆற்றினார்கள்.

முதன்மை உரை

தவத்திரு. குன்றக்குடி அடிகளார் அவர்கள் முதன்மை உரை ஆற்றினார்கள்.

தொடர்புரை

திருப்பனந்தாள் ஸ்ரீகாசிமடத்து அதிபர் கயிலை மாமுனிவர் ஸ்ரீமத். காசிவாசி சுவாமிகள் அவர்கள் தொடர்புரை ஆற்றினார்கள்.

முன்னிலை

குழு விவாதங்கள் தவத்திரு குன்றக்குடி அடிகளார் திருப்பனந்தாள் ஸ்ரீமத். காசிவாசி சுவாமிகள் ஆகியோர் முன்னிலையில் நடந்தன.

கேள்விகளுக்குச் சைவ சித்தாந்தத்திலிருந்தே பதில்

கேள்விகளுக்கெல்லாம் சைவ சித்தாந்தத்திலிருந்து Dr. தெய்வனாயகம்

பதிலளிக்கையில் ஒப்பாய்வின் கருத்துக்களைக் கேள்வியாளர்களுக்கு மறுக்க முடியவில்லை.

முடிவு

முடிவில் விவாதங்களைப் பற்றிக் காமராசர் பல்கலைக்கழக சைவ சித்தாந்தத்துறைப் பேராசிரியர் Dr. T.P. சித்தலிங்கய்யா அவர்கள் "புதிய கருத்துக்களை ஏற்றுக்கொள்ளவும், பழைய கருத்துக்களை விட்டுக் கொடுக்கவும் பல ஆண்டுகள் தேவைப்படலாம்" என்று கூறித் தமது தொகுத்துரையை முடித்தார்.

பொன்னாடை

தருமை ஆதீனம் குருமகா சன்னிதானம் அவர்கள் Dr. தெய்வனாயகம் அவர்களுக்குப் பொன்னாடை போர்த்திக் கவுரவித்தார்கள்.

அங்கு நடைபெற்ற நிகழ்ச்சிகள் அனைத்தும் ஒலி ஒளி பதிவு செய்யப்பட்டுள்ளன.

மறுப்பு நூல்

மேலே கூறப்பட்ட நிகழ்ச்சிகளுக்குப் பின்னும் டாக்டர். தெய்வனாயகத்தின் ஒப்பாய்வு நூலுக்கு எப்படியாகிலும் ஒரு மறுப்பு நூல் எழுதவேண்டுமென்ற ஆசை சிலரை விட்டு விடாததால் ஆறு வருடத்துக்குப் பின் *1991* - ல் C. அருணகிரி முதலியார் அவர்களைக் கொண்டு ஒரு மறுப்பு நூல் எழுதப்பட்டது.

வெளியீட்டு விழாவில் கொலை செய்ய ஆலோசனை

24.1.1991 -ல் மறுப்பு நூல் வெளியீட்டு விழா நடத்தப்பட்டது. மறுப்புக் கருத்துக்கள் இல்லாததால் பலர் கோபத்தால் ஆத்திரமடைந்தனர். ஆனால் Dr. தெய்வனாயகம் அவர்கள் புன்னகையுடன் முன் வரிசையில் அமர்ந்திருந்தார்கள். அவர் அமர்ந்திருப்பதை அறியாமல் மீ.பா. சோமு என்பவர் பேசியதாவது:- நாம் எதற்கு Dr. தெய்வனாயகத்தின் நூலுக்கு மறுப்பு எழுத வேண்டும் ? நம்முடைய வழக்கம்

என்ன ? திருஞானசம்மந்தர் சமணரைக் கழுவிலேற்றிக் கொலை செய்தது போல், தெய்வனாயத்தை அமைதியாகக் காலி பண்ண வேண்டியதே நம்முறை. இது கூறியதும் கூட்டத்தை நடத்தியவர்கள் அவரை அமர்த்தினார்கள்.

மாலையாய் மாறிய மறுப்பு நூல்

பின்பு மறுப்பு நூல் ஆசிரியரான அருணை வடிவேல் முதலியார் அவர்கள் பேசுகையில் “Dr. தெய்வனாயகம் நூலுக்கு மறுப்பெழுதுவது அரிச்சந்திரன் தன் மனைவியை வெட்ட அரிவாள் ஏந்தியது போல் உள்ளது. ஆனால் அரிவாள் அவரது மனைவி கழுத்தில் மாலையாக விழுந்தது. அதுபோல் தான் இந்நூலும்” என்று பேசி முடித்தார்.

இந்தியாவின் ஆதிக் கிறிஸ்வதம் அனேக நூற்றாண்டுகளாக ஆரியர்களின் இந்துத்துவா என்ற பிராமணீயக் கொள்கையால் புதைக்கப் பட்டு விட்டது. உண்மைகள் மறைக்கப்பட்டு பொய்கள் உண்மையாக் கப்பட்டு விட்டன. சைவ வைணவ மக்கள் இன்று உண்மை என்று எண்ணிக் கொண்டிருப்பவைகளில் பெரும் பகுதியும் உண்மைக்கு மாறானவையே ஆகும் என்று நிலைநாட்டப்பட்டிருக்கின்றன.

அதிகாரம் 26

சத்தியத்தைத் தேடும் சவால்...?

சத்திய மேவ ஜயதே

'சத்திய மேவ ஜயதே' என்ற சொல் தெய்வீகமானது. 'சத்தியத்தை அறிவீர்கள், சத்தியம் உங்களை விடுதலையாக்கும்' என்பது இயேசு கூறிய வார்த்தை. முதலில் சத்தியத்தை அறிய வேண்டும். சத்தியத்தை அறிந்தோமானால் அந்தச் சத்தியமே நம்மை விடுதலையாக்கும்.

அறிவு பெற்றோம்

காலாகாலங்களாகப் புதைக்கப்பட்ட திராவிட மக்களின் மேன்மைகளையும் அவர்களுடைய சைவ வைணவ மதங்களையும் குறித்து அறிஞர்களின் அரும் பெரும் முயற்சிகளால் இன்று நாம் அறிவு பெற்றிருக்கிறோம். திருக்குறளும் சைவ வைணவ மதங்களும் தோன்றக் காரணம் ஆதி இந்தியக் கிறிஸ்தவம் என்பது நிலைநாட்டப்பட்டிருக்கிறது. சைவ வைணவ இலக்கியங்களில் கிறிஸ்தவக் கொள்கைகளும் விவிலியக் கருத்துக்களும் நிறைந்திருப்பதற்குக் காரணம் என்ன என்பது இப்போது வெளியாகி விட்டது.

மறக்கப்பட்ட உண்மைகள்

இந்நூலில் தரப்பட்டுள்ள கருத்துக்கள் அறிஞர்களின் ஆராய்ச்சியின் அடிப்படையிலும் வரலாற்று அடிப்படையிலும் அமைந்தவைகளாகும். இந்தியாவில் சைவ வைணவ மதங்கள் தோற்றுவிக்கப்பட்டு ஏறத்தாழ 2000 வருடங்கள் ஆகின்றன. ஆனால் அது வளர்ச்சியடைந்த காலத்தி

லிருந்தே ஆரியர்களின் இந்துத்துவா என்ற கொள்கையால் பல மாற்றங்கள் ஏற்படலாயிற்று. அம்மாற்றங்கள் ஏற்பட்டு நூற்றாண்டுகள் பல தாண்டிவிட்டன. இந்த நீண்ட காலத்திற்குள் திராவிடர்களான சைவ வைணவர்கள் தங்கள் உண்மையான மன நிலைகளையும், கொள்கை களையும் மறந்து விட்டார்கள். மட்டுமல்ல மாற்றப்பட்ட நிலைக ளையே உண்மை நிலை என்று நம்பிக் கொண்டிருக்கிறார்கள்.

எடுத்துக்காட்டு :

எடுத்துக்காட்டாக இந்துயிசம் அல்லது இந்துமதம் ஒரு மதமென்று நம்பப்படுகிறது. இந்துத்துவாவால் கீழ்ச்சாதி ஆக்கப்பட்டவர்கள் தங்களைக் கீழ்சாதியினர் என்றே நூற்றாண்டுகளாக நம்பிக்கொண்டிருக் கிறார்கள். சைவ வைணவர்களுக்குள்ளேயே ஜாதி வேற்றுமை புகுத்தப் பட்டிருக்கிறது. பல அரசியல் கட்சிகளும், கீழ்ச்சாதியார், தலித்துக்கள், ஆதிவாசிகள் போன்ற வகுப்பினரை மேன்படுத்த வேண்டும் என்றும், சமநிலையில் கொண்டுவர வேண்டும் என்றும் சொல்லிக்கொண்டு நிதியுதவி அளித்தல், சமபந்தி ஒழுங்குசெய்தல், கலப்புத்திருமணம் செய்தல், தீண்டாமை ஒழித்தல் போன்ற மேலோட்டமான பல முயற்சி களில் ஈடுபட்டு வருகிறார்கள். இவைகளால் நிலையான பயன் எதுவும் ஏற்படவில்லை. ஆனால் இந்த வேற்றுமைகளுக்குக் காரணமாய் இருக்கும் இந்துத்துவாவை ஒழித்துவிட வேண்டும் என்று மேல் சாதியாராகக் கருதப்படும் சைவ வைணவர்களே விரும்புவதில்லை. இந்நிலையில் தங்களுக்கு ஏற்பட்ட மாற்றங்களைக் களைந்து தங்கள் சைவ வைணவ மதங்களின் புனிதமான முன் நிலைமைகளைஅடைய வேண்டும் என்று கூறும் போது அது அவர்களுக்குக் கடினமான ஒன்றாகக் காணப்படும்.

எரிச்சல்கள்

அறிஞர்களின் ஆய்வுக் கருத்துக்கள் சைவ வைணவ மதத்தலை வர்கள், சைவ சித்தாந்திகள், கிறிஸ்தவ அறிஞர்கள், ஆகியோர் மத்தியில் முன்னால் கூறியபடி நிரூபிக்கப்பட்ட போதிலும் இக்கருத்துக்களை முதன்முதலாகக் கேள்விப்படும் போது சைவ வைணவர்கள் மற்றும் கிறிஸ்த வர்கள் ஆகிய இருபாலரான திராவிட மக்களுக்கும் ஆத்திரம் ஏற்படலாம். கிறிஸ்தவத்தைச் சைவ வைணவ மதங்களோடு இணைத்துக் கூறுவது கிறிஸ்தவர்களை எரிச்சலடையப் பண்ணக்கூடும். அவ்வாறு சைவ வைணவ மதங்கள் ஆதி இந்தியக் கிறிஸ்தவத்திலிருந்து உருவானவை

என்று கூறும் போது சைவ வைணவர்களை எரிச்சலடையப் பண்ணக் கூடும். ஏனென்றால் இந்த உண்மைகள் காலாகாலமாக உண்மை என்று நம்ப வைக்கப்பட்ட பொய்களுக்கு நேர்மாறானவைகளாகும்.

ஆத்திரம் வேண்டாம்; ஆற்றல் அடைவோம்

இந்நிலையில் உணர்ச்சிவசப்படாமல் இந்தச் சத்தியங்களைக் குறித்து அறிந்து கொள்ள முயற்சிப்பதே மேல். அப்படிப்பட்டவர்கள் இதை ஒரு சவாலாக எடுத்துக் கொள்ளலாம். இந்நூலில் தரப்பட்டுள்ள அறிஞர்களின் ஆய்வுக் கருத்துக்களுக்கு மறுப்புக்கள் இதுவரையிலும் எவராலும் நிரூபிக்கப்படவில்லை. மாறாக அனைத்துலகச் சைவ சித்தாந்த ஆய்வு நிறுவனத்தில் நடைபெற்ற கருத்தரங்கில் தருமை ஆதீனம் இருபத்தாறாவது குருமகா சன்னிதானம் ஸ்ரீலஸ்ரீ சண்முக தேசிக ஞான சம்மந்த பரமாச்சாரிய சுவாமிகள் அவர்கள் கருத்தரங்கின் முடிவில் டாக்டர். தெய்வநாயகம் அவர்களுக்குப் பொன்னாடை போர்த்திக் கவுரவித்தார்கள் என்றும் பார்த்தோம்.

சவாலாக எடுத்துக் கொள்வோம் :

இந்நிலையில் மேலும் ஏதாவது மாற்றுக் கருத்துக்கள் இருப்பவர்கள் இதை ஒரு சவாலாக எடுத்துக் கொண்டு தங்கள் மாற்றுக் கருத்துக்களை ஆய்வுகளின் அடிப்படையில் ஆதாரங்களுடன் Dr. தெய்வநாயகம் அவர்களைத் தெரியப்படுத்தித் தெளிவு பெற்றுக்கொள்ள வேண்டிக் கொள்ளப்படுகிறார்கள். ஏனென்றால் திராவிட மக்களின் ஆன்மீகச் சமுதாய விடுதலைக்கும், ஆதி இந்தியக் கிறிஸ்தவமாகிய சைவ வைணவ மதங்களின் விடுதலைக்கும் சத்தியத்தை அறிந்தே ஆக வேண்டும்.

எனவே, டாக்டர். தெய்வநாயகம் அவர்களை தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி கீழே தரப்பட்டுள்ளது.

டாக்டர். மு. தெய்வநாயகம் M.A., Ph.D.

278, கொன்னூர் நெடுஞ்சாலை, அயன்புரம், சென்னை - 600 023.

Ph : 91 - 44 - 2644 9032

(தலைவர், தமிழ்நாடு பிற்படுத்தப்பட்டோர், ஷெட்யூல்ட் வகுப்பினர், சமயச் சிறுபான்மையினர் உரிமைப் பாதுகாப்புப் பேரவை)

(ஆசிரியர், திராவிட சமயம் மாத இதழ்)

(நிறுவனர், திராவிட ஆத்மீக இயக்கம்)

பின்னிணைப்பு - I

R.S.S. -இன் இரகசியச் சுற்றறிக்கை

சுற்றறிக்கை : 411 / RO300311 / RSS003

(31-வது அத்தியாயத்தில் குறிப்பிட்டபடி இணைக்கப்படும் இரகசிய சுற்றறிக்கையின் நகல்)

உள்ளூர்த் தலைவர்களுக்கு

பழைய கடமைகளோடு புதிய கடமைகளும் இங்குத் தரப்படுகின்றன. சில மாற்றியமைக்கப்பட்டுள்ளன. நாட்டுப் பற்றுள்ளவர்களுக்கும், தொண்டர்களுக்கும் இவற்றைப் புகட்டுக. மாற்றுக் கருத்துகளைத் தலைமையகத்துக்குத் தெரிவிக்கவும். கீழ்க்காணும் அறிவுறுத்தல்களை உறுப்பினர்களுக்குத் தெரிவித்து விட்டு இச்சுற்று மடலை எரித்து விட வேண்டும்.

1. சுடு கருவிகளையும் வெடி மருந்துகளையும் திரட்டுவது வேகப் படுத்தப்பட வேண்டும்.

2. முகமதியர்களையும் அம்பேத்காரின் இயக்கத்தவரையும் எதிர்த்துப் போராடுவதற்கெனத் தாழ்த்தப்பட்டோரையும் பிற்படுத்தப்பட்டோரையும் வென்றெடுக்க வேண்டும்.

3. இந்துத்துவக் கொள்கை அதிகாரிகளிடம் வேகமாகப் பரப்பப்பட வேண்டும்.

4. மருத்துவர்களிடையே இந்துத்துவக் கொள்கையை எடுத்துச் சொல்ல வேண்டும். காலாவதியான பழைய மருந்துகளையும், போலி மருந்துகளையும் தாழ்த்தப்பட்ட, பழங்குடியினர், முகமதியருக்கும் தரும்படி அவர்களைத் தூண்ட வேண்டும். குருதிக் கொடை(இரத்த தானம்) தருவதென்னும் சாக்கில் தாழ்த்தப்பட்ட சாதியினருக்கும் சூத்திரருக்கும் பிறந்த பச்சிளம் குழந்தைகளுக்கு ஊசி வழியில் நஞ்சை ஏற்றி அக்குழந்தைகளை ஊனமாக்கவேண்டும்.

5. இந்து எதிர்ப்பு (பிராமண எதிர்ப்பு) நிகழ்ச்சிகளையும் போலி மதச் சார்பின்மை நிகழ்ச்சிகளையும் புறக்கணிக்கவும்.

6. தாழ்த்தப்பட்டோருக்கும், பிற்படுத்தப்பட்டோருக்கும் பிறந்த பச்சிளம் குழந்தைகள் இருக்குமிடங்களில் ஓம் என்றும் செய்சிறீராம் என்றும் ஒலிக்க வேண்டும்.

7. பிற்படுத்தப்பட்டோரும், தாழ்த்தப்பட்டோரும் பெருமளவில் வாழ்கின்ற பகுதிகளில் கள், சாராயம், போதைப் பொருட்கள், சூதாட்டம், பரிசு (லாட்டரி) சீட்டு விற்பனை முதலானவற்றைப் பெருக்குமாறு அவற்றை விற்பவரைத் தூண்ட வேண்டும். அரசு அலுவலகங்களில் சமயம் சார்ந்த சடங்குகளையும் வழிபாடுகளையும் ஊக்குவிப்பது மட்டுமல்லாது, புதிய கோவில்களைக் கட்டுவதையும் பழைய கோவில்களைப் புதுப்பிப்பதை யும் ஊக்குவிக்கவேண்டும். முகமதியரின் வழி பாட்டுத்தலங் களையும், இந்து அல்லாதோரின் கோவில்களையும் சூறையாட வேண்டும்.

8. தாழ்த்தப்பட்ட சாதிப்பெண்களையும் முகமதியப் பெண்களையும் பரத்தைத் தொழிலில் (வேசித் தொழில்) ஈடுபடுமாறு ஊக்குவிக்க வேண்டும்.

9. தொண்டர்களின் வழியாகவும், தின்பண்டம் விற்போரின் வழியாகவும் ஆசிரியரின் வழியாகவும் பள்ளிக்குச் செல்லும் தாழ்த்தப்பட்ட சாதிப் பிள்ளைகளுக்கு, குறிப்பாக அம்பேத்கார் இயக்கத்தின் பிள்ளைகளுக்கு நஞ்சு கலந்த தின்பண்டங்களைக் கொடுத்து அவர்களின் மன, உடல் வளர்ச்சியை முடமாக்க வேண்டும்.

10. நமது பள்ளிகளில் தாழ்த்தப்பட்ட, பழங்குடி மக்களின் பிள்ளைகளை அதிகமாகச் சேர்க்க வேண்டும். நாம் காட்டும் இந்து நெறிமுறைகளுக் கேற்ப அவர்களுக்கு வரலாற்றைக் கற்பிக்க வேண்டும்.

11. முகமதியர், அம்பேத்கார் இயக்கத்தினர், புத்த மதத்தவர்களுக்கு எதிரான கலவரங்களைத் தூண்டுவதை வேகப்படுத்த வேண்டும். நம்முடைய உறுப்பினர்கள் வாழும் இடங்களில் இருந்து தொலைவாக உள்ள இடங்களில் புதிய உள்ளூர் குண்டர்களைக் கொண்டு வந்து, அத்தகைய கலவரங்களைத் தூண்ட வேண்டும். இந்து எதிர்ப்பாளர்களைத் தாக்குமாறு காவல் துறையையும், ஆயுத படையினரையும் தூண்டி விட வேண்டும்.

12. இந்துக்களுடையதல்லாத சில வழிபாட்டுத் தலங்களுக்கு அருகில் சில படிமங்களையும் சிலைகளையும் மண்ணுக்கடியில் புதைத்து வைப்பது முன் போலவே தொடர வேண்டும். கிறித்துவக் கோவில்களும், முகமதியரின் தொழுகை(பள்ளி வாசல்) யிடங்களும் நினைவுத் தூண்கள் எல்லாம் பழைய இந்துக் கோயில்களே என மெய்ப்பிப்பதற்குத் தலைமையகத்தை அணுக வேண்டும்.

13. கலவரங்களின் போது முகமதிய, தாழ்த்தப்பட்ட சாதி பெண்களைக் கூட்டாகக் கற்பழிக்க வேண்டும். அந்நேரத்தில் நண்பரென்றும் பழக்க மானவரென்றும் ஈவு இரக்கம் பார்க்கக் கூடாது. இங்குச் சூரத் மாதிரியை பின்பற்ற வேண்டும்.

14. இசுலாமிய எதிர்ப்பு வெளியீடுகளையும் புத்தமத எதிர்ப்பு வெளியீடு களையும் வெளிக் கொணர்வதில் முனைப்புடன் இருக்க வேண்டும். அசோக மாமன்னன் புத்தன் அல்லன் என மெய்ப்பிப்பதற்குப் புதுப்புதுக் கட்டுக் கதைகளைப் புனைய வேண்டும்.

15. பிராமணீய எதிர்ப்பு இலக்கியங்களும் தாழ்த்தப்பட்டோர், அம்பேத்கார் இயக்கம், பொதுவுடைமை இயக்கச் செய்தி வெளியீடுகளும் அழிக்கப் பட வேண்டும். அத்தகைய இலக்கியங்கள் பொது நூலகங்களிலும் அரசு நூலகங்களிலும் நுழைய விடாமல் தடுப்பது தொடர்ந்து கொண்டிருக்க வேண்டும். அம்பேத்கார் பற்றிய நம்முடைய வெளியீடுகளைத் தாழ்த்தப் பட்ட பிற்பட்டோரிடம் பரப்ப வேண்டும்.

16. அறிவுறுத்தப்பட்டவாறே, தாழ்த்தப்பட்டோரிடமும் பழங்குடியினரி டமும் உள்ள தேக்க நிலை தொடர வேண்டும்.

17. இராமரின் உருவம் தாங்கிய பட ஒட்டிகளையும், நாட்காட்டிகளையும் துண்டுப் பிரச்சார வெளியீடுகளையும் பெருமளவில் பரப்ப வேண்டும்..

18. பிற்படுத்தப்பட்டோரிடையேயும், தாழ்த்தப்பட்டோரிடமும் மூட நம்பிக்கையைப் பரப்ப வேண்டும். அதற்காகச் சாமியார்களையும், சாதுக்களையும் தொடர்ந்து பயன்படுத்த வேண்டும்.

19. சைனர்களையும், பௌத்தர்களையும், சீக்கியர்களையும் இந்துக்களாக் குவது தொடர வேண்டும். சைனக் கோவில்களில் இராம வழிபாடு அறிமுகப்படுத்தப்பட வேண்டும். இதிலான முன்னேற்றத்தைத் தலைமையத்திற்குத் தெரிவிக்க வேண்டும்.

20. பொதுவுடைமை, பொதுவுடைமையர் தாழ்த்தப்பட்டோர், சூத்திரர்கள் ஆகியோருக்கு எதிரான தாக்குதல்கள் நடத்த வேண்டும்.

21. மண்டல் பரிந்துரைகளுக்கு எதிரான கிளர்ச்சியைத் தொடர வேண்டும்.

22. வெவ்வேறு சாதிகளுக்கு இடையில், குறிப்பாகத் தாழ்த்தப்பட்ட பிற்படுத்தப்பட்ட சாதிகளுக்கு இடையில், சாதிச் சண்டைப் பூசல்களைத் தூண்டி விட வேண்டும்.

23. சங்க மனு நீதி தொடர வேண்டும்.

24. தாழ்த்தப்பட்டவருக்கும் அம்பேத்காரியக்கத்திற்கும் எதிராகக் காதல் திருமணத்தை வரைமுறையின்றிக் கடை பிடிக்க வேண்டும். அவர் தம்

பெண்களுக்கு நம்முடைய ஆணுறுப்பைக் காட்டவும், அவர்களை முத்தமிடவும், அருவருக்கத்தக்க ஆபாசமான ஒளிப்படங்களை அவர்களுக்குக் காட்டவும் சிறு போதை மருந்துகளை அவர்கள் பயன்படுத்தும்படியும் செய்ய வேண்டும்.

25. தாழ்த்தப்பட்ட பழங்குடியினருக்கும் ஊட்டச்சத்து இல்லாமை நீடிக்க வேண்டும். முன் சொன்னது போலவே அவர்கள் அருந்தும் கள்ளிலும், சாராயத்திலும் நஞ்சைக் கலக்க வேண்டும். அவர்களின் உணவில் நஞ்சூட்டுவதும் மெதுவாகத் தொடர வேண்டும்.

26. செய்தி ஏடுகளின் மீதான நம்முடைய பிடிப்புகள் வலுப்படுத்தப்பட வேண்டும். இசுலாமிய எதிர்ப்பு, மண்டல ஆணை எதிர்ப்பு, இந்து ஆதரவு, இராம வழிபாடு ஆதரவுக் கட்டுரைகள் உள்ளூர் ஏடுகளில் மிகையாக வெளியிடும் வகையில் அந்த ஏடுகளின் ஆசிரியர்களை இந்துத்துவக் கொள்கைக்கு உட்படுத்த வேண்டும்.

27. இந்துத்துவக் கொள்கைக் கேற்ப இயங்கும் அரசியல் கட்சிக்குத் தாழ்த்தப்பட்ட சாதியினரிடமிருந்தும் பழங்குடியினரிடமிருந்தும் பிற்படுத்தப்பட்டவர்களிடமிருந்தும் பெருமளவில் உறுப்பினர்களைச் சேர்க்க வேண்டும். அவர்களை வடிகட்டி எடுப்பதற்கு வளமையான முறையைப் பின்பற்ற வேண்டும்.

28. முசுலிம் எழுத்தாளர்கள், இசுலாமிய மதத் தலைவர்கள் மண்டலறிக்கைக்கு எதிராகவுள்ள பிற்படுத்தப்பட்ட சாதி எழுத்தாளர்கள் ஆகியோரை வென்றெடுக்க வேண்டும். போலி மதச் சார்பின்மையென்னும் கருத்தாக்கத்தைப் பரவலாக ஆள வேண்டும்.

29. இந்துக்களல்லாதவர்கள், இந்து எதிர்ப்பாளர்கள், பிராமண எதிர்ப்பாளர்கள் ஆகியோரின் செயற்பாடுகளைத் தொடர்ந்து கண்காணித்து, அவர்களைப் பற்றிய செய்திகளைத் தலைமையகத்திற்குத் தெரிவிக்க வேண்டும்.

30. இந்து எதிர்ப்பாளர்களையும், பிராமண எதிர்ப்பாளர்களையும் கொல்லுவது தொடர்ந்து கொண்டிருக்க வேண்டும். அவர்களின் பிணங்களை முன்னர் அறிவுறுத்தியவாறே துப்புக் கிடைக்காத வகையில் அப்புறப்படுத்தி விட வேண்டும்.

31. தொண்டர்களின் வெள்ளுவாக் (பவுர்ணமி) கூட்டம் தொடர்ந்து நடைபெறட்டும்.

32. ஊதுவது (Whistle) தொடரட்டும் . செய்சிறீ ராம்

இரண்டாவதாகப் பிராமணச் சங்கத்தின் சுற்றறிக்கை கீழே கொடுக்கப் பட்டுள்ளது.

ஆரிய வர்ணாசிரம தர்மத்தில் சூத்திரர்கள் என்று குறிக்கப்பட்ட திராவிடப் பகுதியினர், இப்போது பிற்படுத்தப்பட்ட மக்கள் என்ற பிரிவிலும் பஞ்சமர்கள் என்று குறிக்கப்பட்ட மக்கள் இப்பொழுது ஹெட்யூல்டு வகுப்பினர் அல்லது அம்பேத்கார் இயக்கத்தினர் என்ற பிரிவுகளிலும், மதம் மாறிய திராவிடராகிய இஸ்லாமியரும், கிறிஸ்தவரும் மதச் சிறுபான்மையினர் என்ற பிரிவிலும் அடக்கப்பட்டுள்ளனர். இந்த மூன்று பகுதியினராக விளங்கும் திராவிடர்களை ஒடுக்குவதற்கும் அழிப்பதற்கும் ஆரியப் பிராமணர்கள் செய்கின்ற நடைமுறை சூழ்ச்சிகள் இரகசிய சுற்றறிக்கைகளாக வெளியிடப்பட்டிருக்கின்றன.

(வெளிவந்த பத்திரிக்கைகள் : விடுதலை-ஞாயிறு மலர் 26. 3.95; தமிழக பறையர் குரல் ஏப்ரல் 95; நமது உரிமை முரசு-ஏப்ரல் 95; திராவிட சமயம் ஜூலை 95)

மத்தியப் பிரதேசம் பாலகாட்
பிராமண சமாஜத்தின் இரகசியக் கடிதம்

அன்பு நண்பர்களே,

பிராமண சமாஜத்தின் மாவட்ட அளவிலான கூட்டம் ஆகஸ்டு 15 ஆம் நாள் பாலகாட்டில் நடைபெற்றது. ஜபல்பூரின் தலைசிறந்த புனிதர் திரு திரிவேதியின் தலைமையில் அது நடை பெற்றது. அக் கூட்டத்தில் கீழ்க் காணும் தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

1. பிற்படுத்தப்பட்ட வகுப்பார்களாகிய பவார், மாரர், லோடி, காசர் போன்ற சூத்திரர்களை மத சார்பான நிகழ்வுகளில் ஈடுபடுத்த வேண்டும். அப்போது தான் அரசியல் உரிமைகளில் தங்கள் கவனத்தைச் செலுத்தா மல், எப்போதும், அடிமைகளாகவும், பிராமண ஆதரவாளர்களாகவும் இருப்பார்கள்.

2. செட்யூல்டு வகுப்பினர், பழங்குடியினர், பிற்படுத்தப்பட்டவர், சமயச் சிறுபான்மையினர் போன்றவரிடையே வளர்ந்துள்ள அரசியல் விழிப்புணர்ச்சி, பிராமணீயத்தின் தலைமைக்கு அச்சுறுத்தலை உருவாக்கியுள்ளது. எனவே, அவர்களுக்குள் ஒரு குழப்பத்தையும் மோதலையும் ஏற்படுத்தினால் தான் தங்களுக்குள்ளாகச் சண்டையிட்டுக் கொண்டேயிருப்பார்கள்.

3. நாலாவது வருணத்தாராகிய சூத்திரர்களிடத்தில் சென்று, அரசியல் சட்டம் இந்துக்களுக்கு எதிராக அமைந்துள்ளது. என்றும் அதை மாற்ற வேண்டும் என்றும் நாம் கூற வேண்டும். இந்த விழிப் புணர்ச்சி உருவாக்கப்பட்டுப் பொது மக்களிடையே பரப்பபட வேண்டும்.

4. பிராமணீயத்தின் தலைமைக்கு ஆபத்து உருவாகியுள்ளதால் காங்கிரஸ், பி.ஜே.பி. கம்யூனிஸ்ட், சமுதாயம் மற்றும் மத அமைப்புகளில் உள்ள பிராமணர் ஒவ்வொருவரும் பிராமணீயம் என்ற பெயரில் ஒன்று சேரவேண்டும்.

5. தவறான குழப்பங்களைப் பவார், மாரர் லோடி போன்ற பிற்படுத்தப் பட்ட வகுப்பினரிடையேயும் செட்யூல்டு வகுப்பி னரிடையேயும் சமயச் சிறுபான்மையினரான முஸ்ஸிம்கள், கிறிஸ்தவர்கள், பௌத்தர்கள் ஆகியோரிடையேயும் உருவாக்கி அது பரவுமாறு செய்ய வேண்டும். இதனால் அவர்கள் ஒருவருக்கொருவர் சண்டையிட்டு மாண்டு அழியுமாறு செய்ய வேண்டும்.

6. கான்சிராமின் பகுஜன் சமாஜ் கட்சியின் அரசியலாலும் தலித் மக்களிடையே ஏற்பட்டுள்ள விழிப்புணர்ச்சியினாலும் பிராமணீயத்தின் தலைமைக்கு அச்சுறுத்தல் ஏற்பட்டுள்ளது. இதை எதிர்ப்பதற்கு இக்கட்சி மகர்களுக்கும் (Mahars) சாமர்களுக்கும் (Chamars) மட்டுமே உரியது என்று மக்களிடம் சொல்ல வேண்டும். அப்போது தான் பிற சிறு சிறு சாதிகள் அதில் சேர்ந்து விடாமல் இருக்கும்.

7. செட்யூல்டு வகுப்பினர், பிற்படுத்தப்பட்டவர், முஸ்லிம்கள் ஆகிய தொழிலாளர்கள் தங்கள் உடம்பில் கொழுப்பைச் சேர்த்து வைத்துள்ளனர். எனவே, அவர்களின் உடலும் உள்ளமும் சித்திரவதை செய்யப்பட வேண்டும். அவர்களுக்கு மேலே உள்ள பிராமண அதிகாரிகள், அலுவலகச் செயற்பாடுகளையும் பிற பணிகளையும் இரகசியமாகச் செய்து அவர்களை மிகவும் இழிவுபடுத்த வேண்டும்.

8. இட ஒதுக்கீட்டை, செட்யூல்டு வகுப்பு மக்கள் தவறாகப் பயன் படுத்துவதால் தான் கீழ்ச் சாதியைச் சேர்ந்த வேலையில்லா இளைஞர் களுக்குக் கிடைக்க வேண்டிய வேலை வாய்ப்பு கிடைக்கவில்லை என்று உயர் பதவி வகிக்கும் பிராமணர்கள், கீழ்ச்சாதி இளைஞர்களிடம் பரப்ப வேண்டும். அப்போது தான் அவர்கள் தங்களுக்குள்ளாக எப்போதும் சண்டை போட்டுக் கொண்டே இருப்பார்கள்

9. பிராமணர்கள் தங்களையும் பிராமணீயத்தையும் பாதுகாப்பதற்காக ஒரே மேடையில் சேரவில்லையென்றால் அது வெட்கப்படுவதற்கும் சாவதற்கும் ஏதுவானதாகும். அதோடு தீண்டத்தகாவர்களுக்கு அடிமை களாக மாறியும் விடுவார்கள். எனவே, பிராமணர்களையும் அவர்கள் கொண்டுள்ள நாட்டின் தலைமையையும் காப்பாற்றுவதற்காக எல்லாச் சூழ்ச்சிகளையும் கையாள வேண்டும்.

10. பிராமணர்களைப் பாதுகாக்கும் கவசமாக விளங்கும் பிற்படுத்தப்பட்ட மக்களை ஜெய்ஸ்ரீராம் என்ற மந்திரத்தை உச்சரிக்கச் செய்து அவர்களை

முன்னணியில் வைத்திருக்க வேண்டும். காயத்திரியக்ளும், பிரமகுமாரி நிறுவனம், சிரித்தி சத்ய சாய் போன்ற மதச் செயற்பாடுகள் மூலம் அவர்களைக் குழப்பிக் கொண்டேயிருக்க வேண்டும். 'சிவ பத்ரா' என்பதன் மூலம் பௌத்தர்களை குழப்ப வேண்டும்.

11. காந்தியம் என்பது பிராமணீயம் அம்பேத்காரிசம் நாட்டில் வளர்ந்தால் பிராமணீயம் அழிந்து விடும். ஆர்.எஸ்.எஸ்ஸின் தலைசிறந்த மனிதர் களான டாக்டர் ஹெட்கோவார் , கோல்வால்கர் குருஜி போன்றவர் களின் பெயர்களைப் பயன்படுத்த ஒருவரும் இருக்கமாட்டார். எனவே, அவர்களின் ஒவ்வோர் அமைப்பினுள்ளும் ஊடுருவி, இரகசியமாக அவர்களின் செயற்பாடுகளை அறிந்து அவர்களின் ஒவ்வொரு திட்டத்தையும் வீழ்த்த வேண்டும்.

12. பிராமணீயத்தை உயிருள்ளதாக வைத்திருக்க வேண்டுமானால், பிற்படுத்தப்பட்ட வகுப்பு இளைஞர்களிடம் மத உணர்ச்சிகளையும் நம்பிக்கைகளையும் தூண்டி அவர்களைக் குழப்பி, செட்யூல்டு வகுப்பினரோடு விரோதத்தையும் சண்டையையும் உருவாக்க வேண்டும். அப்போது தான் பிராமணர்களின் பிள்ளைகளும் தங்கள் ஆதிக்கத்தை அரசாங்க ஆட்சியமைப்பிலும் அரசியலிலும் கட்டிக்காக்கமுடியும்.

13. பிராமணீயத்தை பாதுகாக்கப் பிராமணப் பெண்கள் தங்களை அர்பணித்து பிராமணீயத்தைப் பாதுகாப்பது மிகவும் இன்றியமையாதது. பிராம ணனைப் பாதுகாக்க ஒரு பிராமணப் பெண் முன்வந்தால் மனுஸ்மிருதி யின் படி அவர்களுக்குப் புண்ணியம் கிடைக்கும்.

நண்பர்களே, இவை அனைத்தும் இரகசியமாகச் செயற்படுத் தப்பட வேண்டும். இந்த கடிதம் கீழ்சாதிக்காரர்களின் கைகளில் சிக்கி விடக்கூடாது. இது இரகசியக் கடிதம்.

தலைவர்
மாவட்ட அளவிலான பிராமண சமாஜம் பாலக்காட்
(Mulnivasi Times VO1. No.1/No.1,
Jan 95 D.K. Kahaparde)

இணைப்பு - II

கருத்தரங்கு மாநாட்டின் அணி உறுபினர்கள்

1. டாக்டர் சி. பாலசுப்பிரமணியம், அவர்கள் M.A., M.Lit.Ph.d., தமிழ் விரிவுரையாளர், சென்னை பல்கலைக்கழகம்

2. பண்ணாராய்ச்சி வித்தகர். பேராசிரியர் பி. சுந்தரேசனார் அவர்கள்

3. திரு. ஜீவபந்து D.S. ஸ்ரீபால் அவர்கள், தலைவர். தென்னிந்திய ஜீவ பிரசாரகர் சபை, சென்னை

4. பேராசிரியர் வி.பா.கா. சுந்தரம் M.A. அவர்கள் இறையியற் கல்லூரி, மதுரை

5. செல்வி. ப. தமிழ்ச்செல்வி M.A அவர்கள் பேராசிரியை, ஆக்சிலியம் கல்லூரி, காட்பாடி விரிவு

6. டாக்டர். என். சுப்பு ரெட்டியார் அவர்கள் M.A., Ph.D தமிழ்த்துறை, திருவேங்கடத்தால் கல்லூரி, திருப்பதி

7. டாக்டர். ஞானப்பிரகாசம் அவர்கள் M.A., Ph.D தமிழ்த்துறை, லயோலா கல்லூரி, சென்னை

8. பேராசிரியர் லெ.ப.கரு. இராமநாதன் செட்டியார் அவர்கள் சென்னை

9. பேராசிரியர் கே.எஸ். மகாதேவன் அவர்கள் M.A. மாநிலக் கல்லூரி, சென்னை

10. தத்துவக் கவிஞர் குடியரசு அவர்கள், சென்னை

11. டாக்டர் மு. கோவிந்தசாமி அவர்கள் M.A., M.Lit., Ph.D துணைப்பேராசிரியர், அண்ணாமலைப் பல்கலைகழகம்

12. புலவர் மு. சண்முகம்பிள்ளை அவர்கள் திருக்குறள் ஆராய்ச்சித்துறை, சென்னைப் பல்கலைக்கழகம்

13. பேராசிரியர் பொன் ஆ. சத்திய சாட்சி அவர்கள் M.A., MOL கிறிஸ்தவக் கல்லூரி, தாம்பரம்

14. பேராசிரியை சரசுவதி இராமநாதன் அவர்கள் M.A. சீதாலட்சுமி கல்லூரி, பள்ளத்தூர்

15. பேராசிரியர் இ.சு. முத்துசாமி அவர்கள் M.A. B.D மாநிலக் கல்லூரி, சென்னை

16. டாக்டர் இரா. சாரங்கபாணி அவர்கள் M.A., M.Lit., Ph.D தமிழ் விரிவுரையாளர், அழகப்பா கல்லூரி, காரைக்குடி

17. வித்துவான் வை. இரத்தின சபாபதி அவர்கள், P.O.L., M.A தத்துவத்துறை, அண்ணாமலைப் பல்கலைக்கழகம்

18. மகாவித்வான் ச. தண்டபாணி தேசிகர் அவர்கள்

19. ஆராய்ச்சி அறிஞர் மயிலை சீனி - வேங்கடசாமி அவர்கள், சென்னை

20. வித்வான் வி.பி. நடராசன், பசுமலை, மதுரை

21. பேராசிரியர் புலவர் நன்னன் அவர்கள் M.A. தமிழ்த்துறைத் தலைவர், கலைக்கல்லூரி, சென்னை

22. பேராசிரியர் மோசசு பொன்னையா அவர்கள் M.A. தமிழ்த்துறைத் தலைவர், அமெரிக்கன் கல்லூரி, மதுரை

23. திரு. சு.மி. டயசு அவர்கள் ஐ.பி.எஸ்., டி.ஐ.ஜி. அலுவலகம் சென்னை

24. திருவாட்டி சாரதா நம்பியாரூரன் அவர்கள் M.A. மேரி அரசியார் கல்லூரி, சென்னை

25. பேராசிரியர் சோம இளவரசு அவர்கள் M.A. தமிழ் விரலிவுரையாளர், அண்ணாமலைப் பல்கலைகழகம்

26. பேராசிரியர் க.த. திருநாவுக்கரசு அவர்கள் M.A. (தமிழ்) M.A. (வரலாறு) M.Lit. திருக்குறள் ஆராய்ச்சித்துறை, சென்னைப் பல்கலைக் கழகம்

27. டாக்டர் இராம. பெரிய கருப்பன் அவர்கள் M.A., Ph.D தமிழ்த்துறை, மதுரை பல்கலைக்கழகம்

28. டாக்டர் எம். இஸ்ரவேல் அவர்கள், M.A., Ph.D தமிழ்த்துறை, மதுரைப் பல்கலைக்கழகம்

29. புலவர் க. வெள்ளை வாரணனார் அவர்கள் அண்ணாமலைப் பல்கலைக் கழகம்

30. பேராசிரியர் எழில் முதல்வன், M.A., மாநிலக் கல்லூரி, சென்னை

BIBLIOGRAPHY

1. The Reese Chronological Bible
2. History of Christianity in India. Source materials - M.K. Kuriakose
3. An Introduction to Church History - F. Hrangkhuma
4. History of the Christian Church - Henry C. Sheldon
5. Church History - John Foster
6. Highlights of Church History - Howard F.vos
7. After the Apostles - John Foster
8. The Development of Civilization and Religion in India and Its Influence on the world Society - Dr. Alexander Harris
9. Christianity in Hinduism - Dr. M. Deivanayagam, M.A., Ph.D., Dr. D. Devakala M.A.Ph.D
10. Comparative Religion - Kedar nath Tiwavi
11. Assian Religions - Geoffrey parrinder
12. Bharatheeya Matha Samgraham - R. Krishnan Kuttiy
13. International Racisism is the child of Indians Castisim A Historical Perspetive and on an appeal to UNO - டாக்டர் மு. தெய்வநாயகம் மற்றும் டாக்டர் தெ. தேவகலா
14. தமிழப் பக்தி இயக்கத்தின் தோற்றமும் வளர்ச்சியும் - டாக்டர் தெ. தேவகலா
15. திருக்குறள் ஆராய்ச்சி நூல்கள் - டாக்டர் மு. தெய்வநாயகம்
16. உண்மையான கிறிஸ்தவச் சின்னம் எது? - டாக்டர் மு. தெய்வநாயம்
17. இந்தியா தோமாவழி திராவிடக் கிறிஸ்தவ நாடே ..... எவ்வாறு? டாக்டர் தெ. தேவ கலா
18. சிவஞான போதம் உரை - டாக்டர் மு. தெய்வநாயகம்
19. திருக்குறள் புத்தாய்வு - டாக்டர். இரா. அருளப்பா
20. திருநீறா? சிலுவையா? - டாக்டர் மு. தெய்வநாயகம்
21. சுருதி இலக்கியம் - அறிவர். ச. கங்காதரன்
22. புத்த சமயம் - எம். ஏ. இரத்தின ராஜா

23. சிந்துவெளி தொல் தமிழ் நாகரிகம் - பி. இராமநாதன்

24. விவிலியம் திருக்குறள் சைவசித்தாந்தம் ஒப்பாய்வு - டாக்டர். மு. தெய்வநாயகம்

25. கிறிஸ்துவமும் தமிழும் - மயிலை சீனி வேங்கடசாமி

26. சங்கரமடத்தோடு போராட வேண்டியது ஏன்? - டாக்டர் மு. தெய்வநாயகம்

27. இந்தியா ஒரு கிறிஸ்தவ நாடு - சுந்தர் யேசுவடியான்

28. சங்கரமடத்துக்கு 108 கேள்விகள் - டாக்டர் மு. தெய்வநாயகம் M.A., Ph.D

29. இந்து நாகரிகமா - நயவஞ்சகமா? அம்பேத்கார்.

30. இந்துத்துவாவின் பிடியிலிருந்து இந்துமதத்தை விடுவிப்பது எவ்வாறு? டாக்டர் மு. தெய்வநாயகம்

31. திருக்குறள் - டாக்டர் ந. சுப்பு ரெட்டியார்

32. மெஹஞ்சொதாரோ அல்லது சிந்துவெளி நாகரிகம் - டாக்டர். திரு. மா. இராசமாணிக்கனார்

33. தமிழர் சமயம், தமிழர் வேதம், தமிழகத்துக் கோயில்கள் - யு. சுப்ரமணியன் ஐ.ஏ.எஸ்

34. தோமா வழி ஆதி இந்தியக் கிறிஸ்தவம் - முனைவர். யா.தா. பாசுகரதாசு

35. பரிசுத்த வேதாகமத்துணைநூல் - M. கிறிஸ்டோபர்

36. Christian Hindu Interaction in Tamil Sangam Literature - Pr. T. Sam

37. Thirukkural and its Central thought - Most Rev. Dr. R. Arulappa

38. திராவிட சமயம் பத்திரிக்கை

வெளியிடப்பட்டுள்ள மற்று புத்தகங்கள் :-

1. **பரிசுத்த வேதாகமத் துணை நூல்**
2. **கர்த்தரின் நாள்**
   (இயேசுவின் இரண்டாம் வருகை)
3. **விவிலிய பாதை**
   (ஏதேன் முதல் எருசலேம் வரை)
4. **(உலகப் பெருமதங்களில்)**
   ஒரு புதையுண்ட வரலாறு
5. **(யுகா யுகங்களில்)**
   சாத்தானுடைய போராட்டங்கள்
6. **Love Hindus**
7. **குமாரனாகிய இயேசு**
8. **திருக்குறள்: அடிப்படை கிறிஸ்தவமே**

Copies can be had from :

Bible Institute, Gems Complex, Kalluketty,
Kuzhithurai - 629 163. Ph : 04651 - 260354, 260404.

Diocesan Book Depot
Nagercoil. Ph : 04652 - 230395

Shalom Bible Books
Nagercoil. Ph. 04652 - 225406.

Word of Christ
Green Ways Road, Chennai. Ph : 044 - 24616161.

Word of Christ
Madurai. Ph : 0452 - 2536240.

E.L.S. Head Office
Vepery High Road, Chennai. Ph. 044 - 25323231.

Living Voice
Palayamkottai. Ph. 0462 - 2502098.

Bible Book Club
Palayamkottai. Ph : 0462 - 2586784.

Gem India Honey Complex
Mogapair, Chennai. Ph. 044 - 26521326.

Also available in all
Leading Christian Book Stalls in Tamil Nadu.

ஆசிரியர் விலாசம் :–

M. கிறிஸ்டோபர், M.A., L.L.B.
பெனாயா, கல்லுக்கெட்டி, குழித்துறை – 629 163,
குமரி மாவட்டம். **Ph. 04651 - 260404.**

கிறிஸ்தவ சின்னங்கள்

ஐரோப்பியவழி கிறிஸ்தவம்

சிலுவை சின்னம்...?

குமாரன் சிலுவையில் பலியானதைக் காட்ட.

ஆதி இந்தியக் கிறிஸ்தவம் என்ற சைவ வைணவம்

திருநீறு
சந்தனம்
குங்குமம்

திருநீறு விவிலியத்தில்தான் ஆரம்பம்! எண். 19

- திருநீறு மூன்று கோடுகள்...?
  பிதா, குமாரன், பரிசுத்த ஆவியைக் காட்ட.
- மையக் கோட்டில் சந்தனம்...?
  குமாரன் மரத்தில் பலியானதைக் காட்ட.
- சந்தனக்குறியில் குங்குமப் பொட்டு...?
  குமாரன் மரத்தில் இரத்தம் சிந்தியதைக் காட்ட.

Gems, Gems Complex, Kallukatty, Kuzhithurai - 629 163
Kanyakumari District. Ph: 260404